374

374

HISTORY OF INDIA

FOR

STANDARD VIII

(TAMIL)

15 DEC 1944
MADRAS

BY

K. M. SUBRAMANIAM, M.A., L.T.

2773

THE MADRAS PREMIER CO.
EDUCATIONAL PUBLISHERS
MADRAS
1944

ANNAS 0-10-0

இந்து தேச சரித்திரம்

எட்டாவது வகுப்புக்குரியது

[துரைத்தனத்தார் 1939-ம் வருஷம் வெளியிட்டுள்ள பாட திட்டத்தை யொட்டித் தயாரிக்கப்பட்டது]

15 DEC 1944

2773

க. ம. சுப்பிரமணியம், எம்.ஏ., எல்.டி.

954

மதராஸ் பிரீமியர் கம்பெனி
11, ராதாகிருஷ்ணன் தெரு,
தியாகராயநகர், : மதராஸ்

1944

பதிப்புரிமை] [விலை அணா 12

First Impression 1939
Reprint 1940.
" 1944

V44

Copyright reserved by the Publishers

Printed at the Rajan Electric Press, Madras.

15 DEC 1944

முகவுரை

துரைத்தனத்தார் சமீபத்தில் வெளியிட்டுள்ள பாட திட்டத்தை அநுசரித்து இவ் விந்து தேச சரித்திரப் புத்தகங்கள் தயாரிக்கப் பெற்றன. இவை சிறுவர்களுக்கு ஏற்ப எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதுடன், அவர்களுக்கு இவற்றைப் படிப்பதில் ஆர்வம் அதிகரிக்கும்படி ஏற்ற சித்திரப் படங்கள் ஆங்காங்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர்களுக்குத் தேச பக்தியை ஊட்டி, நமது முன்னோர்களின் பெருமையை அவர்களுக்குத் தெரியும்படி விளக்குவது சரித்திர பாடத்தைக் கற்பிப்பதன் நோக்கங்களில் முக்கியமானது.

தவிர, சமுகச் செய்திகளும், பொருளாதாரச் செய்திகளும், சமயச் செய்திகளும் தேச சரித்திரத்தில் இடம் பெறவெண்டும். இப் பல்வகைச் செய்திகளையும் தொடர்புற வைத்து நோக்கு முறையும் மிக முக்கிய மானதாகும். இந்நோக்கு முறையே கற்போர் அடையவேண்டும் பல நன்மைகளுக்கும் அடிப்படையாகும். இந்நோக்கங்களைக் கொண்டே இச்சரித்திரப் புத்தகங்கள் எழுதப்பெற்றுள்ளன.

மாணவருலகம் இந்நூற் றொகுதியால் ஒரு சிறிது பயன் எய்தப்பெறினும் அதுவே யாம் ஏற்றற்குரிய கைம்மாறாகும்.

சென்னை
30—10—39

மதராஸ் பிரீமியர் கம்பெனி

SYLLABUS

History of India for Standard VIII.

Revision of British period done in standard VII from Warren Hastings.

Annexation of Coorg and Mysore under Lord William Bentinck.

Reconstruction and Internal Reforms. Modern Education.

Raja Ram Mohan Roy and his work.

The Afghan War; annexation of Sindh.

Lord Hardinge; the Sikh War.

Lord Dalhousie; doctrine of Lapse; annexations.

Development of railways and the telegraph.

Lord Canning. The Great Indian Mutiny.

The Queen's Proclamation.

India under the Crown—

- Lord Canning the First Viceroy—Internal peace and reforms.
- Lord Mayo—Financial Reforms.
- The Second Afghan War.
- Lord Ripon; the beginning of Local Self-Government.
- Lord Curzon; the era of administrative changes.
- The frontier policy.
- The Minto-Morley Reforms.
- India and the Great War.
- Montague-Chelmsford Reforms—the beginning of the responsible Government.
- The growth of the National Movement.
- The Round Table Conferences.
- Political Reforms of 1935.

16 DEC 1944
MADRAS

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	இந்தியாவில் ஆங்கில இராஜ்ய அபிவிருத்தி ...	1
2.	லார்டு வில்லியம் பெண்டிங்கு	29
3.	எல்லைப்புறப் பிரச்னை	39
4.	சீக்கிய யுத்தம்	45
5.	டெல்ஹௌஸி பிரபு	51
6.	கானிங் பிரபு—சிப்பாய்க் கலகம்	61
7.	மகாராணியாரின் விளம்பரம்	65
8.	ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி I ...	68
9.	ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி II ...	74
10.	ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி III ...	80
11.	ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி IV ...	87
12.	எல்லைப்புற விஷயம் ...	90
13.	மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள் ...	95
14.	இந்தியாவும் மகாயுத்தமும் ...	100
15.	மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்	105
16.	இந்திய தேசிய இயக்கம்	110
17.	வட்டமேஜை மகாநாடுகள்	116
18	1935-ம் வருஷத்திய அரசியல் சீர்திருத்தங்கள்	118
	அநுபந்தங்கள்	126

இந்து தேச சரித்திரம்

எட்டாவது வகுப்புக்குரியது

1. இந்தியாவில் ஆங்கில இராஜ்ய அபிவிருத்தி

(1772-1823)

வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு இந்தியாவுக்கு வந்த ஆங்கில வியாபாரிகள் நாட்டில் அமைதி குறைந்திருந்த காரணத்தாலும், பிரெஞ்சு வியாபாரக் கம்பெனியின் போட்டியைத் தடுக்க வேண்டிய காரணத்தாலும் பற்பல சண்டைகளில் கலந்து கொள்ள வேண்டிவந்ததென்று நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஆங்கில இராஜ்யத்திற்கு அடிகோலிய கிளைவ் பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிய காலத்தில் சென்னை மாகாணத்தின் பெரும்பாகத்திலும், வங்காளத்திலும் ஆங்கில ஆதிக்கம் பரவி இருந்தது.

1. கிளைவ்

2. இந்தியா 1765

வாரன் ஹேஸ்டிங்ஸ்

கிளைவ் இங்கிலாந்து சென்றபின் தென்னாட்டில் ஹைதர் செய்த யுத்தங்களாலும், வங்காளத்தில் நேர்ந்த கொடிய பஞ்சத்தாலும் ஆங்கிலேயரின் நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது. அவர்களுடைய செல்வாக்கும் குறையத் தலைப்பட்டது. இந்த

நிலைமையில் கி. பி. 1772-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் இந்தியாவுக்குப் புதிதல்ல. முன்பே இவர் கிழக்கு இந்தியக் கம்பெனியில் குமாஸ்தா முதல் பல உத்தியோகங்களையும், சென்னையில் கவுன்சில் அங்கத்தினர் பதவியையும் வகித்து வந்திருந்தபடியால் இந்திய நிலைமையையும், இந்திய மன்னர்களின் போக்கையும், இந்திய மக்களின் வாழ்க்கை முறைகளையும் இவர் நன்கு அறிவார்.

3. வாரன் ஹேஸ்டிங்ஸ்

சீர்திருத்தங்கள் :—இவர் கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டதும் கம்பெனியின் ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் கிளைவ் ஏற்படுத்தியிருந்த ஏற்பாட்டை நீக்கிவிட்டுப் புதிய வரி வசூல் திட்டம் ஏற்படுத்தினர். ஜில்லா கலெக்டர்களை நியமித்து அவர்கள் வரி வசூலையும், நியாயம் வழங்குவதையும் கவனிக்கும்படி செய்தார். கல்கத்தாவில் ரெவின்யூ போர்டு ஒன்றை ஸ்தாபித்தார். ஒவ்வொரு ஜில்லாவிலும் நியாயம் வழங்குவதற்காகச் சிவில், கிரிமினல் கோர்ட்டுகளையும் கல்கத்தாவில் அப்பீல் கோர்ட்டுகளையும் ஏற்படுத்தினர். இந்துக்களுக்கும், முகம்

மதியர்களுக்கும் அவரவர்கள் மதக் கோட்பாடு களின்படி நியாயம் வழங்கினர்.

இந்திய மன்னர்களுடன் சம்பந்தம்:—முகலாய சக்கரவர்த்தி பக்ஸார் உடன்படிக்கையின்படி கோரா, அலகாபாத் ஜில்லாக்களைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்திருந்தார். இதற்குப் பதிலாக ஆங்கில வியாபாரக் கம்பெனியார் அவருக்கு வருஷவாரியில் 26 லக்ஷம் ரூபாய் கொடுத்து வந்தார்கள். ஆனால் டில்லிச் சக்கரவர்த்தி மஹாராஷ்டிரருடைய உதவியைப் பெற்று டில்லியில் மறுபடி ஆட்சி புரியச் சென்று விட்டபடியால் ஹேஸ்டிங்ஸ் 26 லக்ஷம் ரூபாய் கொடுப்பதை நிறுத்திவிட்டு அயோத்தி நவாபுடன் பனாரஸ் (காசி) பட்டணத்தில் கி. பி, 1773-ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அயோத்தி நவாப்பு கோரா, அலகாபாத் ஜில்லாக்களைப் பெற்றுக்கொண்டு கம்பெனியாருக்கு 50 லக்ஷம் ரூபாய் கொடுத்துவிடுவதாகவும் அயோத்தியில் ஆங்கிலச் சேனை ஒன்றை வைத்துக் கொண்டு, அதன் செலவுக்கான பணத்தைக் கொடுத்துவிடுவதாகவும் ஒப்புக் கொண்டார்.

பிறகு அயோத்தி நவாபுக்கும் ரோஹில்லர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் நவாப்புக்குத் துணை புரிந்து ரோஹில்லர்களைத் தோற்கடித்தார்.

சீர்திருத்தச் சட்டம் :—இந்தியாவில் ஆங்கில வியாபாரக் கம்பெனியார் அரசுபுரிவது கூடாதென்றும்,

அந்த இராஜ்யத்தை ஆங்கிலநாட்டுத் துரைத்தனத்தார் தாமே வகித்து நடத்த வேண்டுமென்றும் இங்கிலாத்தில் பலர் அபிப்பிராயப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனியார் ஆங்கில துரைத்தனத்தாரிடம் 10 லக்ஷம் ரூபாய்கள் கடன் வேண்டி நிற்க அவர்கள் பார்லிமெண்டில் புதியதொரு சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினர்கள். இந்தச் சட்டப்படி கம்பெனியின் எஜமானராகிய சங்கம் ஆங்கில துரைத்தனத்தாருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். வக்காளக் கவர்னர், கவர்னர் ஜனரல் என்ற பெயருடன் சென்னை, பம்பாயிலுள்ள கவர்னர்களுக்கு மேல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கவனர் ஜனரல் எல்லா விவகாரங்களிலும் தமது மந்திராலோசனை சபையின் பெரும்பான்மையோர் அபிப்பிராயத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். கல்கத்தாவில் ஒரு பிரதான நியாயஸ்தலம் ஏற்பட்டது.

இந்தச் சட்டம் நிறைவேறிய பின்னர் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜனரல் ஆனர். ஆனல் அவர் நிலைமை மாத்திரம் கேவலமாயிற்று. அவருடைய மந்திராலோசனை சபை அங்கத்தினர்கள் அவருடன் ஒத்துழைக்கவில்லை. அவர்களுடன் சண்டை சச்சரவுகளும், அபிப்பிராய பேதங்களும் அதிகமாகவே வாரன் ஹேஸ்டிங்ஸ் நமது இஷ்டப்படி நடக்க முடியாமலிருந்தது.

முதல் மகாராஷ்டிர யுத்தம் :—பூனவில் பீஷ்வாக்கள் அதிகாரம் செலுத்தி வந்தனரல்லவா ? பீஷ்வா

வின் பதவிக்காக ரகுநாதராவுக்கும், நாஜபத்ந விஸ் என்பவருக்கும் சச்சரவு ஏற்பட்டது. ரகுநாத ராவ் பம்பாய் கவர்னர் உதவியை நாடவும் அவர் கவர்னர் ஜனரல் உத்தரவில்லாமலே சூரத்தில் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டார். இதனால் ரகுநாத் ராவ் பீஷ்வா என்றும், அவருக்குத் துணை புரிவதற்காக அவர் ஆங்கிலேயருக் குச் சால்செட், பெஸ் ஸீன் என்னுமிடங் களைக் கொடுக்கவேண்டு மென்றும் ஏற்பட்டது.

4. நாஜ பத்நவிஸ்

இந்த நிலைமையில் கவர்னர் ஜனரல் புரந்தர் என்னுமிடத்தில் நாஜ பத்நவிஸ் என்பவருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால் இங்கிலாந்திலுள்ள அதிகாரிகள் சூரத் உடன்படிக் கையையே ஆமோதித்தரர்கள். இதன் பயனாக மஹாராஷ்டிரருக்கும், ஆங்கிலேயருக்கும் கடும் போர் மூண்டது. ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். சால்பாய் என்னுமிடத்தில் 1782 - ல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. ஆங்கிலேயருக்குச் சால் செட் கிடைத்தது. ரகுநாத் ராவ் உபகாரச் சம்பளம் பெற்றுப் பீஷ்வா பதவியினின்றும் விலகினர்.

இரண்டாவது மைசூர் யுத்தம் :- ஆங்கிலேயர் மஹாராஷ்டிரரோடு போர் புரிந்துவரும் காலத்தில் தென் இந்தியாவில் ஹைதர் அலியோடு சண்டை செய்ய நேரிட்டது. இதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதல் மைசூர் யுத்தம் முடிவடைந்த காலத்தில் ஆங்கிலேயர் ஹைதரலிக்குத் துணை புரிவதாக வாக்களித்து இருந்தனர். மஹாராஷ்டிரர் ஹைதரைத் தாக்கவும் அவர் ஆங்கிலேயருடைய உதவியை நாடினர். ஆனால் ஆங்கிலேயர் உதவி செய்யாமலிருந்து விட்டனர். மேலும் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தம் தொடங்கவே மேற்குக் கரையோரத்தில் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான மாஹீ என்னும் துறைமுகத்தை ஆங்கிலேயர் பிடித்துக் கொண்டனர். இதனால் மைசூரின் வியாபாரம் பாதிக்கப்படும் என்பது ஹைதரின் வாதம். ஆகையால் ஹைதர் அலி கர்னாடகத்தின் மீது படை எடுத்து வந்து சென்னைக்குச் சமீபம் வரையிலும் வந்து விட்டார். பிறகு மலையாளப்

5. ஹைதர் அலி

பிரதேசத்திலும் சண்டை நடைபெற்றது. சண்டை நடந்துகொண்டிருக்கும் காலத்தில் ஹைதர் இறந்துவிட்டார். அவருடைய குமாரன் திப்பு ஆங்கிலேயருடன் மங்களூரில் 1782-ல் சமாதானம் செய்துகொண்டார். அதன் பிரகாரம் அவரவர்கள் பிடித்துக்கொண்ட பிரதேசங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் தொடுத்த யுத்தங்களினால் செலவு அதிகரித்தது. கம்பெனியில் பணம் வறண்டு விட்டபடியால் இவர் அயோத்தி நவாப் கொடுக்க வேண்டிய பணத்திற்காக, அயோத்தி பேகம்களை மிகவும் துன்புறுத்தி அப்பணத்தை வசூலித்தார்.

இந்த யுத்தங்கள் நடைபெற்ற பின்னர் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது பதவியிலிருந்து விலகி இங்கிலாந்துக்குச் சென்றார். ஆனால் அவர் இந்தியாவில் செய்து வந்த காரியங்கள் தவறானவை என்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு பார்லிமெண்டு சபையில் நீண்ட விசாரணை யொன்று நடைபெற்றது. கடைசியாக அவர்மீது குற்றம் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

காரன்வாலிஸ் பிரபு (1784-1793)

பிட் இந்தியா சட்டம் :-கி. பி. 1773-ல் செய்யப்பட்ட ஒழுங்கு முறைச் சட்டத்தினால் கவர்னர் ஜனரலுக்கும் அவருடைய மந்திராலோசனை சபை அங்கத்தினர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன அல்லவா?

இந்தியாவில் கம்பெனியார் புரிந்து வந்த ஆட்சியை ஒழுங்கு படுத்த இங்கிலாந்தில் முதன் மந்திரியாயிருந்த வில்லியம் பிட் என்பவர் 1784-ல் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றி வைத்தார்.

6. காரன்வாலிஸ்

இந்தச் சட்டத்தின் படி இங்கிலாந்தில் கம்பெனியின் எல்லா விவகாரங்களையும் கவனித்து வர மேல் அதிகாரச் சபையொன்று பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பட்டது. அச் சபையின் அனுமதியின் பேரில்தான் கம்பெனியார் தமது விவகாரங்கள் யாவையும் நடத்தவேண்டும். இந்தியாவில் கவர்னர் ஜனரலின் அதிகாரம் பெருக்கப்பட்டது. கவர்னர் ஜனரலின் சபையிலும், மாகாண கவர்னர்கள் சபைகளிலும் அதிக அங்கத்தினர்கள் இருந்ததைக் குறைத்து மூன்று அங்கத்தினர்கள் மாத்திரமே போதுமென்று திட்டம் செய்யப்பட்டது.

இந்தச் சட்டத்தை அமுலில் கொண்டு வந்து நடத்த காரன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜனரலாக நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவுக்கு வரும்போது சுதேச அரசர்கள் விஷயங்களில் தலையிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் வந்தவர். இவர் வந்த காலத்தில் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் லஞ்சம்

வாங்குதல், வெகுமானம் வாங்குதல் ஆகிய துர்ப் பழக்கங்களைக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தி, அவர்கள் இந்தக் கெட்ட வழக்கங்களை விட்டுவிட வேண்டுமென்று காரன்வாலிஸ் பிரபு வற்புறுத்தினர். ஜில்லா கலெக்டர்கள் ரெவின்யூ இலாகாக்களோடு நீதி இலாகாவையும் பரிபாலித்து வந்தனரல்லவா? இந்த ஏற்பாடு கூடாதென்று நீதி இலாக்காவை தனிப்படுத்திவிட்டார். ஒவ்வொரு ஜில்லாவிலும் சிவில் கிரிமினல் கோர்ட்டுகளை ஏற்படுத்தினர்.

சாசுவத நிலவரி ஏற்பாடு:—காரன்வாலிஸ் பிரபுவின் பெயர் அவர் செய்த சாசுவத நிலவரி ஏற்பாடு சம்பந்தமாக மக்களின் நினைவில் இருந்து வருகிறது. ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நிலவரி வசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டு, அதிகத் தொகை கொடுப்பவருக்கு அவ்வுரிமை கொடுக்கப்பட்டது. அதனல் ஏலத்தில் எடுத்தவர் தமது லாபத்தை உத்தேசித்து ஏழைக் குடியானவர்களின் கஷ்டத்தைச் சிறிதும் பாராட்டாது தம்மால் இயன்றவரையிலும் அவர்களைத் துன்புறுத்தி வரியை ஏராளமாக வசூலித்து வந்தனர். இதனல் விவசாயிகள் பயிரிடுவதைப் பலவிடங்களில் விட்டுவிடவும் நேரிட்டது. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு காரன்வாலிஸ் பிரவு நிலத்தை ஜமீன்தார்களுக்கே சொந்தமாகச் செய்து, அவர்கள் செலுத்த வேண்டிய நிலவரித் தீர்வையையும் என்றும் மாருதபடி சாசுவதமாகச் செய்துவிட்டார்.

மூன்ருவது மைசூர் யுத்தம் :—காரன்வாலிஸ் பிரபு சுதேச மன்னர்கள் விஷயங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்னும் நோக்கத்துடன் வந்தாரென்று கவனித்தோம். ஆனல் மைசூரில் அரசுபுரிந்து வந்த திப்பு சுல்தான் சம்பந்தப்பட்ட வரையில் காரன்வாலிஸ் இந்தக் கொள்கையைக் கடைசி வரையில் கடைபிடித்து நிற்கமுடியவில்லை. சுல்தான் ஆங்கிலேயருக்கு விரோதியான பிரெஞ்சுக்காரருடன் உறவாடிச் சதியாலோசனைகள் செய்து வந்ததுமல்லாமல் ஆங்கிலேயருக்கு நண்பரான திருவாங்கூர் மன்னரது இராஜ்யத்தின்மீது படையெடுத்துச் சென்ருர். இதனல் காரன்வாலிஸ் பிரபு அவரோடு போர் புரிய நேரிட்டது. திப்பு பற்பல இடங்களில் தோல்வியுற்ருர். அவருடைய தலைநகரான ஸ்ரீரங்கப்பட்டணம் பலமாகத் தாக்கப்பட்டது. இந்த நிலைமையில் திப்பு சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டார். இதனல் திப்பு தமது இராஜ்யத்தில் ஒரு பாதியையும், யுத்தச் செலவுக்காக 330-லக்ஷம் ரூபாயையும் கொடுக்க நேரிட்டது. இந்த யுத்தத்தின் பலனுக ஆங்கிலேயருக்கு மலையாளம், திண்டுக்கல், சேலம் ஆகியவை கிடைத்தன.

7. திப்பு சுல்தான்



8. மைசூர் யுத்தங்கள்

ஸர் ஜான் ஷோர்

காரன்வாலிஸ் பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றபின் ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜனரலாக வந்தார். இவரும் சுதேச மன்னர்கள் விஷயங்களில் தலையிடக் கூடாதென்னும் நோக்கத்தோடு வந்தவர். இந்த எண்ணங் கொண்டிருந்த படியால் தான் இவர் ஒரு சமயம் மஹாராஷ்டிரர் நைஜா

மைத் தாக்கியபோது நிஜாமுக்கு உதவி செய்
யாமல் இருந்து விட்டார். ஆனல் இவர் காலத்
தில் அயோத்தியில் கலகம் ஏற்பட்டது. நாட்டில்



9. இந்தியா 1795

அமைதி இருக்கவேண்டும் என்னும் நோக்கங்
கொண்டு இவர் அக் கலகத்தை அடக்கிச் சாதத்
அலி என்பவரை நவாப்பாக நியமித்தார். இதன்

பலனாக ஆங்கிலேய சேனையை அயோத்தியைக் காக்க வேண்டுமென்றும், அதன் செலவுக்காக நவாப்பு வருஷவாரியில் 76-லக்ஷம் ரூபாய் கொடுப்ப தென்றும் ஏற்பட்டது. பொதுவாக நோக்குமிடத்து இவர் காலத்தில் மஹாராஷ்டிரருடைய பலம் ஓங்கி வந்தது. திப்புசுல்தான் தமது சேனையைப் பிரெஞ்சு வீரர்களைக் கொண்டு பழக்கி வந்ததோடு, ஆப்கன் அமீராகிய ஸாமன் ஷாவை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறும் தூண்டி வந்தார்.

வெல்லெஸ்லி பிரபு

ஸர் ஜான் ஷோர் காலத்தில் சுதேச மன்னர்களின் பலம் வளர்ந்தது, அல்லவா? அவர் தமது பதவியிலிருந்து விலகி இங்கிலாந்து சென்றதும் அவரைப் பின்பற்றி வெல்லெஸ்லி பிரபு என்பவர் கவர்னர் ஜனரலாக வந்தார். இவர் ஷோருக்கு முற்றிலும் மாறுபட்டவர். இந்தியாவில் ஆங்கிலேயருடைய ஆதிக்கம் பரவவேண்டும் என்னும் ஸ்திரமான கொள்கையைக் கொண்டவர். எனவே சுதேச மன்னர்களின் பலத்தை எவ்விதத்திலும் ஒடுக்கி ஆங்கிலேயருடைய ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படியும் படியாகச் செய்ய வேண்டுமென்று



10. வெல்லெஸ்லி பிரபு

தீர்மானித்து விட்டார். இதற்காக அவர் கையாண்ட முறைகளைக் கவனிப்போம்.

உபகார நியமன உடன்படிக்கை :—வெல்லெஸ்லி பிரபு வந்த காலத்தில் இந்தியாவில் குழப்பங்களும், சுதேச மன்னர்களுக்குள் சண்டை சச்சரவுகளும் அதிகமாக இருந்தன. இந்த நிலைமையில் நாட்டில் அமைதி என்பது இருக்க முடியாதல்லவா? ஆகையால் வெல்லெஸ்லி புதியதொரு திட்டத்தை ஏற்படுத்தினர். இதன்படிக்கு சுதேச மன்னர்கள் ஆங்கில அதிகாரிகளோடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும். அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இராஜ்யத்தில், நாட்டின்மீது விரோதிகள் படையெடுத்து வராது பாதுகாப்பதற்காகவும், இராஜ்யத்தில் கலகங்கள் நிகழாது பாதுகாப்பதற்காகவும் ஓர் ஆங்கிலேய சேனையை வைத்துக் கொள்ள வேண்டும். அந்தச் சேனையின் செலவுக்காக வருஷவாரியில் குறிப்பிட்ட தொகையையோ அல்லது அவ்வளவு தொகை வருமானத்தைக் கொடுக்கக் கூடிய இராஜ்யத்தில் ஒரு பாகத்தையோ ஆங்கிலேய அதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டும்; ஆங்கிலேயரின் அனுமதியின்றி இதர மன்னர்களோடு போர்தொடங்குவதோ, சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்வதோ கூடாது; ஆங்கிலேயர் நீங்கலாக மற்ற ஐரோப்பியர்களோடு உறவு கொண்டாடுதல் கூடாது என்பவனவாம். இவ்வித ஏற்பாடுகளினல் சுதேச மன்னர்களுடைய சுதந்தர வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆகையால் பல மன்னர்கள் இவ்

வுடன்படிக்கையைச் செய்து கொள்ள எளிதில் இசையவில்லை. இதை முதலில் ஏற்றுக் கொண்டவர் ஹைதராபாத் நவாபாகிய நிஜாம். அவர் இதை ஏற்றுக் கொண்டு சேனையின் செலவுக்காகச் சென்னை இராஜதானியில் அடங்கியுள்ள கர்நூல், அனந்தப்பூர், பல்லாரி, கடப்பை ஜில்லாக்களைக் கொடுத்து விட்டார். இந்த ஜில்லாக்கள் நிஜாமினால் கொடுக்கப்பட்ட ஜில்லாக்களாகையால் இவைகளுக்குக் 'கொடை ஜில்லாக்கள்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

நான்காவது மைசூர் யுத்தம்:—திப்பு சுல்தான் ஆப்கானிஸ்தானத்து அமீராகிய ஸாமன்ஷா என்பவரை இந்தியாவின் மீது படை எடுத்து வருமாறு தூண்டியதையும், பிரெஞ்சுக்காரரோடு உறவாடி வந்ததையும் கவனித்தோம். வெல்லெஸ்லி கவர்னர் ஜனரலாக இருந்த காலத்தில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் கடும்போர் நடந்து வந்தது. அக்காலத்தில் பிரெஞ்சு நாட்டுத் தலைவராயிருந்தவர் நெப்போலியன் என்பவர். இவர் எகிப்து தேசத்திற்கு வந்து அங்கிருந்த ஆங்கில சைனியத்தோடு போர் புரிந்துகொண்டிருந்தார். இந்தச் சமாசாரம் தெரிந்த திப்பு அவரை இந்தியாவின் மீது படையெடுத்துவரத் தூண்டியும், சேனைத் துணை வேண்டியும் அவருடன் கடிதப் போக்கு வரவு வைத்துக் கொண்டார். இதனால் வெல்லெஸ்லி பிரபு விஷயங்களை விளக்கவேண்டுமென்று திப்புவைக் கேட்டார். திப்பு தகவல்கள் கொடுக்க மறுத்தபடி

யால் வெல்லெஸ்லி திப்புவின்மேல் போர் தொடங்க நேரிட்டது. இதுதான் நான்காவது மைசூர் யுத்தம். இந்த யுத்தத்தில் திப்பு வீராவேசத்துடன் தாமே போர் புரிந்தனராயினும் போர்க் களத்தில் உயிர் துறக்க நேரிட்டது. இத்துடன் போரும் நின்றது; மைசூரில் ஹைதர் அலி, திப்பு சுல்தானின் வமிசமும் முடிவடைந்தது. மைசூரில் சில பாகங்களை ஆங்கிலேயரும், சில பாகங்களை நிஜாமும் எடுத்துக் கொண்டு பெரும்பாகத்தை, மைசூரை ஹைதருக்கு முன் ஆண்டுவந்த இந்து மன்னரின் சந்ததியாருக்கே கொடுத்துவிட்டார். இதில் ஆங்கிலேயருக்குக் கன்னடம், கோயமுத்தூர் என்னும் பாகங்கள் கிடைத்தன.

தென் இந்தியாவில் ஆங்கில ராஜ்யம் பரவுதல்:-மைசூர் யுத்தங்களின் பலனுகத் தென்னுட்டில் ஆங்கிலேயருக்கு மதுரை, கோயம்புத்தூர், சேலம், மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்களும், நிஜாமுடன் உபகார நியமன உடன்படிக்கை செய்துகொண்டதன் பலனுகக் கொடை ஜில்லாக்கள் கிடைத்ததையும் கண்டோம். சென்னை மாகாணம் இக்காலத்தில் இருக்கும் அளவுக்கு வர இன்னும் வேண்டியிருந்த பாகங்கள் தஞ்சாவூரும், கர்னுடகமும் ஆகும். இவை எங்ஙனம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன என்பதைக் கவனிப்போம். தஞ்சாவூரில் ஆண்டுவந்த மஹாராஷ்டிர அரச குடும்பத்தில், பட்ட உரிமைக்காகப் போட்டி ஏற்பட்டது. மேலும் தஞ்சை மன்னர் ஆங்கிலேயரிடம் பெற்றிருந்த பெருங் கடனைத் திருப்பிக் கொடுக்கும் வழியின்றி இருந்தார். ஆகை

யால் தஞ்சை மன்னருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அந்த இராஜ்யத்தை வெல்லெஸ்லி பிரபு ஆங்கில இராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.



11. இந்தியா 1805

கர்நாடக நவாப்பு ஆங்கிலேயருக்குக் கடன் பட்டிருந்தது மாத்திரமேயல்லாது, அவர்களுக்கு விரோதமாய்த் திப்புடன் சேர்ந்துகொண்டு சதியா

லோசனைகளும், கலகமும் செய்துவந்தார். ஆகை யால் அவரை நீக்கிவிட்டு அவருக்கு உபகாரச் சம் பளம் கொடுத்துக் கர்னுடகத்தை ஆங்கில இராஜ் யத்துடன் சேர்த்துக்கொண்டார். இதனுல் சற் றேறக்குறைய சென்னை மாகாணம் முற்றிலுமே ஏற்பட்டு விட்டது என்று சொல்லக் கூடும்.

மஹாராஷ்டிர யுத்தங்கள் :—வெல்லெஸ்லி மற்றச் சுதேச மன்னர்களை அடக்கி வந்தனராயினும் மஹா ராஷ்டிரருடைய பலம் வளர்ந்துகொண்டே வந்தது. பீஷ்வாவின் அதிகாரமும் செல்வாக்கும் மேற்கில் தற்காலம் பம்பாய் மாகாணத்தில் சேர்ந்துள்ள பாகங்களிலும், மத்திய இந்தியாவிலும், வடக்கில் டில்லி வரையிலும் பரவிற்று. பீஷ்வா நீங்கலாக அவருக்குக் கீழ்ப்படிந்த நான்கு மஹாராஷ்டிரச் சிற்றரசர்கள் தோன்றினர்கள். குஜராத்தில் கெய்க் வாரும், டில்லிக்குச் சமீபத்திலுள்ள குவாலியரில் சிந்தியாவும், ராஜபுதன பாகத்தில் ஹோல்காரும், மத்திய இந்திய பாகத்தில் பான்ஸ் லேயும் தோன்றி ஞர்கள்; இவர்களுடைய தலைநகரங்கள் முறையே பரோடா, குவாலியர், இன்டோர், நாகப்பூர் ஆகும். இவர்கள் பீஷ்வாவின் மேலதிகாரத்தை ஒப்புக் கொண்டனராயினும் சுயேச்சையோடு இருந்தன ரென்றே சொல்லவேண்டும். சில சமயங்களில் இவர் களுக்குள் சண்டைகள் நேரிடுவதும் உண்டு.

அவ்வாறு பீஷ்வாவுக்கும், ஹோல்காருக்கும் ஒரு போர் நிகழ்ந்து பீஷ்வா தமது நகராகிய பூனவிலேயே தோற்கடிக்கப்பட்டார். இதனுல்

பீஷ்வா வெல்லெஸ்லியின் உதவியை நாட அவரும் தமது துணைப்படை உடன்படிக்கையைப் பீஷ்வா விடம் ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார்.



12. மஹாராஷ்டிர யுத்தங்கள்

பீஷ்வா ஒரு ஆங்கிலச் சேனையை வைத்துக் கொண்டு அதன் செலவுக்குப் பணம் கொடுக்கவும், மற்ற நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியவும் ஒப்புக்

கொண்டார். இதைக் கண்ட மற்ற மஹாராஷ்டிர அரசர்கள் தங்கள் தலைவராகிய பீஷ்வா செய்து கொண்ட உடன்படிக்கையைக் கண்டித்துப் போருக்குத் தயாரானார்கள். சிந்தியாவும், பான்ஸ்லேயும் ஆங்கிலேயரோடு யுத்தஞ் செய்தார்கள். பான்ஸ்லேயின் சேனையை கவர்னர் ஜெனரலாகிய வெல்லெஸ்லி பிரபுவின் சகோதரரான ஆர்தர் வெல்லெஸ்லியும், வட இந்தியாவில் சிந்தியாவை ஜெனரல் லேக்கும் தோற்கடித்தனர். யுத்தத்தின் பலனாக சிந்தியாவும், பான்ஸ்லேயும் துணைப்படை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டனர். ஆங்கிலேயருக்கு ஒரிஸ்ஸா, கட்டாக்கு, குஜ்ராத்தில் சில பாகங்கள், கங்கை யமுனை நதிகளுக்கு மத்தியிலுள்ள பாகங்கள்—இவை கிடைத்தன.

சிந்தியாவும், பான்ஸ்லேயும் பணிந்த பிறகு ஹோல்கார் ஆங்கிலேயரோடு போர் தொடங்கினார். ஆனால் இந்தப் போர் முடிவடைவதற்குள் வெல்லெஸ்லி பிரபு தமது பதவியை விட்டுவிட்டு இங்கிலாந்துக்குப் போகவேண்டியதாயிற்று. வெல்லெஸ்லியைப் பின்பற்றி வந்த கவர்னர் ஜனரல் ஹோல்காருடன் சமாதானம் செய்துகொண்டார்.

காரன்வாலிஸ் பிரபு, ஸர் ஜார்ஜ் பார்லோ

இந்தியாவில் வெல்லெஸ்லி கையாண்டு வந்த முறைகளினால் ஆங்கில இராஜ்யம் பரவியதாயினும், சுதேச மன்னர்களுக்கு மனக்கொதிப்பை உண்டாக்கிற்று. இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகளும் வெல்

லெஸ்லியின் கொள்கைகளை ஆமோதிக்கவில்லை. ஆகையால் அவர்கள் அவரைத் திருப்பி யழைத்து விட்டனர். கவர்னர் ஜனரல் ஸ்தானத்திற்குக் காரன்வாலிஸ் பிரபுவையே மறுபடியும் அனுப்பி ஞர்கள். ஆனல் அவர் இந்தியாவுக்கு வந்த சிறிது காலத்திற்கெல்லாம் இறந்துவிட்டார். அவரைப் பின்பற்றி ஸர் ஜார்ஜ் பார்லோ கவர்னர் ஜனரல் ஆனார். இவர் காரன்வாலிஸ் மேற்கண்ட, சுதேச மன்னர்கள் விஷயங்களில் தலையிடாக் கொள்கை யையே அனுசரித்து வந்தார்.

மிண்டோ பிரபு

ஸர் ஜார்ஜ் பார்லோ ஆறு வருஷங்கள் கவர்னர் ஜனரலாய் இருந்த பின்னர் நாடு திரும்பி ஞர். பிறகு மிண்டோ பிரபு கவர்னர்ஜனரல் ஆனார். இவர் இந்தப் பதவியில் இருக்குங் காலத்தில் பிரெஞ்சுத் தலைவரான நெப்போ லியன் ஆங்கிலேயர் மீது வெகு மும்முரமாகப் போர் நடத்தி வந்தார். இதனல் அவர் இந்தியாவின்மீது படை எடுத்து

13. நெப்போலியன்

வரக் கூடுமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆகையால் மிண்டோ பிரபு முன் எச்சரிக்கையாகப் பாரஸீக தேசத்து அரசருடனும், ஆப்கானிஸ்தானத்து அமீருடனும், சிந்துநாட்டு மன்னர்களுடனும் அநேக உடன்படிக்கைகள் செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கைகளின் பிரகாரம் அந்தந்த் தேசத்து மன்னர் தத்தம் நாட்டின் வழியாக ஆங்கிலேயருக்கு விரோதமானவர்களின் சேனையைப் போக விடுவதில்லை என்று ஒப்புக்கொண்டார்கள். இதனால் பிரெஞ்சுக்காரர் படை எடுத்துவரக் கூடுமோவென்னும் பயம் நீங்கிற்று.

14. ரஞ்சித் சிங்

இதுவுமன்றிப் பஞ்சாப்பில் சீக்கியர் பலமடைந்து கொண்டு வந்தனர். அவர்களுள் ரஞ்சித் சிங் என்பவர் மற்றைய சீக்கிய மன்னர்களை யடக்கித் தமது இராஜ்யத்தைப் பஞ்சாப் முழுவதும் பரவச் செய்து, தாம் லாகூரிலிருந்து அரசுபுரிந்து வந்தார். 1809-ல் அவருடனும் மிண்டோ பிரபு சமாதானம் செய்து கொண்டார். இதனால் ரஞ்சித் சிங் தமது இராஜ்யத்தின் எல்லை ஸத்லேஜ் நதியுடன் முடிவடைகிற தென்றும், தாம் அதைக் கடந்து வருவதில்லை என்றும் ஒப்புக்கொண்டார்.

கி. பி. 1813-ல் கிழக்கு இந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட சாஸனம் புதுப்பிக்கப்பட்டது. அக்காலத்தில் இங்கிலாந்தில் ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. கிழக்கு இந்திய வியாபாரக் கம்பெனியார் மட்டுமே இந்தியாவோடு வியாபாரம் செய்யலாம் என்னும் ஏகபோக உரிமை பெற்றிருப்பது கூடாதென்றும், அந்த உரிமை ஆங்கில வியாபாரிகள் யாவருக்குமே கொடுக்கப்பட வேண்டு மென்றும் கிளர்ச்சி செய்யப்பட்டது. இதை ஒப்புக்கொண்டு 1813-ல் கொடுக்கப்பட்ட சாஸனத்தில் இந்தியாவோடு வியாபாரம் செய்யும் தனி உரிமை நீக்கப்பட்டது. ஆகையால் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு வியாபாரம் செய்யும் தொழில் குறைந்து, அரசுபுரியும் தொழிலே பெரிதாகி விட்டது.

ஹேஸ்டிங்ஸ் பிரபு

15. ஹேஸ்டிங்ஸ் பிரபு

மிண்டோ பிரபுவுக்குப் பிறகு ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜனரலாக வந்தார். இவர் இந்தியாவுக்கு வருவதற்குமுன் இந்தியாவிலுள்ள ஆங்கிலத்துரைத்தனத்தார் சுதேச மன்னர்கள் விஷயங்களில் தலையிடக்கூடாதென்னும் அபிப்பிராயம் கொண்டிருந்தார். ஆனல் இந்தியாவுக்கு வந்த

பின்னர் இந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள நேரிட்டது.

நேபாள யுத்தம்;—நேபாளம் என்பது இமய மலைச் சாரலில் உள்ளது. அங்கே கூர்க்கர் என்னும் வீரம் செறிந்த ஒரு வகுப்பினர் இருக்கின்றனர். ஹேஸ்டிங்ஸ் தமது ஆட்சியைத் தொடங்கிய காலத்தில் இவர்கள் தங்கள் மலைநாடுகளை விட்டுக் கீழிறங்கி வந்து ஆங்கிலேயருக்குச் சொந்தமான பாகங்களில் சில கிராமங்களைப் பிடித்துக் கொண்டார்கள். இதனால் கூர்க்கர்களோடு யுத்தம் செய்ய நேரிட்டது. இந்த யுத்தத்தில் ஆங்கிலேயருக்குச் சேதம் அதிகமாயினும் கடைசியில் வெற்றி பெற்றார்கள். யுத்தக் கடைசியில் நடந்த சமாதானத்தில் ஆங்கிலேயருக்குச் சில நாடுகள் கிடைத்தன. தற்காலம் அரசப் பிரதிநிதியின் கோடை வாசஸ்தலமாக இருக்கும் சிம்லா அக்காலத்தில் கிடைத்ததே ஆகும்.

பிண்டாரி யுத்தம்:—வெல்லெஸ்லி பிரபு கொண்டு வந்த துணைப்படை உடன்படிக்கை ஏற்பாட்டினால் பல இந்திய அரசர்கள் ஆங்கிலச் சேனையை வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டார்கள். இதனால் தங்களிடம் இருந்துவந்த சேனைகளைக் கலைத்து விட்டனர், இந்தப் போர் வீரர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று தங்களுக்குப் பணம் கொடுக்க இசையும் மன்னர்களுக்காகப் போர் புரிந்து வந்தனர். அன்றியும் அவர்கள் பலஇராஜ்யங்களில் புகுந்து கொள்ளையடித்தும் வந்தனர். இவர்களுக்குப் பிண்டாரிகள்

என்பது பெயர் ஹேஸ்டிங்ஸ் இவர்களோடு போர் புரிந்து இவர்கள் கொட்டத்தை யடக்கி விட்டார்.



16. இந்தியா **1823**

கடைசி மஹாராஷ்டிர யுத்தம்:—ஹேஸ்டிங்ஸ் பிண்டாரிகளை ஒழித்து வருங்காலத்தில் பல இந்திய மன்னர்களைத் துணைப்படை உடன்படிக்கைக்கு ஒப்புக் கொள்ளுமாறு செய்து வந்தார். இச் சந்தர்ப்பத்

தில் பீஷ்வாவர்க இருந்த இரண்டாவது பாஜீராவ் என்பவர் சுயாதீனம் பெற்றுத் தமது முன்னோர்கள் செலுத்தி வந்த அதிகாரத்தைத் தாமும் செலுத்த வேண்டுமென்னும் எண்ணங் கொண்டவராய் பூனவி லிருந்த ஆங்கில ஸ்தானிகரைக் கொன்றுவிட்டார். இதனுல் போர் மூள பாஜிராவ் தமது பதவியை இழந்து உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு போக நேரிட்டது. ஹோல்காரும், பான்ஸ்லேயும் மறுபடியும் ஆங்கிலேயரோடு யுத்தம் செய்து தோற் றுப்போய் ஆங்கிலேயருக்கு அடங்கிய சிற்றரசர் களாகிவிட்டனர். பூனு ஆங்கிலேயர் வசம் வந்தது. ஆனுல் சிவாஜியின் வம்சத்தைச் சேர்ந்தவர் ஒரு வரை ஆங்கிலேயர் ஸதாரா என்னுமிடத்தில் சிறிய ராஜ்யத்திற்கு அரசராகப் பட்டம் கட்டி வைத்தார் கள்.

ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஆங்கிலக் கல்வி பரவு வதற்கான பல முறைகள் கையாளபப்பட்டன. ஹேஸ்டிங்ஸ் தமது பதவியிலிருந்து விலகினுர். அவருக்குப் பிறகு ஆம்ஹெர்ஸ்ட் பிரபு பதவி ஏற்றுர்.

அப்பியாசம்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் செய்யப்பட்ட சீர் திருத்தச் சட்டத்தினுல் கிழக்கு இந்தியக் கம்பெனி நடைமுறைகளில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டன?

2. ஒழுங்கு முறைச் சட்டம் எப்போது நிறைவேற் றப் பட்டது? அதன் சாரம்சம் என்ன?

3. பிட் இந்தியா சட்டத்தின் முக்கியமான அம்சங் களைக் கூறுக.

4. மூன்ருவது நான்காவது மைசூர் யுத்தங்களுக்குக் காரணங்களையும், அவைகளினுல் ஆங்கில இராஜ்யம் பெருகின விதத்தையும் கூறுக.

5. சாச்வத நிலவரி ஏற்பாடு செய்தது யார்? ஏன்? அதன் பலன்கள் யாவை?

6. அயோத்தி நவாப் விஷயமாக வாரன் ஹேஸ்டிங்ஸ் நடந்து கொண்ட விதத்தை விளக்குக.

7. கோரா, அலஹாபாத் இவை முகலாய சக்கரவர்த்தி யிடத்திலிருந்து அயோத்தி நவாப்புக்கு ஆங்கிலேயர் கொடுத்து விட்டனர். ஏன்? என்ன நிபந்தனைகளோடு அவை கொடுக்கப்பட்டன?

8. துணைப்படை உடன்படிக்கை என்ருல் என்ன? அதை முதலில் ஒப்புக்கொண்டது யார்?

9. கொடை ஜில்லாக்கள், கன்னடம், ஒரிஸ்ஸா, சால் செட், பூனு, தஞ்சாவூர், கர்னுடகம் ஆகியவை ஆங்கிலேயருக்கு எவ்வாறு கிடைத்தன?

10. இந்தியா படங்கள் வரைந்து வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன் வாலிஸ், வெல்லஸ்லி இவர்கள் காலங்களில் ஆங்கில இராஜயத்தின் விஸ்தீரணத்தைக் குறிக்க.

11. மிண்டோபிரபு பாரசீகம், ஆப்கானிஸ்தானம், சிந்து, இந்நாட்டு மன்னர்களுடன் ஏன் நேச உடன்படிக்கைகள் செய்துகொண்டார்?

12. நேபாள யுத்தத்தின் முடிவு என்ன?

2. லார்டு வில்லியம் பெண்டிங்கு

லார்டு ஆம்ஹெர்ஸ்டு (1823-28)

ஹேஸ்டிங்ஸ் பிரபு இங்கிலாந்து சென்ற பின்னர் ஆம்ஹெர்ஸ்டுபிரபு கவர்னர் ஜனரல் பதவியை ஏற்றுக் கொண்டார். இவர் காலத்தில் இந்தியாவில் ஆங்கில ஆட்சியிலும், இராஜ்ய விஸ்தீரணத்திலும் அதிக மாறுதல்கள் ஏற்படவில்லை. ஆனால் இவர் பர்மியரோடு யுத்தம் தொடுக்க நேரிட்டது.

பர்மா யுத்தம்:—(1824-26) பர்மா தேசத்து மன்னர் பல வருடங்களாக அக்கம் பக்கங்களிலுள்ள இராஜ்யங்களின் சில பாகங்களைத் தம் வசப்படுத்தி வந்தார். கடைசியாகக் கீழ்வங்காளத்தை அடுத்துள்ள ஆரக்கான் என்னும் பாகத்தையும் கைப்பற்றி அங்கிருந்த ஜனங்களை இம்சிக்கத்தொடங்கினர். இதனால் அங்கு வசித்த வந்த ஜனங்களில் பலர் ஓடி வந்து ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்களைத் தம்வசம் ஒப்புவிக்கவேண்டுமென்று பர்மா அரசர் கேட்டார். ஆனால் ஆங்கில அதிகாரிகள் அவ்வாறு செய்ய மறுத்து விட்டனர். நாளடைவில் பர்மியர் அஸ்ஸாம் பிரதேசத்தையும் பிடித்துக் கொண்டனர். கடைசியாக ஷாபுரி என்னும் தீவைத் துராக்கிருதமாகக் கைப்பற்றினர்கள். இதனால் ஆங்கிலேயர்

அவர்களைக் கண்டித்துப் பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். பர்மா தேசத்து மன்னர் இதற்கு ஏற்றவிடை கொடுக்காமலிருக்கவே



17 பர்மா யுத்தங்கள்

போர் தொடங்கிற்று. நில மார்க்கமாக இரண்டு படைகள் சென்று பர்மா தேசத்து மன்னர் வசித்து வந்த ஆவாவைத் தாக்கின. கடல் மார்க்கமாகச்

சென்ற மற்றொரு படை ரங்கூனைத் தாக்கிற்று. பர்மிய சேனையின் தலைவரான மகா பந்துலா படு தோல்வி யடைந்தார். யாண்டபூ என்னுமிடத்தில் சமாதானம் நடைபெற்றது. அந்த உடன்படிக்கை யின்படி ஆங்கிலேயருக்கு அஸ்ஸாம், ஆரக்கான், டெனாஸரீம் என்னும் பாகங்கள் கிடைத்தன.

இந்தப் போர் முடிந்த சிறிது காலத்திற் கெல்லாம் ஆம்ஹெர்ஸ்டு பிரபு தமது நாடு திரும்பினார்.

பெண்டிங்கு பிரபு (1828-35)

ஆம்ஹெர்ஸ்டு பிரபுவுக்குப் பிறகு பெண்டிங்கு பிரவு கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்று, ஏழு வருஷ காலம் வகித்து வந்தார். இவர் காலத்தில் ஆங்கில இராஜ்யம் சிறிதளவே விஸ்தரிக்கப்பட்ட தாயினும் இவர் செய்த சீர்திருத்தங்கள் மிகவும் சிறந்தவையும், முக்கியமானவையுமாம். ஆகையால், இவருடைய ஆட்சிக் காலம் சரித்திரத்தில் முக்கியமான காலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவர் சென்னையில் கவர்னர் பதவியை வகித்து வந்திருந்தபடியால் இந்திய விவகாரங்களில் அனுபவம் வாய்ந்தவராயிருந்

18. பெண்டிங்கு பிரபு

தார். இவர் இந்தியர்களிடையே குடிகொண்டிருந்த சில தீய வழக்கங்களைக்களைத்து எறிந்து அவர்களை முன்னேற்ற முறைகளில் நடத்திச் செல்ல வேண்டு மென்னும் நன்னோக்கங் கொண்டவர்.

குடகு தேசம் ஆங்கில ஆதிக்கத்தில் வந்தது :—மைசூருக்கு மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கிடையே குடகு என்னும் ஒரு பிரதேசம் இருப்பதைப் படத்தில் கவனியுங்கள். அந்நாடு ஒரு சுதேச மன்னருடைய ஆட்சியில் இருந்து வந்தது. பெண்டிங்கு பிரபு கவர்னர் ஜனரல் பதவி ஏற்றுக் கொண்ட காலத்தில் அந்நாட்டைப் பரிபாலித்த மன்னர் கொடுங்கோ லரசாட்சி புரிந்து வந்தார். அவர் தமது உறவினரையும், குடிமக்களையும் பல விதங்களிலும் ஹிம்சை செய்து கொடுமையாக நடத்தி வந்தார். அவருடைய கொடுமையைத் தாங்க முடியாது அந்நாட்டு மக்களில் பலர் ஆங்கிலேயரிடம் முறையிட்டுக் கொண்டனர். குடகு மன்னரை நல்வழிப் படுத்த ஆங்கிலத் துரைத்தனத்தார் செய்த பிரயத்தனங்கள் வீணாயின. ஆகையால் ஜனங்களின் விருப்பத்தின் பேரிலும், அவர்கள் வேண்டுகோளின் பேரிலும் பெண்டிங்கு பிரபு குடகு நாட்டை ஆங்கில இராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார்.

மைசூர் ஆங்கில ஆட்சிக்குத் திரும்புதல் :—கடைசி மைசூர் யுத்தம் முடிவடைந்த காலத்தில், வெல்லெஸ்லி பிரபு அந்நாட்டை இந்து அரசர்களிடமே ஒப்படைத்து விட்டார் என்பதைக் கவனித்தோம்

அவ்வாறு அரசு உரிமையை ஏற்றுக் கொண்டவர் கிருஷ்ணராஜ உடையார் என்பவர். இவர் ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபட்டு, வீண் செலவுகளைப் பெருக்கிவிட்டார். இதனால் ஏற்பட்ட கடன்களை ஒழிக்க வேண்டிய மக்களின் பேரில் வரிச் சுமைகளை அதிகமாக ஏற்ற வேண்டியதாயிற்று. இதைத் தாள முடியாது ஜனங்கள் ஆங்காங்கு கலகங்கள் செய்ய ஆரம்பித்தார்கள் நாட்டில் குழப்பங்கள் ஏற்படாது பாதுகாக்கவேண்டும் என்பது ஆங்கிலேயரின் நோக்கம். எனவே அவர்கள் மைசூர் அரசருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து, அந்நாட்டை ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் ஐம்பது வருஷங்களில் மைசூர் சீர் பெற்று அரசாங்கம் ஒழுங்காக நடந்து வந்தபடியால் மறுபடியும் புராதன இந்து அரசரின் சந்ததியார் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

இதுவுமன்றிப் பெண்டிங்கு பிரவு ஜோத்பூர், ஜெய்ப்பூர், அயோத்தி முதலிய இராஜ்யங்களில் ஆட்சிமுறையைப் பலவிதங்களில் திருத்தியமைக்கச் செய்தார். பஞ்சாப்பில் ஆண்டு வந்த ரஞ்சித் சிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்.

அரசியல் திருத்தங்கள் :—பெண்டிங்கு பிரபு இந்தியாவுக்கு வருவதற்குமுன்னர் பர்மா யுத்தம் நடைபெற்றதல்லவா? அதன் பயனாகச் செலவுகள் அதிகமாகிப் பண நெருக்கடி ஏற்பட்டது. இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டி அவர் சில சிக்கன முறை

களைக் கையாண்டார். மற்பற உத்தியோகங்களே அனுவசியமானவை எனக் கருதி அவைகளை ஒழித்து விட்டார். மற்ற உத்தியோகஸ்தர்கள் பெற்று வந்த சம்பளங்களை குறைத்துவிட்டார். ராணுவ உத்யோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த வெகுமதிகளை நிறுத்திவிட்டார். இவ்வாறு செலவைக் குறைத்து விட்டதோடு நில்லாமல் வருமானத்தையும் விருத்தி செய்து கொள்ள வழி தேடினர். இனம் நிலங்களுக்கு அரசாங்கத்தார் வரி விதிப்பதில்லை. பலர் தம்மிடம் இருந்த நிலங்களைத் தாம் இனமாகப் பெற்றவை என்று கூறிக் கொண்டு வரி செலுத்தாமலிருந்து வந்தனர். இதனல் அரசாங்கத்தார் தங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய வரிப் பணத்தில் ஒரு பங்கை இழக்க நேரிட்டது. இந்த நஷ்டத்தை நீக்க வேண்டிப் பெண்டிங்கு பிரபு ஒரு விசாரணை ஏற்படுத்தி, இனம் நிலங்களின் சம்பந்தமான தஸ்தாவேஜிகளைப் பரிசீலனை செய்து வரி செலுத்தத் தவறிய நிலங்களுக்கு வரியை விதித்தார். இதனல் வருமானம் அதிகரித்தது.

அரசாங்க நிர்வாக முறையிலும் பெண்டிங்கு பிரபு சில சீர்திருத்தங்களைச் செய்து வைத்தார். கலெக்டர்களுக்குக் கிரிமினல் கேஸ்களை விசாரணை செய்யும் அதிகாரத்தை அவர் மறுபடியும் கொடுத்தார். ஆனல் பெரிய கிரிமினல் தாவாக்களை ஜில்லா ஜட்ஜுகளே விசாரணை செய்வர். கிரிமினல் கேஸ்களை விசாரணை செய்யும் முறையில் ஜில்லா ஜட்ஜுக்கு செஷன்ஸ் ஜட்ஜ் என்று பெயர். ஜில்லா

ஜட்ஜுகளுக்கு உதவியாக ஸப் ஜட்ஜுகளை நிய மித்தார்.

சமூகச் சீர்திருத்தங்கள்:—பெண்டிங்கு பிரபு செய்த சீர்திருத்தங்களில் தலைசிறந்து விளங்குபவை அவர் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த துரா சாரங்களை ஒழிக்க வேண்டிச் செய்த சீர்திருத்தங் களேயாம். இந்து மக்களின் வாழ்க்கையில் சில கொடிய பழக்கங்கள் நுழைந்துவிட்டன. இரங்கும் தன்மையுடைய மனிதர் இக் கொடிய பழக்கங்களைக் கண்டு மனம் புண்பட்டுக் கிடந்தனர். இவ் வழக்கங் களில் 'சதி' என்பது ஒன்று. இதையே 'ஸஹக மனம்' என்றும் சொல்லுவார்கள். ஸஹகமனம் என்பது கணவனை இழந்த பெண் அவன் சவத் துடன் உடன் கட்டை ஏறித் தன்னுயிரையும் மாய்த் துக் கொள்ளுவது. உடன் கட்டை ஏற வேண்டிய பெண்மணி விரும்பினும், விரும்பாவிடினும் உற வின ரெல்லோரும் அவளை உடன்கட்டை ஏறும் படிக் கட்டாயப்படுத்தி வந்தார்கள். இத் தீய செயலை அறவே ஒழிக்க எண்ணங்கொண்டார் பெண்டிங்கு பிரபு. பிரசித்தி பெற்ற மொகலாய சக்கரவர்த்தி யான அக்பர் பாதுஷாவும் இந்த வழக்கத்தை ஒழிக் கப் பெறு முயற்சி செய்தார். ஆயினும் அது ஒழிந்த பாடில்லை. ஆனல் பெண்டிங்கு பிரபு இந்தத் துரா சாரத்தை எப்படியும் ஒழித்துவிடுவ தென்றே கங் கணம் கட்டிக்கொண்டார். இந்த முயற்சியில் இவ ருக்கு ஆதரவாய் நின்ற இந்துப் பெரியார் ராஜா ராம் மோஹன் ராய் என்பார்.

ராஜாராம் மோஹன் ராய் :—இவர் கல்கத்தாவில் ஒரு சிறந்த பிராம்மண குலத்தில் பிறந்தவர். வேதங்களை நன்கு படித்தவர். ஸம்ஸ்கிருத பாஷையிலும், பாரசீக பாஷையிலும் பாண்டித்யம் பெற்றவர். ஆனல் மூட நம்பிக்கைகளை வெறுத்தவர். பகுத்தறிவு கொண்டு விஷயங்களை ஆராயக்கூடிய திறமை வாய்ந்தவர். விக்ரஹ ஆராதனையில் இவருக்கு நம்பிக்கை இல்லை. இந்துக்களிடையே இருந்து வந்த பல கெட்ட பழக்கங்களைக் கண்டித்து வந்தார். மத விஷயத்தில் தாம் கொண்ட நம்பிக்கையையும், கொள்கையையும் பரவச்செய்வதற்காக இவர் பிரம்ம சமாஜம் என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர்.

19. ராஜாராம் மோகன ராய்

ராம்மோஹன் ராய், ஆங்கில கல்வியை இந்தியர் கற்க வேண்டுமென்ற பூரண அவாக் கொண்டிருந்தார். இவருக்கு ஆங்கிலேயர் ஆட்சியில் நம்பிக்கையும், விசுவாசமும் உண்டு. சுதேச மன்னர்கள் ஆட்சியைவிட ஆங்கிலேயர் ஆட்சியே இந்தியர்களுக்கு அக்காலத்தில் நன்மை பயக்கக்கூடியதென இவர் நம்பினர். பெண்டிங்கு பிரபு உடன் கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்துவிடச் சட்டம் செய்த

போது இந்துக்களில் பலர் அவரைக் கண்டித்தார்கள். ஆனால் ராம்மோஹன் ராய், பெண்டிங்கு பிரபுவின் பிரயத்தனங்களுக்கு ஆதரவாக நின்று கவர்னர் ஜனரல்செய்த முயற்சிகள் போற்றத் தக்கவை என்று ஜனங்களுக்குத் தெரிவித்தார்.

தக்கர்களை அடக்கியது:—பெண்டிங்கு பிரபு காலத்தில் தக்கர் என்ற ஒரு கொள்ளைக் கூட்டத்தார் வழிப்பறி, கொலை, களவு முதலிய கொடுமைகளைச் செய்து வந்தனர். இவர்கள் பிரயாணிகளைப்போல் வேஷம்போட்டுக்கொண்டு வழிப் போக்கர்களுடன் ஸ்நேகம் செய்துகொண்டு அவர்களிடமிருந்த பொருள்களைக் கைப்பற்றிப் பிறகு அவர்களைக் கொலை செய்து வந்தார்கள். இதனால் பிரயாணிகள் பெருந் துன்பங்களை அடைந்து வந்தார்கள். பெண்டிங்கு பிரபு பெருமுயற்சிசெய்து, அவர்களை அடக்கி அவர்களால் ஏற்பட்ட தொல்லைகளை ஒழித்தார்.

நவீனக் கல்வியின் அபிவிருத்தி:—பெண்டிங்கு பிரபு காலத்தில் இந்தியாவில் இந்து முஸ்லீம்களில் பெரும்பாலோர் தத்தம் மதக் கல்வியைப் பயிலுவதிலேயே கருத்துக் கொண்டிருந்தார்களேயல்லாது ஆங்கிலம் கற்பதில் அக்கரைகொண்டிருக்கவில்லை. ஆனால் கவர்னர் ஜனரல் நிர்வாக சபை அங்கத்தினர்களில் ஒருவரான மெக்காலே பிரபு இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். பெண்டிங்கு பிரபுவும் இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு

நவீன முறையில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பப் பல பாடசாலைகளை ஏற்படுத்தினர்.

1833-ம் வருஷத்திய சட்டம் :—பெண்டிங்கு பிரபு இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில் இங்கிலாந்து பார்லிமெண்டு சபையில் 1833-ம் ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கம்பெனியார் அரசாளும் உரிமை மேலும் இருபது வருஷங்களுக்கு அளிக்கப்பட்டது. ஆனல் கம்பெனியாருக்கு நாடாளும் தொழில் பெருகிவிட்டபடியால் வியாபாரத்தை நிறுத்திவிட வேண்டியதாயிற்று. வங்காள கவர்னர் ஜனரல் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. வங்காளத்திற்குத் தனிமையாக ஒரு கவர்னர் ஏற்படுத்தப்பட்டார்.

கவர்னர் ஜனரலுக்குச் சட்டங்கள் செய்யும் அதிகாரம்கொடுக்கப்பட்டது. அவரது நிர்வாக சபையில் சட்ட அங்கத்தினர் ஒருவர் இருக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் முதல் சட்ட அங்கத்தினராக இருந்தவர் மெக்காலே பிரபு. இவர் இந்திய கிரிமினல் சட்டங்களை எல்லால் தொகுத்து இந்தியன் பீனல் கோட் என்னும் சட்டப் புத்தகத்தை இயற்றினர். திறமை வாய்ந்த இந்தியர்களுக்கு எவ்வித உத்தியோகத்தையும் கொடுக்கலாமென்று ஏற்பாடாயிற்று. சற்றேறக் குறைய தற்கால ஆட்சி முறையின் ஆரம்பம் இந்த 1833–சட்டத்தினல் ஏற்பட்டதென்றே சொல்லாம்.

பற்பல சீர்திருத்தங்களைச் செய்த பின்னர் பெண்டிங்கு பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

அப்பியாசம்

1, பர்மியருடன் ஆங்கிலேயர் யுத்தம் செய்யக் காரணமென்ன ?

2. பர்மா யுத்தத்தினால் ஆங்கிலேயருக்குக் கிடைத்த லாபமென்ன ?

3. பெண்டிங்கு காலத்தில் செய்யப்பட்ட சமூக சீர் திருத்தம் யாது ? விளக்கிக் கூறுக.

4. ராஜா ராம் மோஹன் ராய் என்பவர் யார் ? அவர் கொண்டிருந்த கொள்கைகள் யாவை ? அவைகளை எவ்வாறு பரவச் செய்தார்.

5. குடகு மைசூர் இவை ஏன் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன ?

6. 1833-ம் வருஷத்திய சட்டத்தினால் இந்திய அர சாங்க அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை ?

7. கல்வி விஷயங்களில் பெண்டிங்கு பிரபு காலத் தில் எவ்வித மாறுதல்கள் ஏற்பட்டன ?

---

3. எல்லைப்புறப் பிரச்னை

ருஷியாவின் நிலைமை :—ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் நெடுங்கால மாகச் சண்டை நிகழ்ந்துவந்ததையும், அதன்பயனாக இவ்விருவரும் இந்தியாவிலும் போர்செய்து கொண்டு இருந்ததையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஐரோப் பாவிலுள்ள மற்றைய வல்லரசுகளில் ருஷியாவும்

ஒன்று. இவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கூடப் பகைமை இருந்து வந்தது.

இந்தியாவின் எல்லைப்புற நிலைமை :— ஆங்கிலேயர் கடற்படையில் முதன்மை ஸ்தானம் வகித்துவந்தபடியால் அவர்களுக்குக் கடல் மார்க்கமாக வரக் கூடிய விரோதிகளைப்பற்றி பயம் சிறிதும் இல்லை. ஆனால் நில மார்க்கத்திலோ இவர்கள் அச்சம் கொண்டிருந்தார்களென்றே சொல்லவேண்டும். ருஷியர்கள் பற்பல நாடுகளையும் வென்று, ஆசிய துருக்கிஸ்தானம் வரையில் வந்துவிட்டார்கள். இவர்கள் இந்தியாவின் மீது நோக்கம் கொண்டிருந்தார்கள் என்பது ஆங்கிலேயருக்கு விளங்கிற்று எனவே வடமேற்கு எல்லைப்புறத்தை எவ்வாறுயினும் பலப்படுத்திப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானத்தின் சம்பவங்கள் :— ஆப்கானிஸ்தானத்தில் அஹமத்ஷா அப்தாலியின் வம்சத்தைச் சேர்ந்த ஷாஷுஜா என்பவர் அமீராக இருந்துவந்தார். ஆனால் ஜனங்கள் அவர் மீது வெறுப்பு அடைந்துவிடவே போஸ்ட் முகம்மது என்பவர் ஷாஷுஜாவைச் சுலபமாக வென்று அமீர் பதவியை ஏற்றார் ஷாஷுஷா ஆங்கிலேயரிடம் உபகாரச் சம்பளம் பெற்றுலூடியானு என்னும் பட்டணத்தில் தங்கியிருந்தார். ஆனால் ஹீரட் என்னும் பிரதேசம் மாத்திரம் ஷாஷுஜாவின் சகோதரர் வசம் இருந்து வந்தது. ருஷ்யருடைய தூண்டுதலின் பேரில் பாரசீக மன்னர் ஹீரட்டைத் தாக்கினர். இதனல் ஆங்கிலேயருக்குப் பயம் உண்டாயிற்று.

அவர்கள் டோஸ்ட் முகம்மதுவிடம் ஒரு சிநேக உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பஞ்சாப்பில் அரசு செலுத்திவந்த சீக்கிய மன்னரான ரஞ்சித்சிங் என்பவர் டோஸ்ட் முகம்மதுக்குச் சொந்தமான பெஷாவரைப் பிடித்துக் கொண்டிருந்தார். ரஞ்சித் சிங் ஆங்கிலேயருடைய நண்பர். எனவே தம்முடைய சிநேகிதத்தை நாடிய ஆங்கிலேயர் ரஞ்சித் சிங் இடமிருந்து பெஷாவரைத் தமக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று டோஸ்ட் முகமது கேட்டார். ஆங்கிலேயர் இந்த உதவியைச் செய்தால்தான் நேச உடன்படிக்கை செய்துகொள்வதாய் டோஸ்ட்முகம்மது தெரிவித்தார்.

இச் சமயத்தில் தான் ஆக்லண்டு பிரபு கவர்னர் ஜனரல் பதவியை ஏற்றார். ரஞ்சித்சிங் ஆங்கிலேயருடைய உண்மையான நண்பராகையால் அவரிடமிருந்து பெஷாவரை டோஸ்ட் முகம்மதுக்கு வாங்கிக் கொடுக்கக் கவர்னர் ஜனரல் மறுத்துவிட்டார். இதனல் டோஸ்ட் முகம்மது நேச உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள இசையவில்லை. இத்தோடு நில்லாமல் அவர் ருஷியருடன் அவ்வித நேச உடன்படிக்கை செய்து கொண்டார். ஆங்கிலேயர் சார்பாக உடன்படிக்கை செய்துகொள்ளக் காபூல் சென்றிருந்த காப்டன் பர்ன்ஸ் என்பவர் தான் சென்ற காரியம் முடியாமற்போகவே திரும்பி வந்துவிட்டார்.

ஆப்கன் யுத்தம் (1839) :—நிலைமையில் நெருக்கடி ஏற்படுவதைக் கண்ட ஆக்லண்டு பிரபு லூடியானவில் வசித்து வந்த ஷாஷுஜாவை அமீராக நியமித்து அவரோடு ஒரு பெரும்படையைக் காபூலுக்கு அனுப்பினர். இந்தச் சேனை போலன் கணவாய் வழியாகச் சென்று காண்டஹார், கஜினி முதலிய நகரங்களைப் பிடித்துக்கொண்டு காபூலை நோக்கிச் சென்றது. இதைக் கேள்விப்பட்ட டோஸ்ட் முகம்மது ஓடிப்போய்விட்டார். ஆங்கிலேயர் ஷாஷுஜாவுக்குப் பட்டம் கட்டிவைத்தனர். டோஸ்ட் முகம்மதுவைப் பிடித்துக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டார்கள்.

ஷாஷுஜா திறமையற்றவர். மேலும் ஆப்கானியர் தங்கள் சுதந்தரத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தார்கள். ஆகையால் அன்னியராகிய ஆங்கிலேயருடைய உதவியைக் கொண்டு அமீர் பதவியை வகித்து வந்த ஷாஷுஜாவை அவர்கள் கொஞ்சமும் விரும்பவில்லை. ஆங்கிலேயரின் துணையின்றி ஷாஷுஜா ஒரு நிமிஷமும் சிம்மாசனத்திலிருக்க முடியவில்லை. ஆப்கானிஸ்தானத்தில் ஒரு சேனையை வைத்திருப்பதனல் கம்பெனியாருக்குச் செலவு அதிகமாயிற்று. எனவே கணவாய்களைக் காப்பவர்கள் போன்று இருந்துவந்த எல்லைப் புறச் சிற்றரசர்களுக்கு ஆங்கிலேயர் கொடுத்துவந்த கப்பத்தை நிறுத்த வேண்டியதாயிற்று. இதனல் அவர்களுக்குள் அதிருப்தி ஏற்பட்டது. எங்கும் ஆங்கிலேயருக்கு விரோதம் அதிகரித்தது. நாலா பக்கங்களிலும் விரோதிகள் சூழ்ந்து கொண்ட படியால்

அங்கிருந்த ஆங்கிலப் படைத் தலைவருக்கு நிலைமை மிகவும் நெருக்கடியாகி விட்டது. ஆப்கானியர் ஷாஷூஜாவை அமீர் பதவியினின்றும் நீக்கி அவருக்குத் துணைபுரிய வந்த ஆங்கிலச் சேனையைத் தாக்கினார்கள். பல உத்தியோகஸ்தர்களைக் கொலை செய்தார்கள். இதனால் ஆங்கிலப் பாடைத் தலைவரான காப்டன் மக்னாட்டன் தமது சேனையுடன் இந்தியாவுக்குத் திரும்பச் சம்மதித்துப் புறப்பட்டார். ஆப்கானியர் ஆங்கிலச் சேனையைத் துன்புறுத்தாது வழியனுப்புவதாய் ஒப்புக்கொண்டும் கணவாய்களைக் கடந்து செல்லும்போது நம்பிக்கைத் துரோகம் செய்து சேனையைச் சின்ன பின்னம் செய்துவிட்டார்கள். கண்டஹார், ஜலாலாபாத் முதலிய இடங்களை மாத்திரம் ஆங்கிலச் சேனை கைவிடாது பாதுகாத்து வந்தது.

இச் சமயத்தில் ஆக்லண்டு பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். எல்லென்பரோ பிரபு கவர்னர் ஜனரல் பதவியை வகித்தார். இவர் ஆப்கானிஸ்தானத்திலிருந்து திரும்பி, வந்து கொண்டிருந்த ஆங்கில சைனியத்துக்கு நேர்ந்த கதியைக் கேள்வியுற்றுக் காப்டன் பொலக் என்னும் தளகர்த்தருடைய தலைமையில் ஒரு சேனையை அனுப்பி ஜலாலாபாத்திலும், காண்டஹாரிலும் இருந்த ஆங்கிலேயருக்குத் துணைபுரிந்தார். ஆப்கானியர் தோல்வியுற்றனர். டோஸ்ட் முகம்மது மறுபடியும் அமீராக்கப்பட்டார். ஆங்கிலேயருடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொண்டார்.

சிந்துதேசம் ஆங்கிலேயர் வசமானது :— ஆப்கானியர் ஆங்கிலேயரைத் தாக்கியதைக் கண்ட சிந்து நாட்டு அமீர்களும் கலகம் செய்தார்கள். அந்தப் பிரதேசம் வியாபாரம் செய்வதற்கு ஏற்றதாய் இருந்ததாலும், அந்த வழியாக எல்லைப்புறத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் இருந்ததாலும் கவர்னர் ஜனரல் சிந்து நாட்டைப் பிடித்துக்கொள்ளத் தீர்மானித்தார். ஆகவே அவர் ஸர் சார்ல்ஸ் நேப்பியர் என்பவரின் தலைமையில் ஒரு சேனையைத் அனுப்பி மியானி, ஹைதராபாத் என்னுமிடங்களில் சிந்து அமீர்களைத் தோற்கடித்து அந்நாட்டைப் பிடித்துக் கொண்டார். கி. பி. 1843-முதல் சிந்து நாடு பிரிட்டிஷ் இராஜ்யத்தின் ஒரு பாகமாயிற்று.

அப்பியாசம்

1. ஆங்கிலேயர் ஆப்கன் அமீரின் சிநேகத்தை நாட வேண்டிய அவசியமென்ன?

2. நேச உடன்படிக்கை செய்து கொள்வதற்கு டோஸ்ட் முகம்மது என்ன நிபந்தனையைக் கூறினார்?

3. ஷாஷுஜாவை மறுபடியும் அமீராக அங்கிலேயர் செய்துவைக்க முற்பட்டதற்குக் காரணம் என்ன?

4. ஷாஷுஜாவை ஆப்கானியர் விரும்பவில்லை. ஏன்?

5. ஆபகானிஸ்தானத்தில் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், அவைகள் நிவர்த்திக்கப்பட்ட விதத்தையும் சுருக்கமாய்க் கூறுக.

4. சீக்கிய யுத்தம்

எல்லன்பரோ பிரபு ஆப்கானியச் சண்டையில் வெற்றியை நிலைநாட்டிய பின்னர் கி. பி. 1844-ல் தமது பதவியினின்றும் விலகி இங்கிலாந்து சென்றார். அவர் அடுத்து வந்தவர் ஹார்டிஞ்சு பிரபு. இவர் ஒரு சிறந்த போர் வீரர். இவர் காலத்தில் சீக்கியர்களோடு யுத்தம் நடைபெற்று. அதில் ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைத்தது.

சீக்கியர் வரலாறு :—சீக்கியர் யார் என்பதை நீங்கள் கீழ் வகுப்பில் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். டில்லி, சுல்தான்களின் ஆட்சியில் இருந்து வந்த காலத்தில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அவ்வப்போது சண்டைகள் ஏற்பட்டு வந்தன. இவைகளை போக்கி ஒற்றுமையை ஏற்படுத்தக் குரு நானக்ஷா என்பவர் இந்தப் புதிய மதத்தை ஏற்படுத்தினர். அமிர்தஸரஸ் என்னும் நகரம் இவர்களுக்குப் புண்ணிய ஸ்தலம். அங்குள்ள பொற் கோயிலில் இவர்கள் வருஷந்தோறும் கூடுவது வழக்கம்.

20. நானக்ஷாக்

சீக்கியர்கள் பரம்பரையாகக் குருமார்கள் தோன்றி இவர்களின் மத உணர்ச்சியையும், பக்தியையும் வளர்த்து வந்தார்கள். மொகலாய மன்னர்களுக்கும், சீக்கியக் குருமார்களுக்கும் ஏற்பட்ட சண்டைகளால் முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் வேற்றுமை அதிகமாயிற்று. சீக்கியர்கள் போர் புரிவதில் சிறந்த வீரர்களாகிவிட்டனர். நாளடைவில் சீக்கியர் பஞ்சாப்பில் பல சிறிய இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த இராஜ்யங்களுக்கு 'மிஸில்கள்' என்று பெயர்.

21. அமிர்தஸரஸ்-பொற் கோயில்

ரஞ்சித் சிங் (1780-1839):—பஞ்சாப்பில் பல சிறிய சீக்கிய மிஸில்கள் தோன்றின அல்லவா? அவைகளில் ஒன்றுக்குத் தலைவராக ரஞ்சித் சிங் என்பவர் தோன்றினார். இவர் படிப்பில்லாதவராயி

னும் நுட்பமான அறிவும், ஆற்றலும் படைத்தவர். இவர் தமது பராக்கிரமத்தால் தமது அதிகாரத்தையும் ஆட்சியையும் பஞ்சாப் முற்றிலும் பரப்பி, அங்கிருந்த மிஸில்களை எல்லாம் தமக்கு உட்படுத்திக் கொண்டார். ஆப்கானியருக்குச் சொந்தமான பெஷாவரையும் பிடித்துக் கொண்டாரென்பதை முன் பாடத்தில் படித்தோம். இவருடைய ஆதிக்கம் ஸத்லெஜ் நதிவரையிலும் பரவி விட்டது. அந்த நதியின் கிழக்கிலிருந்த சில இராஜ்யங்களையும் இவர் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயன்றார். அப்போது பாடியாலா, கபூர்த்தலா முதலிய இராஜயங்களை ஆண்டுவந்த சீக்கிய மன்னர்கள் ஆங்கிலேயருடைய உதவியை நாடினர்கள். அதன் பயனாகத்தான் கி. பி. 1809-ல் ரஞ்சித் சிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன் பிறகு ரஞ்சித்சிங் அவ் வுடன்படிக்கையின்படி நடந்து கொண்டது மல்லாமல் ஆங்கிலேயருடைய சிறந்த நண்பராகவும் இருந்தார். இவர் காலத்தில் சீக்கியர் உன்னத நிலையடைந்தார்கள். இவர் தம் மக்களை ஒற்றுமை படுத்தி அவர்களுக்குள் தைரியத்தை வளர்த்தார். இவர் கி. பி. 1838-ல் காலமானர்.

முதல் சீக்கிய யுத்தம் :—ரஞ்சித் சிங் இறந்த பின்னர் பஞ்சாபில் குழப்பமும், அராசகமும் அதிகரித்தன. பல கொலைகள் நிகழ்ந்தன. ரஞ்சித் சிங்கின் குமாரர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பட்டம் பெற்று வந்தார்கள். கடைசியாக, ரஞ்சித் சிங் இறந்து ஐந்து வருஷங்கள் அவருடைய கடைசி

ரான துலீப் சிங் என்னும் சிறுவர் சிங்காதனத்தில் அமர்த்தப்பட்டார். இச் சிறுவருக்கு அப்பொழுது ஐந்து வயது. அவரது தாயார் அவருக்குப் பதிலாக



22. சீக்கிய யுத்தங்களும், சிப்பாய்க் கலகமும்

ஆண்டுவந்தாராயினும், அதிகாரமெல்லாம் ராணுவத்தின் கையிலிருந்தது. லால் சிங், தேஜ சிங் என்னும் வீரர்கள் ராணுவத்தை நடத்தி வந்தார்கள். இவர்

கள் சத்லெஜ் நதியைக் கடந்து ஆங்கிலேயரின் அதி காரத்திற்குட்பட்ட நாடுகளில் நுழைந்து, அங்குள்ள இராஜ்யங்களைத் தாக்க ஆரம்பித்தனர்.

இக் காலத்தில் கவர்னர் ஜனரலா யிருந்த ஹார்டிஞ்சு பிரபுவும், ஸர்ஹியூ கப் என்னும் சேனைத் தலைவரும் ஒரு சைனியத்தைத் திரட்டிக் கொண்டு போய்ச் சீக்கியரை, மூட்கி, பிரோஜ்ஷா என்னுமிடங்களில் தோற்கடித்தார்கள். அடுத்த வருஷம், அதாவது 1846-ல் மறுபடியும் அலிவால் சொப்ரைன் என்னு மிடங்களில் ஆங்கிலேயர் சீக்கி யரைத் தாக்கினர்கள். சீக்கியர் பெருந்தோல்வி யடைந்தனர். அவர்கள் தலைவரான லால் சிங் போர் முனையிலிருந்து புறங்காட்டி யோடினர். சீக் கியத் தலைநகரான ஸாஹூர் ஆங்கிலேயர் வசமா மாயிற்று. கடைசியில் சீக்கியர் ஆங்கிலேயருடன் லாஹூரில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர் (1846).

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆங்கிலே யருக்கும், சீக்கியருக்கும் எல்லையாக ஸத்லெஜ் நதி இருந்தது போய் பீயாஸ் நதி எல்லையாக அமைந் தது. எனவே ஸத்லெஜ்—பீயாஸ் நதிகளுக்கு மத் தியிலிருந்த பாகம் ஆங்கிலேயர் வசமாயிற்று. லாஹூரில் ஒரு பிரிட்டிஷ் ஸ்தானிகர் இருக்க வேண்டுமென்றும், அவருடைய மேற் பார்வையில் சீக்கிய துரைத்தனம் நடைபெற வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அமைதியை நிலை நிறுத் துவதற்காக ஓர் ஆங்கில இராணுவப்படை லாஹூ

ரில் இருக்க வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. யுத்தத்தால் ஏற்பட்ட நஷ்டத்திற்காகச் சீக்கியர் ஐம்பது லக்ஷம் ரூபாய் கொடுக்கச் சம்மதித்தார்கள். காஷ்மீர், சீக்கிய இராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டது. அதை ஆங்கிலேயர் ஜம்மூ அரசராகிய குலாப் சிங்குக்கு ஒரு கோடி ரூபாய்க்கு விற்றூர்கள். சீக்கிய இராணுவ பலம் குறைக்கப்பட்டது. இந்த லாஹூர் உடன் படிக்கையோடு முதல் சீக்கிய யுத்தம் முடிவு பெற்றது.

ஹார்டிஞ்சு பிரபு செய்த சீர்திருத்தங்கள் :—ஹார்டிஞ்சு பிரபு காலத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இவர் வருவதற்கு முன்பே நீர்ப் பாசன வசதியளிப்பதற்காக கங்கை நதியிலிருந்து கால்வாய் வெட்ட ஆரம்பிக்கப்பட்டது. அதை இவர் துரிதமாக முடித்து நீர்ப்பாசன வசதியைச் செய்து கொடுத்தார். ஆங்கிலேயர் வசமிருந்த மாகாணங்களில் உடன் கட்டை ஏறும் வழக்கம் நிறுத்தப்பட்டது போலச் சுதேச இராஜ்யங்களில் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்தி வைக்க இவர் பெரு முயற்சி செய்து வெற்றி பெற்றூர்.

அப்பியாசம்

1. சீக்கியர் ஏன் சிறந்த போர்வீரர்களாயினர் ?

2. சீக்கியரின் முக்கியமான புண்ணிய ஸ்தலம் எது? அதன் சிறப்பைக் கூறு.

3. ரஞ்சித் சிங்கைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்க ?

4. ரஞ்சித் சிங்குக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்ன? அது ஏற்படக்காரணம் என்ன?

5. முதல் சீக்கிய யுத்தத்தின் காரணம் என்ன?

6. லாஹூர் உடன்படிக்கை ஏற்பட்ட வரலாற்றையும் அதன் அம்சங்களையும் கூறுக.

7. பஞ்சாப் பிரதேசத்தின் படம் வரைந்து லாஹூர், அமிர்தஸ்ரஸ், அலிவால், மூட்கி, பிரோஜஷா, சொப்ரைன், ஹூடியாரு என்னுமிடங்களைக் குறிப்பிடுக.

7, காஷ்மீர் பிரதேசத்தை ஆங்கிலேயர் யாருக்குக் கொடுத்தார்கள்?

---

5. டெல்ஹௌஸி பிரபு

(1848-56)

ஹார்டிஞ்சு பிரபுக்குப் பின் டெல்ஹௌஸி பிரபு கவர்னர் ஜனரலாக நியமிக்கப்பட்டார். இவர் இதுவரையில் கவர்னர் ஜனரலாக இருந்தவர்களை விட வயதில் சிறியவரானும் கல்வி கேள்விகளிலும் அனுபவத்திலும் சிறந்தவர். இவர் இங்கிலாந்தில் மந்திரி சபையில் அங்கம் வகித்து அனுபவம் பெற்றிருந்தார். இந்தியாவில் ஆங்கில இராஜ்யத்தைப் பரவச் செய்தவர்களில் இவரும் ஒருவர். வெல்லெஸ்லி பிரபுவைப் போல் இவரும் இந்தியாவின் நன்மைக்குச் சுதேச மன்னர்களின் ஆட்சியைவிட ஆங்கில ஆட்சியே மேலானது என்று கருதினர்.

ஆகையால் இவர் நியாயமான எல்லாமுறைகளிலும் ஆங்கில இராஜ்யத்தையும், ஆட்சி முறையையும் பரப்ப முயன்றார்.

23. டெல்ஹௌஸி பிரபு

இவர் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பல. அவைகளின் பலனாக இந்தியாவில் ஆங்கில இராஜ்யம் சற்றேறக்குறைய தற்காலத்தில் அடைந்துள்ள நிலைமைக்கு வந்து விட்டது.

இரண்டாம் சீக்கிய யுத்தம் :- முதல் சீக்கிய யுத்தத்தின் கடைசியில் சீக்கியர் லாஹூர் சமாதான உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார்களாயினும் அவர்கள் தங்கள் சுதந்திரத்தை இழந்து வாழ இச்சை கொள்ளவில்லை. அவர்கள் ஆங்கிலேயர் மீது கொண்டிருந்த பகைமை உள்ளுக்குள்ளேயே இருந்துகொண்டிருந்தது. இந்த நிலைமையில் ஒரு சம்பவம் நடந்தது.

சீக்கிய இராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வைகளில் முல்டான் ஒன்று அம்மாகாணத்தில் மூல்ராஜ் என்பவர் கி. பி. 1848 வரையில் கவர்னராக இருந்தார். இவர் எப்படியும் லாஹூர் உடன்படிக்கையைத் தகர்த்து ஆங்கிலேயரோடு போர் தொடங்கவேண்டுமென்னும் எண்ணங் கொண்டார். ஆகையால் அவர் லாஹூர் அதி

காரிகளுக்குத் தமது மாகாணத்தின் சார்பாகச் செலுத்தவேண்டிய கப்பம் செலுத்த மறுத்தார். லாஹூரில் ஆங்கில ஸ்தானிகரின் மேற்பார்வையில் சீக்கிய அரசாட்சி நடைபெற்று வந்ததல்லவா? அந்த ஸ்தானிகர் மூல்ராஜை மிரட்டிப் பணத்தைச் செலுத்தி விடும்படி கண்டிப்பாகக் கேட்டார். மூல்ராஜ் பணத்தைச் செலுத்தாமலே தமது பதவியை ராஜீநாமா செய்துவிட்டார். இரண்டு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களையும் கணிதப் பரிசோதகர்களையும் ஆங்கில ஸ்தானிகர் அனுப்பினார் மூல்ராஜின் ஏவுதலின் பேரில் இந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் கொலை செய்யப்பட்டனர். இதனால் டெல்ஹௌஸி பிரபு போர் தொடங்க நேரிட்டது. ஸர் ஹியூ கப் என்பவரைக் கவர்னர் ஜனரல் ஒரு பெரும் படையுடன் அனுப்பினார்.

மூல்ராஜ் சீக்கியரிடம் சென்று, தாம் தொடங்கியிருப்பது சீக்கியரின் சுதந்தரத்தைக் காப்பதற்கான போர் என்று சொல்லி அவர்களுடைய ஆதரவைப் பெற்றார். லாஹூரிலிருந்த சீக்கிய அதிகாரிகளும் ஆங்கிலேயருக்கு விரோதமாய் மூல்ராஜுடன் சேர்ந்து கொண்டார்கள்.

யுத்தம் சிலியன்வாலா, குஜராத் என்னு மிடங்களில் நடைபெற்றது. சிலியன்வாலாவின் ஆங்கிலேயருக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. ஆனால் குஜராத்தில் சீக்கியர் வெகு மும்முரமாகச் சண்டை செய்தும் முறியடிக்கப்பட்டனர். வெற்றிபெற்ற ஆங்கிலேயர் லாஹூர் மன்னரான துலீப் சிங்குக்கு

உபகாரச் சம்பளம் கொடுத்துப் பஞ்சாப்பை ஆங்கில இராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பஞ்சாப் மாகாண விஷயங்களைக் கவனித்து, சீர்திருத்தி, நாட்டில் அமைதி, நீதி இவைகளை நிலை நிறுத்த ஏற்பாடுகள் செய்ய ஹென்றி லாரென்ஸ், ஜான் லாரென்ஸ் என்னும் இரு சகோதரர்களையும், மற்றொரு கனவானையுங் கொண்ட பஞ்சாயத்தை டெல்ஹௌஸி ஏற்படுத்தினர். லாரென்ஸ் சகோதரர்கள் அரும்பாடுபட்டுப் பஞ்சாப் அரசாட்சியை ஒழுங்கு படுத்தினர்கள். இவர்கள் தமது அன்பினாலும், நடைத்தைகளினாலும் சீக்கியர் கொண்டிருந்த பகையைப் போக்கி அவர்களுடைய விசுவாசத்தைச் சம்பாதித்துக் கொண்டார்கள். இதனால் இதன் பிறகு சுமார் ஒன்பது வருஷங்களுக்குப் பின்னர் நடந்த சிப்பாய்க் கலகமென்னும் சுதந்தரப்போரில் சீக்கியர் ஆங்கிலேயருத் துணையாக நின்றனர்.

ஜான் லாரென்ஸ் ரோட்டுகள் அமைத்தல், நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தல், கால்வாய்கள் வெட்டுதல், வரி விதித்தல் முதலிய அரசாங்க விஷயங்களை எல்லாம் ஒழுங்குப்படுத்தித் துரைத்தன ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். பிறகு ஹென்றி இராஜபுதனத்திற்குப் பிரிட்டிஷ் பிரதிநிதியாகவும், ஜான் பஞ்சாப் மாகாணத்தில் மேல் அதிகாரியாக உத்தியோகம் பெற்றார்கள்.

சீக்கிய யுத்தம் முடிந்த பிறகு ஆங்கிலேய இராஜ்யம் வடமேற்கில் சிந்து நதியையும் கடந்து வெகுதூரம் பரவிற்று.

இரண்டாம் பர்மா யுத்தம் (1851-52) :—யாண்டபூ உடன் படிக்கைக்குப் பிறகு பல ஆங்கிலேய வர்த்தகர் இரங்கூன் பிரதேசத்தில் வர்த்தகம் செய்து வந்தார்கள். ஆனால் பர்மிய உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்குப் பலவிதத் துன்பங்களை விளைவித்து வந்தனர், டெல்ஹௌஸி ஒரு கப்பற்படையை அனுப்பி ஆங்கில வியாபாரிகள் அடைந்த நஷ்டத்தை ஈடு செய்து கொடுக்க வேண்டுமென்று பர்மிய துரைத்தனத்தாரைக் கேட்டார். இதற்குப் பர்மியர்கள் சரியான பதில் அளிக்கவில்லை. ஆகையால் போர் தொடங்கிற்று. ஆங்கிலச் சேனை தென் பர்மாவிலுள்ள தலைநகரங்களைப் பிடித்துக்கொண்டது. பிறகு ஆங்கிலேயர் தென் பர்மாவை பிரிட்டிஷ் இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டனர்.

சுதேச இராஜ்யங்களைச் சேர்த்துக் கொண்டது:—சுதேச மன்னர்களில் பலர் தமக்குப் பிள்ளைகள் இல்லாவிடில் ஸ்வீகாரம் செய்து கொள்வது தொன்றுதொட்டு இந்நாட்டில் அனுசரிக்கப்பட்டு வந்த வழக்கம் டெல்ஹௌஸி 'அரசிழக்கும் கோட்பாடு' (Doctrine of Lapse) என்னும் ஒரு புதிய திட்டத்தை அனுசரிக்கலானார். சுதேச மன்னர்கள் பிள்ளைகள் இல்லாமல் இறந்துவிட்டால் அவர்களுடைய இராஜ்யம் ஆங்கில இராஜ்யத்தோடு சேர்ந்துவிடும் என்பது இதன் கருத்து. சுதேச மன்னர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அனுமதியின்றி ஸ்வீகாரம் செய்து கொள்ளக் கூடாதென்றும், ஸ்வீகார புத்திரன் பட்டத்திற்கு உரியவனல்ல

வென்றும் டெல்ஹௌஸி தெருவித்தார். இதைப் பல இந்திய மன்னர்கள் கண்டித்தார்கள். எனினும் டெல்ஹௌஸி தமது தீர்மானத்தையே நிறைவேற்றினர்.

கடைசி மஹாராஷ்டிர யுத்த முடிவில் சதாராவில் சிவாஜியின் சந்தியார் ஒருவருக்கு ஒரு சிறிய இராஜ்யம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதென்று படித்தோமல்லவா? அவ்வரசர் பிள்ளையில்லாமல் இறந்து விடவே அந்த ராஜ்யத்தை டெல்ஹௌஸி ஆங்கில இராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். இது போலவே நாகப்பூர், சம்பல்பூர், ஜான்ஸி முதலியவைகளும் சேர்க்கப்பட்டன. ஜான்ஸி மன்னர் ஆங்கிலேயரது சிறந்த நண்பர். அவர் ஆங்கிலேயருக்குத் தெரிவித்தே ஸ்வீகாரம் செய்து கொண்டார். எனினும் அந்த ஸ்வீகாரத்தையும் டெல்ஹௌஸி ஒப்புக்கொள்ள மறுத்தார். இதனுல் மனக்கொதிப்பு அடைந்த ஜான்ஸி ராணியார் லக்ஷிமிபாய். ஆங்கிலேயருக்கு விரோதமாகத் திரும்பிச் சிப்பாய்க் கலகத்தில் போர் புரிந்தார்.

பீஷ்வா பதவினின்றும் விலகி உபகாரச் சம்பளம் பெற்று வந்த பாஜிராவ் இறந்த பின்னர் அவருடைய மைந்தர் நானு சாகிபுக்கு அந்த உபசாரச் சம்பளத்தைக் கொடுக்க டெல்ஹௌஸி மறுத்தார்.

அயோத்தியைச் சேர்த்துக் கொண்டது :—அயோத்தி நாட்டு மன்னர் தம குடிகளைக் கொடுமையாக நடத்தி வந்தார். ஜனங்கள் படும் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு நவாப்புக்கு 12 லக்ஷம்

ரூபாய் வருஷவாரியில் உபகாரச் சம்பளம் கொடுத்து அயோத்தியை ஆங்கில இராஜ்யத்தோடு டெல்ஹௌஸி சேர்த்துக் கொண்டார்.

டெல்ஹௌஸி செய்த சீர்திருத்தங்கள் :—இவர் குடிகளின் சௌகரியத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பலவிடங்களில் நீர்ப்பான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பொது மராமத்து வேலைகளையும், கட்டட வேலையையும் கவனிக்கக் கட்டட இலாகா ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் கல்விவிருத்திக்காகத் தனி இலாக்காக்களை ஏற்படுத்திப் பாடசாலைகளையும் வெகுவாக ஸ்தாபித்தார். இந்தியர் ஸ்தாபிக்கும் பாடசாலைகளுக்கு உதவி புரியவும் ஏற்பாடுகள் செய்தார். பம்பாய், கல்கத்தா, சென்னை நகரங்களில் சர்வ கலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

தந்தி, தபால், இருப்புப்பாதைகள் :—டெல்ஹௌஸி காலத்தில் தந்தி, தபால் வசதிகள் ஜனங்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டன. எவ்வளவு தூரத்திலிருக்கும் ஊருக்காயினும் முக்காலணா செலவில் கார்டையும், ஓரணா செலவில் கடிதத்தையும் அனுப்ப முடிகிறதல்லவா? இந்தச் சௌகரியம் இவர்காலத்தில் தான் ஏற்பட்டது. இவர் காலத்தில்தான் இந்நாட்டில் முதல் முதல் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன.

1853-ம் வருஷத்திய சட்டம் :—கிழக்கு இந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட சாஸனம் 1853-ல்

புதுப்பிக்கப்பட்டது. இந்த சாஸனத்தில் காலவரம்பு குறிக்கப்படவில்லை. பார்லிமெண்டார் விரும்பும் போது இந்திய அரசியல் விஷயத்தைக் கிழக்கு இந்



24. இந்தியா-1856

தியக் கம்பெனியிடமிருந்து தாமே ஏற்றுக்கொள்ள லாம் என்று குறிக்கப்பட்டது. கம்பெனியின் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் விசாரணைத்

தலைவர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டது. வங்காளமும், பீஹாரும் தனி மாகாணங்களாக்கப் பட்டன.

இந்தத் திருத்தங்களைச் செய்த பின்னர் டெல்ஹௌஸி தமது தாய் நாடு திரும்பினார்.

அப்பியாசம்

1. டெல்ஹௌஸி எவ்வித நோக்கத்தோடு இந்தியாவுக்கு வந்தார்.

2. இரண்டாவது சீக்கிய யுத்தத்திற்குக் காரணம் என்ன ?

3. பஞ்சாப் மாகாணத்தை நன்கு அமைக்க உதவியது யார் ?

4. இரண்டாம் பர்மா யுத்தத்தின் காரணங்களையும் பலன்களையும் கூறுக.

5. டெல்ஹௌஸி ஆங்கில இராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்ட சுதேச இராஜ்யங்களையும், அவைகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அவர் கூறிய காரணங்களையும் விவரி.

6. டெல்ஹௌஸி காலத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் யாவை ?

7. இந்தியா படம் வரைந்து டெல்ஹௌஸி காலத்தில் ஆங்கில இராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்ட இராஜ்யங்களைக் குறிப்பிடு.

6. கானிங் பிரபு—சிப்பாய்க் கலகம்

டெல்ஹௌஸிப் பிரபுவைப் பின்பற்றி கானிங் பிரபு கவர்னர் ஜனரலாக வந்தார். டெல்ஹௌஸி கையாண்டுவந்த முறைகளினால் நாட்டில் அமைதியின்மையும் கிளர்ச்சிகளும் உண்டாயின. இவைகளின் பயனாகக் கானிங் பிரபு உத்தியோகம் ஏற்றபின் அவை சிப்பாய்க் கலகமாக உருக்கொண்டெழுந்தன. இச்சிப்பாய்க்கலகம் கி. பி. 1857-ல் வட இந்தியாவில் பற்பலவிடங்களில் சம்பவித்தன. இதில் சிப்பாய்கள் மாத்திரமேயின்றிப் பொதுமக்களில் பலரும், சுதேச மன்னர்களில் ஒரு சிலரும் கலந்துகொண்டனர், சுதந்திரத்திற்காக நடை பெற்ற போரென்று இதைச் சிலர் கருதுகின்றனர். எனினும் இது கடைசியில் சிப்பாய்கள் கலகமாகவே முடிந்தது.

25. கானிங் பிரபு

சிப்பாய் கலகத்தின் காரணங்கள்:-சிப்பாய்க் கலகம் நடைப்பெற்றதன் காரணங்கள் மூன்று வகைப்படும்.

அரசியல் காரணங்கள்-டெல்ஹௌஸியின் ஆட்சி முறை ஆங்கிலேயருக்கு விரோதமாகப் பலரையும் கிளப்பிவிட்டது. கடைசி பீஷ்வாவான பாஜிராவின்

ஸ்வீகார புத்திரர் நானுசாகேப் என்பவருக்கு உபகாரச் சம்பளம் மறுக்கப்பட்டது. ஆகையால் அவர் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பி ஜனங்களைக் கலகம் செய்யும்படி தூண்டி வந்தார்.

அயோத்தியில் நவாப்புக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு இவருடைய இராஜ்யம் ஆங்கில இராஜ்யத்தோடு சேர்ந்துக் கொள்ளப்பட்டதல்லவா? அதை அந்த இராஜ்யத்திலுள்ள ஜனங்களில் சிலர் விரும்பவில்லை. மேலும் தாலுக்காதார்கள் எனப்படும் ஜமீன்தார்கள் வைத்திருந்த நிலங்களை ஆங்கிலேயர் ஸ்வாதீனம் செய்து கொண்டனர். இதனல் தாலுக்காதார்களும் விரோதமாகக் கிளம்பினுர்கள்.

டெல்ஹௌஸி கையாண்ட 'லாப்ஸ், (அரசிழக்கும் கேட்பாடு) முறையால் ஜான்ஸி இராணியார் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பியதை நாம் முன் பாடத்திலேயே படித்துள்ளோம்.

ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட இராஜ்யங்களில் வேலையிலிருந்து வந்த உத்தியோகஸ்தர்கள் பலருக்கு உத்தியோகங்களில்லாது போனபடியால் இவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டநிலைமைக்கு ஆங்கிலேயர்கள்தான் காரணம் என்று அவர்கள் நினைத்துக் கோண்டு விரோதங் கொள்ளனுர்கள்.

இவ்வாறு அரசியல் காரணங்களால் நாலா பக்கங்களிலும் ஆங்கிலேயருக்கு விரோதிகள் தோன்றி விட்டார்கள்.

மத சம்பந்தமான காரணங்கள் :—மேற் கூறிய காரணங்களேயன்றிப் பொதுமக்களில் பலரை ஆங்கிலேயருக்கு விரோதமாக நிற்கச் செய்த காரணங்களில் மத சம்பந்தமானவை சில உண்டு. சதி முதலிய கொடிய வழக்கங்களை ஒழிக்க டெல்ஹௌஸி அரும்பாடு பட்டார் அல்லவா? இந்த நற்செயலின் உண்மையான கருத்தை அறியாத சிலர் ஆங்கிலேயர் இந்துக்களின் ஆசாரங்களைக் கெடுக்க முயல்கின்றனர் என்னும் தப்பான அபிப்பிராயத்தைப் பரப்பி வந்தார்கள்.

இவ்வாறு விரோத பாவத்தைக் கிளப்பி வந்தவர்கள் மற்றுஞ் சில விஷயங்களை சேர்த்துப் பிரசாரம் செய்தார்கள். சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த புதிய தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் பூசப்பட்டிருப்பதாக இவர்கள் சொல்லி வந்தார்கள். இதனால் இந்துக்கள், முஸ்லீம்கள் யாவரும் ஆங்கிலேயர் மீது கோபங்கொள்ள இடமுண்டாயிற்று.

ராணுவ சம்பந்தமான காரணங்கள்:-இராணுவத்தில் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் வித்தியாசங்கள் இருந்து வந்தன. சேனையில் வங்க நாட்டு பிராமணர்களும் சிலர் இருந்து வந்தனர். பர்மா யுத்த காலத்தில் படைகள் கடல் கடந்து சென்று போர் புரிய நேரிட்டது. பிராமணர் கடல் கடந்து செல்வது தங்கள் மதக் கோட்பாடுகளுக்கு விரோதம் என்று கூறிக் கடல் கடக்க மறுத்தனர். இதனால் அவ்வித ஆட்சேபனைகளுடையவர்களைச் சேனை

யில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவங்கள்:—மேற்கூறிய காரணங்களினால் கலகம் நிகழ்ந்தது. முதலில் கலகம் 1857-ல் மே மாதம் மீரட் என்னும் நகரத்தில் ஆரம்பித்தது. அங்கே கலகம் செய்த சிப்பாய்கள் ஆங்கில உத்தியோகஸ்தர்களைக் கொலை செய்து சிறையிலடைக்கப்பட்டிருந்த கைதிகளையெல்லாம் விடுதலை செய்தனர். பிறகு இவர்கள் டில்லியைப் பிடித்துக் கொள்ளும் நோக்கத்துடன் புறப்பட்டார்கள்.

கலகக்காரர்கள் டில்லியில் நுழைந்து மொகலாய வம்சத்துக் கடைசி சக்ரவர்த்தியெனப் பெயரளவில் பட்டம் வகித்துவந்த பகதூர்ஷாவைச் சிம்மாசனத்தில் அமர்த்தி இந்திய சக்ரவர்த்தி என்று பட்டம் கட்டிவிட்டார்கள்.

கலகத்தில் நானாசாகிப், ஜான்ஸி லக்ஷ்மிபாய் குவாலியரைச் சேர்ந்த தாந்தியாதோபி முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.

கான்பூரிலிருந்த ஆங்கில படையை நானாசாகிப் சூழ்ந்து கொண்டார். ஆங்கிலேயர் வேறுவழியின்றிப் பணிய வேண்டியதாயிற்று. நானாசாகிப் அவர்களைப் பிரயாசைக்கு அனுப்புவதாகக் கூறிப்படகிலேற்றி அவர்களைச் சுட்டுக் கொன்றார்.

லக்னோவிலும் கலகக் கூட்டத்தார் ஆங்கில ராணுவ ஸ்தலத்தைச் சூழ்ந்து கொண்டனர். அங்கே இருந்துவந்த ஸர் ஹென்ரி லாரென்ஸ் தைரியமாகப் போர் புரிந்தும், உயிர் துறக்க நேரிட்டது.

இந்த நிலைமையில் கவர்னர் ஜனரல் ஹாவேலக் என்னும் தலைவரோடு ஒரு சேனையை அனுப்பிக் கலகத்தை அடக்க முயன்றார். ஹாவெலக் கான்பூரில் கலகத்தை அடக்கச் சென்றார். அங்குள்ள சிப்பாய்கள் தோற்றுப் போகவே நானுசாகிப் ஓடிப் போய் விட்டார்.

பிறகு ஹாவெலக்கும், காம்பெல் என்னும் தளகர்த்தரும் சேர்ந்து லக்னேவில் கடும் போர் புரிந்து அந்நகரைக் கைப்பற்றினர்.

கடைசியாக டில்லிநகரை முற்றுகையிட்டுக்கடும் போர் புரிந்து அதையும் கைப்பற்றினர். மொகலாய சக்ரவர்த்தியைக் கைது செய்து இரங்கூனுக்கு அனுப்பிவிட்டார்கள்.

கானிங் பிரபு கலகம் செய்த சிப்பாய்கள் தங்கள் ஆயுதங்களை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துக் கலகம் செய்யாது பணிந்து விட்டால் அவர்களை மன்னித்து விடுவதாக அறிவித்தார். இதை ஒப்புக் கொண்டு சிப்பாய்கள் கலகத்தை நிறுத்திவிட்டனர்.

கொஞ்சங் கொஞ்சமாகக் கலகம் தணிந்தது. இங்கிலாந்தில் ஆட்சி செய்துவந்த விக்டோரியா மகாராணியார் இந்திய அரசியல் பாரத்தைத் தாமே வகித்தார். கம்பெனியாரின் ஆட்சி முடிவுபெற்றது.

அப்பியாசம்

1. சிப்பாய்க் கலகத்திற்கு முக்கியமானகாரணங்கள் எத்தனை வகைப்படும்?

2. அரசியல் சம்பந்தமான காரணங்களைக் கூறுக.

3. சிப்பாய்க் கலகம் எங்கே தொடங்கிற்று? எவ்வாறு தொடங்கிற்று?

4. கான்பூரில் நடைபெற்ற சம்பவங்களைச் சுருக்கமாக எழுதுக.

5. கலகம் எவ்விதம் அடக்கப்பட்டது?

6. சிப்பாய்க் கலகத்தினால் இந்திய ஆட்சி முறையில் எவ்வித மாறுதல் ஏற்பட்டது?

---

7. மகாராணியாரின் விளம்பரம்

டெல்ஹௌஸி கவர்னர் ஜனரலாக இருந்த காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட சாஸனம் புதுப்பிக்கப்பட்டது அல்லவா? அக்காலத்திலேயே இங்கிலாந்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. வியாபாரம் செய்வதற்காக ஏற்பட்ட ஒரு கம்பெனியார் பிரிட்டிஷ் தீவுகளைவிடமிகப்பெரிய இராஜ்யம் ஒன்றை ஆளுவது நியாயமல்லவென்பது அக்கிளர்ச்சியின் கருத்து. அக் கிளர்ச்சியின் காரணமாகத் தான் 1853-ல் செய்யப்பட்ட சாஸனத்தில் கால வரம்பு குறிப்பிடாது, ஆங்கில துரைத்தனத்தார் விரும்புங் காலத்

26. விக்டோரியா மகா ராணியார்

தில் அதை முடிவுபெறச் செய்யலாம் என்று கண்டிருந்தது.

சிப்பாய்க் கலகம் நேரிட்டதும் கம்பெனி ஆட்சி இனி இந்தியாவில் கூடாது என்னும் கூக்குரல் இங்கிலாந்தில் கிளம்பியது. ஆங்கில துரைத்தனத்தாரும் இனி இந்தியாவில் கம்பெனி ஆட்சி நீடித்திருக்கலாகாதென்று தீர்மானித்து விட்டார்கள். 1858-ல் விக்டோரியா மகாராணியார் இந்திய அரசாங்கத்தைத் தாமே ஏற்றுக் கொண்டார். இந்தியாவின் ஆட்சி அவர் பெயராலேயே நடைபெற்று வர ஆரம்பித்தது.

விக்டோரியா மகாராணியார் இந்திய ஆட்சியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது இந்திய மன்னர்களுக்கும், பிரஜைகளுக்கும் ஒரு பஹிரங்க விளம்பரத்தை வெளியிட்டார். அது சரித்திரப் பிரசித்தமான சாஸனமாகும். அதில் மகாராணியார் இந்தியர்களுக்குச் சில வாக்குறுதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறார்.

ஜாதி, மத வித்தியாசமின்றி எல்லோரையும் ஒரே விதமாக நடத்துவதாகவும், ஒருவருடைய மதாசார வழக்கங்களில் அவர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் வண்ணம் தலையிடுவதில்லை, என்றும் அவர் தெரிவித்தார். இனித் துரைத்தன உத்தியோகங்களுக்குக் கல்வி முதலிய யோக்யதைகளே யன்றி ஜாதி முதலிய காரணங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாவென்றும், எல்லா மக்களுக்கும் உத்தியோகங்களைப் பெற சம உரிமை

உண்டென்றும் விளம்பரப் படுத்தினர். இந்திய மன்னர்களுடன் கிழக்கு இந்தியக் கம்பெனியார்செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளைத் தாமும், தமது சந்ததியாரும் ஒப்புக்கொள்வதாகவும் தெரிவித்தார். கலகத்தில் கலந்து கொண்டவர்களை மன்னித்து விட்டார்.

இது முதல் ஏற்பட்ட ஆட்சியை நாம் ஆங்கில முடியின் கீழ் நடை பெறும் ஆட்சி என்னலாம். எனவே கவர்னர் ஜனரல் பதவியை வகித்து வந்தவர் இனி கவர்னர் ஜனரலாயிருப்பதுடன் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) யாகவும் இருந்துவர நேரிட்டது. அதாவது அந்தப் பதவியி விருப்பவர்கள் இரண்டு உத்தியோகங்களையும் வகித்து நடத்தி வருகிறார்கள்.

இவ்வாறாக முதல் ராஜப் பிரதிநிதியாய் அமர்ந்தவர் கானிங் பிரபுவே. அவர் சமாதானத்தை நாட்டில் நிலைநிறுத்தி ஜனங்களைத் தம் வசப்படுத்திக் கூடிய நற்குணங்களைப் படைத்தவர். அவர் பொருமையும், சாந்தமும் உடையவர். மகாராணியார் இந்திய அரசியலை ஏற்றுக்கொண்டதற்காக அவர் ஒரு தர்பாரை நடத்தி வைத்தார். அதில் கலகக்காரரை மன்னிப்பதாகவும், இந்திய மன்னர்களுக்கு ஸ்வீகாரம் செய்துகொள்ளும் உரிமை உண்டென்றும், 'வாப்ஸ்' சட்டம் ரத்து செய்யப்பட்டதென்றும் அறிவித்தார்.

இவர்தேச முன்னேற்றத்திற்கான பல காரியங்களைச்செய்துள்ளார். முக்கியமாகக் கல்வி அபிவிருத்

திக்காகச் சர்வகலாசாலைகளை ஏற்படுத்தினர். சட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் உத்தியோகப்பற்று இல்லாதவர்களும் அங்கத்தினர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள்.

கானிங் பிரபு 1862-ல் இங்கிலாந்துக்குச் சென்றார்.

அப்பியாசம்

1. இந்திய அரசாங்கத்தை விக்டோரியா மகாராணியார் ஏன் ஏற்றுக்கொண்டார்?

2. அவர் வெளியிட்ட விளம்பரத்தில் கண்ட முக்கியமான அம்சங்களைக் கூறுக?

3. முதல் ராஜப் பிரதிநிதி யார்? அவரை அந்தப் பதவிக்கு நியமிக்கக் காரணம் என்ன?

4. கவர்னர் ஜனரல் பதவி ஏற்பவர் வகிக்க வேண்டிய இரண்டு உத்தியோகங்கள் எவை?

8. ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி-1

விக்டோரியா மகாராணியார் இந்திய அரசு உரிமையை ஏற்றுக்கொண்ட பின்னர் கானிங் பிரபுவே முதல் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டா ரென்பதை முன் பாடத்தில் கவனித்தோம். அவர் காலத்தில் நடைபெற்ற சீர்திருத்தங்களைப் பற்றியும், அபிவிருத்திகளைப் பற்றியும்படித்தோம். இனி அவரைப் பின்பற்றி வந்த ராஜப்பிரதிநிதிகளின் ஆட்சியைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

எல்ஜின் பிரபு (1862-63)

கானிங் பிரபுவுக்குப் பின்னர் எல்ஜின் பிரபு ராஜப் பிரதிநிதியானார். இவர் காலத்தில் வடமேற்கு எல்லைப் புறத்தில் வசித்துவந்த வஹாபியர் என்னும் மத வைராக்கியமுள்ள ஒரு கூட்டத்தார் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பிப் பல துன்பங்களைச் செய்து வந்தார்கள். ஆகையால் இவர் ஒரு படையை அனுப்பி வஹாபியரைத் தோற்கடித்து, அவர்களால் ஏற்பட்டு வந்த துன்பங்களை அகற்றினார்.

லாரென்ஸ் பிரபு (1863-69)

எல்ஜின் பிரபு இறந்து விடவும் லாரென்ஸ் பிரபு வைஸ்ராய் ஆனார். இவரைப்பற்றி நீங்கள் முன்னமே படித்திருக்கின்றீர்கள். இவரும், இவருடைய சகோதரரும் பஞ்சாப்பில் ஒழுங்கான அரசியல் அமைப்பையும், முறையையும் நிலைநாட்டியது உங்களுக்குத் தெரியுமல்லவா?

பூட்டான் யுத்தம்:—இவர் காலத்தில் பூட்டான் தேசத்தார் ஆங்கில ஆட்சிக்கு அடங்கிய கிராமவாசிகளுக்குத் துன்பம் இழைத்து வந்தார்கள். ஆகையால் லாரென்ஸ் பிரபு ஒரு சேனையை அனுப்பி அவர்களை யடக்கி அவர்களுக்குரிய சில பிரதேசங்களையும் கைப்பற்றினார்.

குடியானவர்கள் பாதுகாப்பு:—ஜமீன்தாரர்கள் ஏழைக் குடிமக்களைத் துன்புறுத்தா வண்ணம் பாதுகாத்துக்கொள்ள இவர் பல ஏற்பாடுகளைச் செய்தார். வரிப்பணத்தைச் சரிவரச் செலுத்திவரும் குடியான

வன் ஒரு நிலத்தைப் பன்னிரண்டு வருஷம் அனுபவித்து வந்தால் அந்த நிலம் அவனுக்கேசொந்தம் ஆகும் என்னும் சட்டம் இவர் காலத்தில்அயோத்தி, பஞ்சாப் மாகாணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் செய்யப்பட்டது.

ஒரிஸ்ஸா பஞ்சம் :—லாரென்ஸ் பிரபுவின் காலத்தில் அதாவது கி. பி.1867-ல், ஒரிஸ்ஸா மாகாணத்தில் கொடியதொரு பஞ்சம் உண்டாயிற்று. இதனல் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் பசிப் பிணியால் சாக நேரிட்டது. லாரென்ஸ் பிரபு பஞ்ச நிவாரணம் செய்வது துரைத்தனத்தின் கடமை என்றும், இதற்காகத் துரைத்தனத்தார் கடன் வாங்கியேனும் வருமானத்தைக் கொடுக்கக் கூடியதும், லாபகரமானதுமான நீர்ப்பாசனக் கால்வாய்கள் முதலியன கட்டலாம் என்றும் மாகாண துரைத்தனத்தாருக்குத் தெரிவித்தார்.

மேயோ பிரபு (1869-72)

லாரென்ஸ் பிரபுவுக்குப் பிறகு மேயோ பிரபு ராஜப் பிரதிநிதியானர்.

பொருளாதாரச் சீர்திருத்தம் :—மேயோ பிரபு இந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளும் வரையிலும் மாகாணங்களில் செலவாகும் தொகைகளைக் கவர்னர் ஜனரலே அனுமதித்து வந்தார். இதனல் அந்தப் பணச்செலவுக்குப் பொறுப்பு கவர்னர் ஜனரலுடையதாகவே இருந்து வந்தது. மாகாண கவர்ன்மெண்டார் வருமானத்தைக் கருதாக, தங்க

ளுக்கு வேண்டிய இனங்களுக் கெல்லாம் கவர்னர் ஜனரலின் அனுமதியைக்கோரி, பணத்தை வாங்கிச் செலவு செய்து வந்தார்கள். இந்த ஏற்பாட்டினுல் மாகாண அதிகாரிகள் பொறுப்பில்லாமல் அதிகப் பணம் செலவு செய்ய நேரிட்டது. கவர்னர் ஜனர லுக்குப் பல சந்தர்ப்பங்களில் பண நெருக்கடி யும் ஏற்பட்டது. எனவே மேயோ புதிய ஏற் பாடு ஒன்றைச் செய்தார். அதாவது வருஷவாரியில் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குச் செலவு இனங் களுக்காக இவ்வளவு தொகை யென்று கவர்னர் ஜனரல் பண மான்யம் கொடுத்து விடுவார். அந்தத் தொகையைக் கொண்டே மாகாண துரைத்தனம் நடைபெற வேண்டியதாயிற்று. இதனுல் மாகாண ஆட்சியில் சிக்கனம் ஏற்பட ஏதுவாயிற்று.

ஆப்கானியருடைய சம்பந்தம் :—லாரென்ஸ் பிரபு ஆட்சி செய்து வந்த காலத்திலேயே ஆப்கன் அமீ ராகிய டோஸ்டு முகம்மது இறந்துவிட்டார். அவ ருடைய மைந்தர் ஷேர் அலி என்பவர் அமீரானுர் லாரென்ஸ் பிரபுவும் அவரை அமீராக அங்கீகரித் தார்.

அக்காலத்தில் ருஷ்யர்கள் மத்திய ஆசியாவில் தங்கள் இராஜ்யத்தைப் பரவச் செய்து கொண்டே வந்தபடியால் ஆங்கிலேயருக்கும், ஆப்கானியருக் கும் இருந்துவந்த சம்பந்த விஷயமாகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாயிற்று. இது சம் பந்தமாக ஷேர் அலியுடன் ஒப்பந்தங்கள் செய்து

கொள்ளுமுன் லாரென்ஸ் பிரபு ராஜப் பிரதிநிதி வேலையினின்றும் விலகிவிடவே, மேயோப் பிரபு இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியதாயிற்று.

மேயோ பிரபு ஷேர் அலியை இந்தியாவுக்கு அழைத்தார். இருவரும் அம்பாலாவில் சந்தித்தார்கள். மேயோ, ஷேர் அலிக்கு நல்ல வெகுமதிகளைக் கொடுத்துப் பல விதங்களிலும் உபசரித்தார். ஆங்கிலேயரும், ஆப்கானியரும் நேச பாவத்துடன் இருப்பது நல்லதென்று தெரிவித்தார். ஆனால் ஷேர் அலி தமக்கு விரோதமாய்ப் போர் புரிய வருபவர்களோடு தமக்கு உதவியாகப் பிரிட்டிஷார் இருக்க வேண்டுமென்றும், மற்றும் பலவிதங்களில் துணை புரிய வேண்டுமென்றும் கேட்டார். அவ்வாறுசெய்ய இயலாமையை உணர்ந்து மேயோ பிரபு நட்புப் பாராட்டியே ஷேர் அலியை அவர் தம் ஊருக்கு அனுப்பி விட்டார்.

மேயோ பிரபு ஒரு சமயம் அந்தமான் தீவைப் பார்வையிடச் சென்றிருந்தார். அங்கே ஒரு குற்றவாளியால் தாக்கப்பட்டுக் கொலையுண்டார். மேயோ பிரபுவின் காலத்தில் தான் நமதுதேசத்தில் ஜனத்தொகையைக் கணக்கிடும் ஏற்பாடு செய்யப்பட்டது.

நார்த் ப்ருக் பிரபு (1872-76)

மேயோ பிரபு கொலைசெய்யப்பட்டபின் நார்த் ப்ருக் பிரபு ராஜப் பிரதிநிதியாக வந்தார். இவர் காலத்தில் பரோடா சமஸ்தானத்தில் குழப்பம் ஏற்பட்டது. அதை யடக்கி, அதை ஆட்சி செய்து வந்த

சுதேச மன்னரை நீக்கிவிட்டு, அந்த ஸ்தானத்தில் சாயாஜி ராவ் என்பவரை அமர்த்தினர்.

இவர் காலத்தில்இறக்குமதியாகும் சாமான்கள் மீது வரிவிதிக்கப்பட்டு வந்தது. இதனால் இறக்குமதியாகிய சாமான்களின் விலை அதிகமாயிற்று. ஆதலால் நார்த்ப்ருக் இந்த வரிகளைக் குறைத்தார்.

இவர் பஞ்ச நிவாரணத்திற்கான பல புதிய முறைகளைக் கையாண்டார். மேலும் பஞ்ச நிவாரணத்திற்கென்றே ஒரு தனி நிதிலயச் நேமித்து வைக்க ஏற்பாடு செய்தார். அக்காலத்தில் இங்கிலாந்தில் வேல்ஸ் இளவரசரா யிருந்த எட்வர்டு இந்தியாவுக்கு வந்திருந்தார்.

ஆப்கன் பிரச்னை:—ருஷ்யர் ஆசியாவில் மும்முறமாகப் பரவிவந்ததைக் கண்ட ஷெர் அலி ஆங்கிலேயர் துணைபுரிவதாகத் தம்மிடம் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஆங்கிலேயர் இதற்கு இணங்கவில்லை. மேலும் ஆப்கன் அமீர் தமது மூத்த குமாரனை நீக்கி இரண்டாவது குமாரனையே பட்டத்திற்கு உரியவனென்று நியமித்துக்கொண்டார். இதை நார்த்ப்ருக் பிரபு கண்டித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கிலாந்திலிருந்த மந்திரி சபையாருக்கு ருஷ்யர் இந்தியாவின் மீது படையெடுத்து வரக்கூடும் என்னும் பயம் அதிகரித்தது. எனவே அவர்கள் காபூலுக்கு ஒரு ஸ்தானிகரை அனுப்பி, ஆப்கன் அமீர் அந்த ஸ்தானிகரை ஒப்புக்கொள்ளும்படியாக நிர்ப்பந்தப்படுத்த வேண்டும்

என்று கவர்னர் ஜனரலுக்குத் தெரிவித்தார்கள். இதற்கு இஷ்டமில்லாமல் நார்த்ப்ரூக் தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டார்.

அப்பியாசம்

1. எல்ஜின் பிரபு வஹாபியர் மீது சண்டை தொடுத்தது ஏன்?

2. பூட்டானை அடக்கவேண்டிய காரணம் என்ன?

3. மேயோ பிரபு செய்த பொருளாதாரச் சீர்திருத்தத்தை விளக்குக.

4. மேயோ, நார்த்ப்ரூக் பிரபுக்களின் காலங்களில் ஆப்கானியருக்கும், இந்தியாவிலுள்ள ஆங்கில துரைத்தனத்தாருக்கும் இருந்து வந்த சம்பந்தத்தை விளக்குக.

5. நார்த்ப்ரூக் ஏன் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்?

---

9. ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி-II
லிட்டன் பிரபு (*1876-1880*)

இரண்டாவது ஆப்கன் யுத்தம்:—நார்த்ப்ரூக் பிரபு தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டார் என்பதை முன் பாடத்தில் படித்தோம். ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு ஸ்தானிகரை அனுப்பி, அமீர் அவரை ஒப்புக் கொள்ளும்படியாகக் கட்டாயப் படுத்தவேண்டுமென்ற கொள்கையை நார்த்ப்ரூக் ஒப்புக் கொள்ளவில்லை, அல்லவா? இந்தக் கொள்

கையை ஒப்புக்கொண்ட லிட்டன் பிரபு என்பவர் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

லிட்டன் பிரபு ஷேர் அலி கோரிய நிபந்தனைக்ளுக்கு, அதாவது வேண்டிய உதவிகளை எல்லாம் செய்வதற்கு ஒப்புக்கொண்டு, ஆங்கில ஸ்தானிகர் ஒருவரை காபூலில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டார். ஆனால் ஷேர் அலி ஆங்கில ஸ்தானிகரைத் தமது நகரத்தில் வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. ஆப்கானியர் சுதந்தரத்தின் மீது இச்சை கொண்டவர்கள். தங்களுடைய அமீர் ஒரு ஸ்தானிகரை வைத்துகொண்டார் என்பதைக் கண்டால் அவர்கள், அமீர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப் படிந்து விட்டார் என்று நினைத்து அமீருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்பது ஷேர் அலியின் பயம், ஆகையால் தான் அவர் ஆங்கில ஸ்தானிகரை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

இந்த நிலைமையில் ஆங்கிலேயர் பலூஸ்கிஸ்தானத்து அமீருடன் ஓர் உடன்படிக்கைசெய்துகொண்டார். அவ் வுடன்படிக்கை பிரகாரம் அமீர் ஆங்கிலேயருடைய மேற்பார்வையையும், பாதுகாப்பையும் பெற்றார். அவரை விரோதிகள் தாக்கினால் ஆங்கிலேருயர் உதவிசெய்வதாக ஒப்புக்கொண்டார்கள். அமீர் ஆங்கிலேயருக்குக குவெட்டாவைக் கொடுத்தார். அந்நகரம் போலன் கணவாய்க்குத் தகுதியான ஸ்தானத்தில் இருந்தபடியால் அங்கே ஆங்கிலேயர் ஓர் அரணைக் கட்டிக்கொண்டு ஒரு படையை நிறுத்திக் கொண்டார்கள். இதனால்

போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய ஆபத்து ஒருவாறு குறைந்தது.

லிட்டன் பிரபு, ஆப்கன் அமீருடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பி அவருடன் கலந்து பேசுவதற்காக நெவில் சேம்பர்லேன் என்னும் தூதரை அனுப்பினர். ஆனல் அமீர் அவரைத் தமது நகரத்திற்கு வரவொட்டாமல் தடுத்தார். மேலும் அமீர் ருஷ்ய தூது கோஷ்டியாரை வரவேற்று அவர்களுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார்.

ஆங்கில தூதரை நிராகரித்ததற்காக அமீர் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று லிட்டன் பிரபு தெரிவித்தார். ஆனல் அமீர் பதிலொன்றும் கூறவில்லை. எனவே போர் மூண்டது. கைபர், போலன், குர்ரம் என்னும் மூன்று கணவாய்களின் வழியாகவும் மூன்று சேனைகள் ஆப்கானிஸ்தானத்தின் மீது சென்றன. ஷேர் அலி இவர்களை எதிர்க்க முடியாது ஓடிவிட்டார். அப்போது ஆங்கிலேயர் அவருடைய மைந்தரான யாகூப்கானை அமீராக நியமித்து அவரோடு கண்டமக் என்னுமிடத்தில் 1879-ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆங்கில ஸ்தானிகர் ஒருவரைக் காபூலில் வைத்துக்கொள்ள அமீர் ஒப்புக்கொண்டார். ஹீரத் முதலிய பட்டணங்களிலும் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அமைக்கப்பட்டனர். அமீருக்கு வேண்டும்போதெல்லாம் உதவி செய்வதாகவும், அவருக்கு வருஷவாரியில் ஆறு லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும் ஆங்கிலேயர் ஒப்புக்

கொண்டார்கள். கைபர், குர்ரம் கணவாய்கள் ஆங்கிலேயர் வசமாயின.

ஆனால் சில நாட்களுக்கெல்லாம் முதல் ஆப்கன் யுத்த காலத்தில் நடந்ததுபோல், கலகம் நடந்தது. அமீர் செய்துகொண்ட உடன்படிக்கை ஆப்கன் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக கிளம்பி ஆங்கில உத்தியோகஸ்தர்களைக் கொன்று விட்டனர். ஆகையால் ராபர்ட்ஸ் என்பவரின் தலைமையில் ஒரு பெருஞ் சேனை ஆப்கானிஸ்தானத்திற்குள் நுழைந்தது. இது வரும் செய்தியைக் கேட்ட யாகூப்கான் ஓடிவிட்டார். ஷேர் அலியின் தமையன் குமாரரான அப்துர் ரஹிமான் என்பவரை அமீராகச் செய்து ராபர்ட்ஸ் அவரிடம் உடன்படிக்கை செய்துகொண்டார். ஆங்கிலேயர் அமீருக்குக் கொடுத்து வந்த கப்பம் ஆறு லக்ஷத்திலிருந்து பதினெட்டு லக்ஷமாக உயர்த்தப்பட்டது. ஆங்கிலேயர் அமீருக்கு வேண்டிய உதவி செய்வதாகவும் ஒப்புக் கொண்டார்கள்.

இந்த நிலைமையில் ஷேர் அலியின் மற்றொரு குமாரரான அயூப்கான் என்பவர் காண்டஹாரை முற்றுகையிட்டார். ராபர்ட்ஸ் தமது சேனையுடன் சென்று அயூப்கானைத் தோற்கடித்தார். அதன் பிறகு ஹீரத்பிரதேசமும் காண்டகாரும் அமீருக்கே கொடுக்கப்பட்டன.

லிட்டன் பிரபுவை அடுத்து வந்த ரிப்பன் பிரபு அப்துர் ரஹிமானுடன் ஓர் உடன்படிக்கை செய்து

கொண்டார். அதன்படிக்கு அமீர் ஆங்கிலேயரன்றி வேறு எந்த அந்நிய நாட்டாருடனும் சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை என்று ஒப்புக்கொண்டார்.

விக்டோரியா மகாராணியார் இந்திய சக்கரவர்த்தினி யானது :—லிட்டன் பிரபு ஆட்சி புரிந்துவந்த காலத்தில் பார்லிமெண்டில் ஒரு புதிய சட்டம் செய்யப்பட்டது. அதை அனுசரித்து விக்டோரியா மகாராணியார் இந்திய சக்கரவர்த்தினி என்று பட்டம் வகித்தார். இதை விளம்பரப்படுத்தவும், இந்திய மன்னர்கள் ராஜப் பிரதிநிதி மூலமாகச் சக்கரவர்த்தினியாருக்குத் தமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளவும் லிட்டன் பிரபு கி. பி. 1877-ல் ஒரு தர்பார் நடத்தினர்.

பஞ்ச நிவாரணம் :—லிட்டன் பிரபுவின் காலத்திலும், அதாவது கி. பி. 1876-77-ல் இருந்து இரண்டு வருஷங்கள் இந்தியாவில் கொடிய பஞ்சம் நேர்ந்தது. பஞ்ச நிவாரணத்திற்காகக் கால்வாய்கள் வெட்டியும் இருப்புப் பாதைகள் அமைத்தும் ஏழைகளுக்கு வேலை கொடுத்தும் உதவ வேண்டுமென்றும், இதற்காகவே துரைத்தனத்தார் தங்களது வருமானத்திலிருந்து வருஷா வருஷம் ஒரு பாகத்தை ஒதுக்கி வைக்க வேண்டுமென்றும் லிட்டன் பிரபு உத்தரவு செய்தார்.

வரி விதித்தல் :—லிட்டன் பிரபு காலத்தில் ஆங்கில ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் உப்பு வரி விதிக்கப்பட்டு வந்தது. ஆனல் சுதேச இராஜ்யங்களில் இந்தவரி விதிக்கப்படவில்லை. இதனல் சுதேச

இராஜ்யங்களி லிருந்து இரகசியமாய் உப்பைக் கொண்டுவந்து வியாபாரம் செய்து வந்தார்கள். ஆகையால் சுதேச இராஜ்யங்களிலும் உப்பு வரியை விதிக்க லிட்டன் பிரபு ஏற்பாடு செய்தார்.

இந்தியர்களுக்கு உத்தியோகம் :—இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களில் ஆறில் ஒரு பங்கு கொடுப்பதென்று இவர் தீர்மானம் செய்தார். ஆங்கிலேய துரைத்தனத்துக்கு விரோதமாகப் பத்திரிகைகள் வெளியிடக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்தார்.

அப்பியாசம்

1. லிட்டன் பிரபு ஆப்கன் விஷயத்தில் எவ்விதக் கொள்கையோடு இந்தியாவுக்கு வந்தார் ?
2. குவெட்டா எவ்வாறு ஆங்கிலேயர் வசமாயிற்று?
3. இரண்டாவது ஆப்கன் யுத்தத்திற்குக் காரணங்கள் யாவை ?
4. யாகூப் கானும் அப்துர் ரஹிமானும் அமீர்களான வரலாற்றைக் கூறுக.
5. குறிப்பு எழுதுக: கண்டமக் உடன்படிக்கை, ராபர்ட்ஸ், அயூப்கான்.
6. குவெட்டா, காண்டஹார் ஹீரட் இவைகளின் இருப்பிடங்களைப் படம் வரைந்து காட்டுக.
7. விக்டோரியா மகாராணியார் ஏற்றுக்கொண்ட புதிய பட்டம் என்ன ?
8. பஞ்ச நிவாரணத்திற்கு லிட்டன் பிரபு என்ன முறைகளைக் கையாண்டார் ?
9. வரி, உத்தியோக விஷங்களில் லிட்டன் நடந்துகொண்ட நீதியைத் தெரிவிக்கவும்.

10. ராஜப் பிரதிநிதிகளின் ஆட்சி-III

ரிப்பன் பிரபு (1880-84)

லிட்டன் பிரபுவுக்குப் பிறகு ரிப்பன் பிரபு ராஜப் பிரதிநிதியாக வந்தார். இவர் இந்தியர்களிடம் அன்பும், அபிமானமும் கொண்டவர். அவர்களுக்கு அரசாங்க விவகாரங்களில் பழக்கமும், அதிகாரமும் கொடுக்கவேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர். மேல் நாடுகளில் வழங்கும் அரசியல் முறைகளை இந்தியாவிலும் ஸ்தாபிக்க வேண்டும் என்று இந்தியர் விரும்பியதை இவர் ஆமோதித்துத் தம்மால் இயன்ற வரையில் அவர்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்ய முயன்றார்.

27. ரிப்பன் பிரபு

ஸ்தல சுய ஆட்சி:—இந்தியர்களுக்கு ஆட்சி செய்யும் முறைகளில் பயிற்சி செய்விக்கும் பொருட்டு ஸ்தல ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். அதாவது பெரிய பட்டணங்களில் வசிப்பவர்கள் தங்கள் நகர விஷயங்களைகத் தாமே கவனித்துவர நகர விஷயங்களைத் தாமே கவ்னித்துவர நகரபரிபாலன சபைகளையும், ஜில்லா வாசிகளுக்கு ஜில்லா போர்டுகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த

நகர சபை அங்கத்தினரும், ஜில்லா போர்டு அங்கத்தினரும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

ரோட்டுகள் போடுதல் அல்லது மராமத்து செய்தல், குடி தண்ணீர் வசதி ஏற்படுதல், விளக்குப் போடுதல், சாக்கடை முதலியன கட்டிச் சுகாதார சௌகரியங்கள் செய்தல், கல்வி போதித்தல் முதலிய விஷயங்களை இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் கவனித்து வரும். ரிப்பன் பிரபு காலத்திற்கு முன்னரே சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் நகர்பரிபாலன சபைகள் ஏற்பட்டிருந்தன. இவர் காலத்தில் பெரிய பட்டணங்களிலும், ஜில்லாக்களிலும் ஸ்தல ஸ்தான சபைகள் ஏற்பட்டிருந்தன.

கல்வி அபிவிருத்தி:—இந்தியரின் கல்வி அபிவிருத்தியிலும் ரிப்பன் பிரபு கவனம் செலுத்தி வந்தார். கல்வி சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்து வரவும், முன்னேற்றத்திற்கான வழிகளைச் சிபார்சு செய்யவும் ஒரு கமிட்டியைநியமித்து, அவன் யாதாஸ்தில் கண்ட சிபார்சுகளை ஒப்புக்கொண்டார்.

தொழிலாளருக்கு ஆதரவு:—பெரிய தொழிற்சாலைகளில் சிறுவர்களும் அதிகப் பாடுபட்டு உழைத்து வந்தார்கள். அதிக வேலையினால் வருந்திய சிறுவர்களின் கஷ்டத்தைப் பார்த்து, தொழிற்சாலைகளில் சிறுவர்களிடம் ஒன்பது மணி நேரத்துக்குமேல் வேலை வாங்க கூடாதென்று சட்டம் செய்தார்.

மைசூர் திரும்பிக் கொடுக்கப்பட்டது:—பெண்டிங்கு பிரபு காலத்தில் மைசூரை ஆண்டுவந்த இந்து மன்

னர் அந் நாட்டைச் சரிவர ஆளாமல், கடன்பட்டு நின்றூர் என்றும், இக்காரணத்தால் பெண்டிங்கு பிரபு மைசூர் ஆட்சியை ஆங்கிலேயருடைய ஆதிக்கத்திலேயே வைத்துக்கொள்ள நேரிட்டதென்றும் படித்தீர்கள், அல்லவா? முன் ஆண்டுவந்த அரசரின் ஸ்வீகாரப் புத்திரர்க்கு அந் நாட்டை ரிப்பன் பிரபு கொடுத்து விட்டார். அந்நாட்டைச் சரிவர ஆளுவதற்காக ஏற்பாடுகளையும் செய்து வைத்தார். இக்காலத்தில் மைசூர் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருவதையும், சீரும், சிறப்பும் பெற்று விளங்குவதையும் நீங்கள் அறிவீர்கள்.

டப்ரின் பிரபு (1885-1888)

ரிப்பன் பிரபுவை யடுத்து டப்ரின் பிரபு வைஸ்ராயாக வந்தார். இவர் அரசியல் விஷயங்களில் மிகவும் தேர்ந்தவர்.

காங்கிரஸ் மகாசபை :—இவர் காலத்தில்தான் இந்திய தேசீய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. பல சிறந்த மேதாவிகளும், தேசபக்தர்களும் சேர்ந்து இந்நாட்டில் வாழும் பொதுமக்களின் ஆதரவோடு கூடிய சுய ஆட்சி முறையை ஸ்தாபிக்க வேண்டி இம்மகா சபையை ஆரம்பித்தார். இம்மகா சபை தழைத்து ஓங்கி நாட்டுக்குச் செய்துள்ள நன்மைகளைப்பற்றி வேறொரு பாடத்தில் படிப்போம்.

ஆப்கன் சிக்கல் :—டப்ரின் பிரபு தமது ஆட்சியைத் தொடங்கிய காலத்தில் ஆப்கானிஸ்தானத்துக்

கும், ருஷ்யாவுக்கும் பிணக்கு ஏற்பட்டது. ருஷ்யர் ஆக்ஸஸ் நதிக்கரையில் ஆப்கானியருக்குச் சொந்தமான இடத்தைப் பிடித்துக் கொண்டு, ஆப்கானியரைத் தாக்கினார்கள். இது சம்பந்தமாக ஆங்கிலேயரின் உதவியை நாடி அமீர் அப்துர் ரஹிமான், டப்ரின் பிரபுவை ராவல்பிண்டியில் சந்தித்துப் பேசினார். கவர்னர் ஜனரலும் அவர் சார்பாகப் பேசி, ருஷ்யருடன் சமாதானம் செய்வித்தார்.

மூன்றும் பர்மா யுத்தம்:—தீபா மன்னர் பர்மா நாட்டில்தாம் இழந்துவிட்டபிரதேசங்களைக் குறித்து வருந்தி ஆங்கிலேயர் மீது பகைமை கொண்டு பிரஞ்சுக்காரரோடு உறவு கொண்டாடினர். ஆங்கில வியாபாரிகளைத் துன்புறுத்தியும் வந்தார். ஆகையால் டப்ரின் பிரபு தீபா மன்னருக்குக் கடிதம் ஒன்று எழுதி அதில் தமக்குச் சரியான சமாதானத்தைக் கூற வேண்டுமென்று கேட்டிருந்தார். ஆனல் தீபா மன்னர் விடையளிக்கவில்லை. எனவே ஆங்கிலேயருக்கும், பர்மியருக்கும்போர் நிகழ்ந்தது. தீபாவைப் பிடித்து பம்பாய் ராஜதானியிலுள்ள ரத்னகிரிக்கு அனுப்பி விட்டார்கள். பர்மா ஆங்கில அரசாட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

குடியானவர்களுக்குப் பாதுகாப்பு:—பஞ்சாப் அயோத்தி முதலான பாகங்களிலுள்ள ஜமீன்தார்கள் தங்கள் குடிமக்களைப் பல விதங்களிலும் துன்புறுத்தி வந்ததால் குடிமக்களுக்கு நிலத்தில் பாத்தியதை யுண்டென்றும், ஆங்கிலேயர் அனுமதியின்றி

ஜமீன்தார்கள் நிலவரியை உயர்த்தக் கூடாதென்றும் டப்ரின் பிரபு சட்டங்கள் செய்தார்.

லான்ஸ்டௌன் பிரபு (1888-1893)

வெள்ளியின் மதிப்பு:—டப்ரின் பிரபுவுக்குப் பிறகு ராஜப்பிரதிநிதியாக வந்த லான்ஸ்டௌன் பிரபு ராஜப்பிரதிநிதியாக வந்த லான்ஸ்டௌன் பிரபு காலத்தில் வெள்ளியின் விலை குறைந்து கொண்டே வந்தது. இந்தியாவில் விலைவாசிகள் வெள்ளி நாணயமாகிய ரூபாயில் கணக்கிடப்படுவதால் விலைகள் ஏறிவிட்டன. மேலும் அயல் நாட்டுச் சரக்குகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையும் அதிகமாயிற்று. இதனால் ஜனங்கள் சிரமப்படலானார்கள். லான்ஸ்டௌன் பிரபு வெள்ளி நாணயங்கள் வெளியிடுவதைத் தற்காலமாக நிறுத்தி வைத்து வெள்ளி விலையை அதிகரிக்கச் செய்தார்.

வடமேற்கு எல்லைப்புறம்:—வடமேற்கு எல்லைப் புறப் பிரதேசத்திலிருந்த ஜனங்கள் ஒழுங்கான அரசாங்கத்திற்கும், ஒருவிதக் கட்டுக்கும் அடங்காமல், சுற்றுப் பக்கங்களிலுள்ள ஊர்களில் கொள்ளையடித்து வந்தார்கள். இவர்களை யடக்கி அங்குள்ளவர்களை ஆங்கில ஆட்சிக்குள் கொண்டுவர லான்ஸ்டௌன் பிரபு முயன்றார். ஆனால் ஆப்கன் அமீர், அந்தப் பிரதேசமெல்லாம் தமது ஆட்சிக்குட்பட்டது என்றும், ஆங்கிலேயர் அங்கே தலையிடக் கூடாதென்றும் கூறினர். கடைசியில் ஆங்கிலேயரும், அமீரும் சமாதானமாகவே அந்தப் பிரதேசத்தைப்

பங்கிட்டுக் கொண்டார்கள். கிழக்கிலுள்ள பாகம் ஆங்கிலேயர் வசம் வந்தது.

இந்தியா கௌன்சில் சட்டம்:—கவர்னர் ஜனரல் சட்டசபைகளை அமைக்கும் விஷயத்தில் 1861-ல் சில அதிகாரங்கள் அவருக்கு கொடுக்கப்பட்டன. 1892-ல் மற்றொரு சட்டம் செய்யப்பட்டது. இதன் படி, சட்டசபை அமைப்பில் மாறுதல்கள் செய்யப் பட்டன. மொத்தம் பதினாறு அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்றும். அவர்களில் ஆறு பேர் உத்தியோகஸ்தர்களாகவும், பத்து பேர் உத்தியோ கஸ்தர்களல்லாதவராகவும் இருக்க வேண்டுமென் றும் ஏற்படுத்தப்பட்டது. அங்கத்தினர்களுக்குக் கேள்விகள் கேட்கவும், குறைகளைத் தெரிவித்துக் கொள்ளவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது,

இரண்டாம் எல்ஜின் பிரபு (1893-1899)

லான்ஸ்டௌன் பிரபுவுக்குப் பிறகு இரண் டாம் எல்ஜின் பிரபு வைஸ்ராய் பதவியை ஏற்றார். இவர் காலத்தில் கொடியதொரு பஞ்சம் உண்டா யிற்று. அதன் நிவாரணத்திற்காக லக்ஷக்கணக் கான ரூபாய்கள் செலவுசெய்தார்.

இவர் காலத்திலும் வடமேற்கு எல்லைப்புறத் தில் கலகங்கள் நிகழ்ந்தன. இவர் பாடுபட்டு அக் கலகங்களை அடக்கினார். இவர் காலத்தில் தான் இந் தியா முழுவதுக்கும் ஒரே சேனாதிபதி நியமிக்கப் பட்டார்.

அப்பியாசம்

1. ஸ்தல சுய ஆட்சி என்றால் என்ன? அதை இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?

2. ஸ்தல ஸ்தாபனங்கள் எதற்காக ஏற்படுத்தப்பட்டன?

3, மைசூர் இராஜ்யம் யாருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது?

4. மூன்றாம் பர்மிய யுத்தத்திற்குக் காரணங்களென்ன? அந்த யுத்தத்தினால் விளைந்த பயனென்ன?

5. லான்ஸ்டௌன் காலத்தில் வெள்ளி நாணயம் அடித்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

6. காங்கிரஸ் மகாசபை யாருடைய காலத்தில் ஏற்படுத்தப்பட்டது?

7. டப்ரின் பிரபுவின் காலத்தில் ஆப்கானியருக்கு ஏற்பட்ட கஷ்டம் என்ன?

8. லான்ஸ்டௌன் பிரபு காலத்தில் இந்தியச்சட்டசபை அமைப்புகளில் எவ்வித மாறுபாடுகள் ஏற்பட்டன?

9. எல்ஜின் பிரபு காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களைச் சுருக்கமாகக் கூறுக.

11. ராஜப்பிரதிநிதிகளின் ஆட்சி - IV

கர்ஸன் பிரபு (1899-1905)

இரண்டாம் எல்ஜின் பிரபு இங்கிலாந்து திரும்பியதும், கர்ஸன் பிரபு ராஜப்பிரதிநிதியாக வந்தார். இவர் இளம் பிராயத்திலேயே இந்தப் பொருப்பு வாய்ந்த பெரும் பதவியை வகித்தார். ஆயினும் அனுபவித்திலும் அறிவிலும் இவர் ராஜப் பிரதி நிதிகளுள் சிறந்தவரெனக் கருதப்படுகிறார். இவர் இந்தியாவுக்கு வருவதற்கு முன் ஆங்கில அரசாங்கத்தில் உயர்ந்த பதவியை வகித்து வந்தார். இவர் ஆசியாவிலுள்ள பற்பல நாடுகளையும் நேரில் சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்து வந்தவர். இந்திய விவகாரங்களின் நுட்பங்களை நன்கு உணர்ந்தவர். இவர் ஆட்சிபுரிந்த காலத்தில் இவர் சற்றேறக்குறைய யதேச்சாதிகாரம் புரிந்தாரென்றே சொல்ல வேண்டும். எனினும் இவர் இந்தியரின் முன்னெற்றத்தில் கருத்துடனேயே ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தார்.



28. கர்ஸன் பிரபு

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்:—கர்ஸன் பிரபு தமது காலத்தில் ஆட்சி முறைகளில் பற்பல சீர்திருத்தங்களைச் செய்து வந்தார்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள்:—ஏழைக் குடியானவர்களுக்குச்சொற்ப வட்டிக்குக் கடன்கொடுக்கவும், கூட்டுறவு முறைகளில் பொருள்களை வாங்குதல், விற்றல், உற்பத்திசெய்தல் முதலியவைகளை விருத்தி செய்யவும் பல இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்தார். அது முதல் இச்சங்கங்களை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டும், பரவிக்கொண்டும் வந்தன.

விவசாய அபிவிருத்தி:-குடியானவர்கள் படும்பாட்டிற்குத் தகுந்த பலன் கிடைக்கக் கூடிய வழிகளை அவர்களுக்குப் புகட்டுவதற்காகவிவசாய ஆராய்ச்சி கலாசாலை யொன்றைப்பூஸா என்னுமிடத்தில் ஸ்தாபித்தார். மற்றும் சில இடங்களில் விவசாய கலாசாலைகளையும் ஏற்படுத்தினர்.

பஞ்ச நிவாரணம்:— கர்ஸன் பிரபு காலத்தில் கொடியதோர் பஞ்சம் நேரிட்டுப் பதினயிரக் கணக்கான ஏழை மக்கள் மாண்டனர். பிளேக் முதலிய கொள்ளை நோய்களும் பரவ ஆரம்பித்தன. ஆகையால் பஞ்ச நிவாரண வேலையை மேற்கொள்ள ஒரு கமிட்டியை நியமித்தார். பிளேக் முதலிய நோய்கள் வராமல் தடுப்பதற்கான முறைகளையும் கையாண்டார்.

நிலவரி வசூல் திருத்தங்கள்:— பஞ்சம் மேலிட்டு ஜனங்கள் கஷ்டப்பட்டு வந்த காலத்தில் நிலவரிச்

சுமைதான் இதற்குக் காரணம் என்னும் கூக்குரல் உண்டாயிற்று. ஆனல் கர்ஸன் பிரபு நிலவரி பஞ்சத்திற்குக் காரணமாகாதென்றும், மழை யின்மையே காரணமாகுமென்றும் நமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். ஆயினும் நிலவரியை உயர்த்த வேண்டுமென்றும், பஞ்ச காலங்களில் வரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

சர்வ கலாசாலைகள்:—சர்வ கலாசாலை அமைப்புகளைத் திருத்தி யமைத்து, அவைகளை அரசாங்கத்தாரின் அதிகாரத்திற்கு உட்படுத்தினர்.

வங்காளப் பிரிவினை:—வங்க நாடு இவருடைய காலம் வரையில் ஒரே மாகாணமாக இருந்து வந்தது. இவர் அதை இரண்டு சிறிய மாகாணங்களாகப் பிரித்துவிட்டார். வங்காளிகளுக்குள் இருந்த ஐக்கியத்தை இதுபாதிக்குமென்று அந்த ஜனங்கள் நினைத்தபடியால் அவர்கள் பிரிவினையை ஆட்சேபித்துப் பெரும் கிளர்ச்சி செய்தார்கள். இக்கிளர்ச்சியின் பயனுக 1911-ல் இப்பிரிவினை ரத்து செய்யப்பட்டது.

வியாபார முன்னேற்றம்:—இந்தியாவின் வியாபார முன்னேற்றத்தைக் கவனித்துவருவதற்காகத் தமது மந்திராலோசனை சபையில் வியாபார இலாக்கா அங்கத்தினர் ஒருவரைசேர்த்துக்கொண்டார். இருப்புப் பாதைகளைப் புதிதாக வெகு தூரம் அமைத்து

வியாபாரச் சரக்குகளை எடுத்துச்செல்ல அனுகூலம் செய்து வைத்தார்.

இவையன்றி ஏழைக் கடன்காரர்களின் நிலங்கள் ஏலத்திற்குப் போகாமல் தடுக்கவும், நாட்டில் கல்வியைப்பரப்பவும் பலமுறைகளைக்கையாண்டார்.

அப்பியாசம்

1. கர்ஸன் பிரபுவின் குணாதிசயங்களை விளக்குக.
2. நிலவரி வசூல் சம்பந்தமாகக் கர்ஸன் பிரபு செய்த சீர்திருத்தங்கள் எவை ?
3. விவசாயம், வியாபாரம் இவைகளின் முன்னேற்றத்திற்காக கர்ஸன் பிரபு எவ்விதம் பாடுபட்டுள்ளார்?
4. கல்வி சம்பந்தமாக இவர் எவ்வித மாறுதல்களைச் செய்தார் ?
5. பஞ்ச நிவாரண விஷயமாக இவர் செய்துள்ள நற்காரியங்களைக் கூறுக
6. வங்காளப் பிரிவினை ஏன் ரத்து செய்யப்பட்டது.

12. எல்லைப்புற விஷயம்

இந்தியாவில் ஆங்கில துரைத்தனம் ஏற்பட்டது முதல் என்றும் சிக்கலாயிருந்து வருவது இந்த எல்லைப்புறப் பிரச்னைதான். உள்நாட்டில் சுதேச மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்வது நின்றது. கலகங்கள் முதலிய அராஜகங்களைக் கிளப்பிவந்த கூட்டத்தார் அடக்கப்பட்டனர்.

நாட்டில் அமைதியும், ஒழுங்கான துரைத்தனமும் ஏற்பட்டுவிட்டன. ஆனால், அயல் நாட்டினர் நோக்கம் இந்தியாவின் மீது செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியமும், எல்லைப்புறத்தில் கலகங்களை அடக்கவேண்டிய அவசியமும் இன்னும் இருந்து வந்தது. ஆகையால் கர்ஸன் பிரபு தமது கவனத்தை இந்தியாவைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களின் மீது செலுத்தி வேண்டியதாயிற்று.

எல்லைப்புற மாகாணம்:—வடமேற்கு எல்லைப்புறத்தில் வஹாபியர், பட்டாணியர் முதலிய ஜாதியினர் வசிக்கின்றார்கள் என்றும், அவர்கள் முரட்டுத் தனமும், மதவைராக்கியமும் உடையவர்கள் என்றும் முன் பாடங்களில் படித்தீர்கள் அல்லவா? அவர்கள் அவ்வப்போது கலகங்களைக் கிளப்பிக்கொண்டு ஆங்கிலேயருக்குத் துன்பத்தை விளைவித்துக்கொண்டு வந்தார்கள். வடமேற்கு எல்லைப்புறத்தின் வடபாகத்திலிருந்தவர்கள் அங்குள்ள சிட்ரால். ஸ்வாட், டிர் முதலிய சுதேச மன்னர்களுக்கு அடங்கிவிட்டனர். அதன் தென்பாகத்தில் காபூல், கோமால் நதிகளுக்கு இடையில் வாழ்ந்துவந்த பட்டாணியர் ஒருவருக்கும் அடங்காமல் இருந்து வந்தனர். இவர்களில் சிலர் ஆப்கானிஸ்தானத்தின் ஆதிக்கத்திற்குள் வந்தார்கள். மற்றவர்கள் இந்தியாவின் எல்லையைக் கடந்து வந்து கொள்ளையடித்துக் கேடுவிளைவித்து வந்தனர். இதனால் அவர்களை எவ்விதத்திலும் அடக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கும் தென்பாகத்தில் பெலுசிஸ்தானத்திலுள்ளவர்களைச் சர் ராபர்ட்

சாண்ட்மான் என்பவர் ஆங்கில ஆட்சிக்குள் கொண்டுவந்து நல்லொழுக்கப் படுத்தினர்.

கர்ஸன் பிரபு காலத்திலும் கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டு வந்தபடியால் அவர் ஆங்கிலேயருக்கு வசமான இடங்களை வரையறுத்து, அந்தப் பாகத்துடன் பஞ்சாப்பில் சேர்ந்திருந்த, கோஹட், பான்னு முதலிய பாகங்களையும்சேர்த்து 'வடமேற்கு எல்லைப்புற மாகாணம்' என்று ஒரு புதிய மாகாணத்தை ஏற்படுத்தினர். மேலும் பெஷாவர் முதலிய இடங்களில் சேனைகளை நிறுத்தி அமைதியை நிலை நாட்டினர்.

ஆப்கானிஸ்தானம்:—கர்ஸன் பிரபு வந்த காலத்தில் ஆப்கானிஸ்தானத்தில் அப்துர் ரஹிமான் அமீராக இருந்து வந்தார். அவர் ஆங்கிலேயரோடு செய்துக்கொண்ட ஒப்பந்தப்படிக்கு அவர்களுடைய நண்பராக இருந்துக்கொண்டு வருஷவாரியில் பதினெட்டு லக்ஷம் ரூபாய் பெற்று வந்தார். ஆனல் அவர் இந்தியாவுக்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும் வியாபாரத்தையும், மற்றவிதமான சம்பந்தங்களையும் பெருக்கக்கூடிய வண்ணம் போக்குவரவு சாதனங்கள் அமைத்துக்கொள்ள இசையவில்லை.

அவர் இறந்த பின்னர் அவருடைய குமாரர் ஹபீபுல்ல அமீரானர். அவரையும் அவருடைய தந்தையார் செய்துகொண்டதுபோல் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்றும், இல்லாவிடில் தாங்கள் கொடுத்துவந்த

பதினெட்டுலக்ஷம் ரூபாயைக்கொடுக்க முடியாதென்றும் ஆங்கிலேயர் வற்புறுத்தினர். ஆனால் அமீர் ஹபீபுல்லா இம்மொழிகளுக்குச் செவிசாய்க்கவில்லை எனவே ஸர் லூயிடேன் என்றும் ஆங்கிலத் தூதர் காபூல் சென்று அமீருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இதனால் இந்தியா மார்க்கமாக அமீர் யுத்தத் தளவாடங்களைத் தருவித்துக்கொள்ளும் சௌகரியத்தைப் பெற்றார்.

பாரசீகம்:—கர்ஸன் பிரபு காலத்தில் பாரசீக வளைகுடா பாகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கமும், செல்வாக்கும் படைத்திருந்தனர். அங்கே பிரெஞ்சுக்காரரும் ஒரு வியாபார ஸ்தலத்தை மாஸ்கட் என்னுமிடத்தில் ஏற்படுத்திக்கொண்டு ஒரு கோட்டையைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தனர். அந்நாட்டு சுல்தானை வற்புத்திப் பிரெஞ்சுக்காரர் அந்தக்கோட்டையைக் கட்டுவதற்காகப் பெற்றிருந்த உத்தரவை ரத்து செய்யும்படி ஆங்கிலேயர்கள் செய்தார்கள். இதுபோலவே ருஷ்யரும் தமக்கென ஒரு துறைமுகத்தை ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர். இச்சந்தர்ப்பத்தில் கர்ஸன் பிரபு 1903-ல் தாமேநேரில் பாரசீக வளைகுடாவுக்குச் சென்று மற்றவர்களின் ஆதிக்கம் ஓங்காமலும், ஆங்கிலேயருடைய ஆதிக்கமும், செல்வாக்கும் நிலைநிற்குமாறும் ஏற்பாடுகள் செய்து வந்தார்.

திபெத்தின் மீது படை எடுப்பு:—இந்தியாவுக்கு வடக்கே யுள்ளது திபெத்து என்னும் பீடபூமி. இந்நாட்டைத் தலேய் லாமா வென்னும் மத குருவே

ஆண்டு வந்தார். அவர் வெகுகாலம் அன்னியரைத் தம் நாட்டில் வியாபாரம் செய்யவும், தங்கி இருக்கவும் அனுமதிக்காமல் இருந்துவந்தார். இவர் பிற் காலத்தில் ஆங்கிலேயர்மீது பகைமை பாராட்டி ருஷ்யப் பிரதிநிதியொருவரைத் தமது தலைநகராகிய லாஸாவில் தங்கி யிருக்க அனுமதித்தார்.

இது விஷயமாகக் கர்ஸன் பிரபு எழுதிய கடிதங் களுக்கு தலேய் லாமா சரியான பதில் கொடுக்காத தனால் அவர் ஒரு சேனையைத்திபெத்துக்கு அனுப்பி னார். தலேய் லாமா லாஸாவை விட்டுவிட்டு ஓடிவிட் டார். அவருடைய பிரதிநிதி யொருவர் ஆங்கிலேய ருடன் உடன்படிக்கை செய்துக்கொண்டார். இதன் பலனாக ஆங்கிலேயருக்கு வியாபார சுதந்திரம் கிடைத்தது.

கர்ஸன் பிரபு காலத்தில் அநேக ராணுவச் செயல்கள் நடைபெற்றன, அல்லவா? இவைகளின் நிர்வாக சம்பந்தமாக அவருக்கும், இந்தியப் படையின் சேனாதிபதியான கிச்சினர் பிரபுவுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகளான ஆங்கில துரைத்தனத்தார் கிச்சினரை ஆமோதித்துக் கர்ஸன் கொண்டுள்ள அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதனால் அவர் தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டு இங்கிலாந்துக்குச் சென்றார்.

அப்பியாசம்

1. கர்ஸன் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றியும், அனுபவத்தைப்பற்றியும் சுருக்கமாய் கூறுக.

2. கல்வி சம்பந்தமாக கர்ஸன் செய்த சீர்திருத்தங்களென்ன?

3. கர்ஸன் உள்நாட்டுத் துரைத்தன அமைப்பிலும் ஜனங்களின் முன்னேற்றத்திற்காகவும் செய்த திருத்தங்களெவை?

4. வடமேற்கு எல்லை மாகாணத்தைக் கர்ஸன் பிரபு ஏன் ஏற்படுத்தினர்?

5. கர்ஸன் பிரபு பாரசீக வளைகுடாவுக்குப் போக நேரிட்டதற்குக் காரணங்களென்ன?

6. தலேய் லாமா என்பவர் யார்?

7. கர்ஸன் பிரபு திபெத்துமீது படை எடுத்ததேன்?

8. வங்காளப் பிரிவினை என்பது என்ன?

9. கர்ஸன் பிரபு தமது பதவியை ராஜிநாமா செய்ய நேரிட்டதேன்?

---

13. மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்

கர்ஸன்பிரபு தமது ராஜப் பிரதிநிதிப்பதவியை ராஜிநாமா செய்துவிட்டு விலகிய பின்னர் மிண்டோ பிரபு (1905-1909) ராஜப் பிரதிநிதியாக வந்தார்.

அரசியல் அமைதி இன்மை:—இந்தியர்கள் தம் தேச அரசியல் கலந்து கொண்டு, அதில் அதிகாரமும், அந்தஸ்தும் பெறவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு காங்கிரஸ் மகா சபையை ஸ்தாபித்த வரலாற்றை நாம் கவனித்தோம். இம் மகாசபை தனது

உழைப்பினாலும், முயற்சியினாலும் தேச மக்களின் அபிமானத்தையும், ஆதரவையும் பெற்று வந்தது. தேச விடுதலைக்கான எண்ணங்கள் ஜனங்களில் மேன்மேலும் அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தன.

29. மிண்டோ பிரபு

இந்தச் சந்தர்ப்பத்தில் கர்ஸன் பிரபு வங்காளப் பிரிவினை செய்யவும், அம்மாகாணத்தில் பிரிவினையை ரத்து செய்வதற்காக ஏற்பட்ட கிளர்ச்சி பலமாகி முதல் தரமான அரசியல் கிளர்ச்சியாக மாறிற்று. அம்மாகாணத்தில் குழப்பமும், அராஜகமும் ஏற்பட்டன. ஆங்கிலேயர்மீது துவேஷமும், ஆங்கில சாமான்களை வாங்க கூடாதென்னும் இயக்கமும் தலையெடுத்தன.

இதுவே நாளடைவில் ஸ்வராஜ்யக் கிளர்ச்சியாயிற்று; மிண்டோபிரபு அராஜகத்தை ஒழிக்க உறுதியான திட்டங்களைக் கையாண்டு, அதில் ஈடுபட்டவர்களுக்குக் கடின தண்டனைகளை விதித்தார். ஆவேஷத்தைப் பரப்ப வந்த பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தும், அபராதம் விதித்தும் அடக்கினார். ஆனால் இந்தியர்களுக்கு அரசியல் சீர்திருத்தங்கள் சில வழங்க வேண்டுமென்றும் மிண்டோ பிரபு கருதினார்.

அக்காலத்தில் பார்லிமெண்டு சபையில் இந்தியா காரியதரிசி பதவியை வகித்து வந்தவர் மார்லி பிரபு என்பவர். மார்லி பிரபுவும், மிண்டோ பிரபுவுமாகக் கலந்து ஆலோசித்து இந்தியர்களுக்கு ஓர் அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை யளிக்க நிச்சயித்தனர். இதற்காகப் பார்லிமெண்டில் 1900-ல் ஒரு சட்டம் செய்யப்பட்டது. இந்தச் சீர்திருத்தங்களை நாம் மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள் என்று வழங்குகிறோம்.

இந்தச் சீர்திருத்தங்களினால் இந்தியாவிலிருந்த சட்ட சபைகள் திருத்தி யமைக்கப்பட்டன. பெரிய மாகாணங்களில் ஐம்பது அங்கத்தினர்களும் சிறிய மாகாணங்களில் முப்பது அங்கத்தினர்களும் அடங்கிய சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. இவர்களில் அநேகர் உத்தியோகப் பற்று இல்லாதவர்கள். இந்த உத்தியோகப் பற்று இல்லாதவர்கள் ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களாலும், வியாபாரச் சங்கங்கள், துறைமுகச் சபை, நிலச்சுவான்தார் சபைபோன்ற பொது ஜன சபைகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

இது போலவே கவர்னர் ஜனரல் சட்ட சபையில் அறுபது அங்கத்தினர் இருக்கவேண்டுமென்றும், இவர்களில் இருபத்தெட்டு பேர் மாத்திரமே உத்தியோகஸ்தர்களென்றும், மற்றவர்கள் உத்தியோகப் பற்று அற்றவர்களென்றும் தீர்மானிக்கப்பட்டது. உத்தியோகப் பற்று இல்லாதவர்களில்

சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; சிலர் கவர்னர் ஜனரலால் நியமிக்கப்பட்டவர்கள்.

இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர் அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்கவும், சிபார்சுகள் செய்யவும் அதிகாரம் பெற்றனர். வரவு செலவு திட்டத்தின்மீது தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளவும் இவர்களுக்கு உரிமை யுண்டு.

30. கோகலே

கவர்னர் ஜனரல், மாகாண கவர்னர்கள் இவர்களுடைய நிர்வாக சபைகளில் ஒரு இந்திய அங்கத்தினர் இருக்க வேண்டுமென்றும், இங்கிலாந்திலுள்ள இந்தியா காரிய தரிசி சபையில் இரண்டு இந்திய அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்றும் ஏற்படுத்தப்பட்டது.

இந்தியர்களில் பெரும்பான்மையோருக்கு இந்தச் சீர்திருத்தங்கள் திருப்தியளிக்கவில்லை. ஆயினும் மிதவாதிகள் இந்தச் சீர்திருத்தங்களை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அவைகளினால் ஜனங்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை ஜனங்கள் பெறும்படி செய்யவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். புதிதாக ஏற்பட்ட சபைகளில் பல இந்தியப் பிரமுகர்கள் அங்கம் வகித்தனர். சிறந்த தேச

ஊழியரும் மேதாவியுமான கோபால கிருஷ்ண கோகலே அவர்களில் ஒருவர். இவர் நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக உண்மையாக உழைத்துள்ளார். இவர் முக்கியமாக ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்ய அரும்பாடு பட்டார்.

இந்தச் சீர்திருத்தங்களை வழங்கிய பின்னர் மிண்டோ பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிப்போனார்.

அப்பியாசம்

1. மிண்டோ பிரபு காலத்தில் கிளர்ச்சிகள் ஏற்பட்டதேன்?

2. அரசியல் கிளர்ச்சிகளை அடக்க மிண்டோ கையாண்ட முறைகளென்ன?

3. 1909-ல் வழங்கிய சீர்திருத்தங்களை மிண்டோ-மார்லி திருத்தங்களென்று அழைப்பானேன்?

4. மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் இந்தியர்களுக்கு அளித்த உரிமைகளை விளக்குக.

5. கோபால கிருஷ்ண கோகலே என்பவர் யார்? அவர் தேசத்திற்குச் செய்த நன்மை என்ன?

---

14. இந்தியாவும் மகா யுத்தமும்

மிண்டோபிரபுவுக்குப் பிறகு ஹார்டிஞ்சு பிரபு கவர்னர் ஜனரலாக வந்தார். இவர் இந்தியர் மீது அன்பும், அபிமானமும் கொண்டவர்.

டில்லி தர்பார் :—ஹார்டிஞ்சு பிரபு வந்த ஒருவருஷத்திற்கெல்லாம் ஐந்தாம் ஜார்ஜ்மன்னர் இந்தியாவுக்கு நேரில்வந்து இந்நாட்டின் சக்கரவர்த்தியாகப் பட்டம் சூட்டிக்கொண்டார். அது கி.பி. 1911, டிசம்பரில் டில்லிமாநகரில் நடைபெற்றது. அதை டில்லி தர்பார் என்கிறோம். இந்தியா ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட பின்னர் ஆங்கில மன்னர் நேரில்வந்து இந்தியாவிலேயே முடிசூட்டிக் கொண்டது இதுதான் முதல் தடவையாகும். ஆகையால் இது வெகு விமரிசையாகவும், அதி வைபவத்துடனும் கொண்டாடப் பட்டது. டில்லியில் நடந்த தர்பாரில் சுதேச மன்னர்கள் யாவரும்கூடித் தங்களுடைய விசுவாசத்தையும், வணக்கத்தையும் அரசர் பெருமானுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

முடிசூட்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மன்னர்பிரான் இந்திய மக்களின் மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய சில விஷயங்களைச் செய்தார். வங்காளிகளின் மனதைப் புண்படுத்தியும், அதிகக் கிளர்ச்சிக்கும், குழப்பத்திற்கும் காரணமாயு

மிருந்துவந்த வங்காளப் பிரிவினைரை ரத்து செய்து விட்டார். இந்தியர்களின் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்திற்காக ஐம்பது லக்ஷம் ரூபாய்கள் அளித்தார். அதுவரையிலும் இந்தியாவுக்குக் கல்கத்தா தலைநகரமாக இருந்து வந்ததை மாற்றி டில்லி நகரையே இந்தியாவின் தலைநகர மாக்கிவிட்டார்.

ஹார்டிஞ்சு பிரபுவின் பொறுமையும், பெருமையும் :- ஹார்டிஞ்சு பிரபு இந்தியர்களிடம் அன்பு பாராட்டி வந்தா ரென்று சொன்னே மல்லவா? அது மாத்திரமல்ல. அவர் பொறுமையும், பெருமையும் குடி கொண்டவர். ஒரு சமயம் விஷமி ஒருவன் அவர்மீது வெடிகுண்டு வீசினன். தெய்வச் செயலாக அந்தக் குறி தவறிவிட்டது. ஹார்டிஞ்சு பிரபு உயிர்தப்பினர். ஆனல் அவர் விஷமியின்மீது கோபங்கொள்ளாது பொறுமையோடு இருந்து இந்தியர்களிடம் தாம் காட்டிவந்த விசுவாசத்தை முன்னிலும் அதிகமாகப் பாராட்டி வந்தார்.

மேலும், பல சந்தர்ப்பங்களில் அவர் இந்தியர்களுக்கு ஆதரவளித்திருக்கிறர். நமது இந்திய சகோதரர்களில் பலர், தங்களுடைய பிழைப்பின் நிமித்தம் அயல் நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவ்வாறு சென்றிருப்பவர்களில் பலர் தென் ஆப்ரிக்காவிலுள்ள நெட்டால், கேப் பிரதேசம் முதலிய இடங்களில்குடியேறி இருக்கின்றனர். ஹார்டிஞ்சு பிரபு இந்தியாவில் கவர்னர் ஜனரலாக இருந்த காலத்தில் தென்

ஆப்ரிக்காவில் இந்தியர்களின் நலத்தையும், சுகத்தையும் பாதிக்கும்படியான சட்டங்கள் அந் நாட்டுச் சர்க்காரால் செய்யப்பட்டன. அங்கே வசித்துவந்த இந்தியர்கள் இந்தச் சட்டங்களை எதிர்த்து மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் போராடிவந்தனர். ஹார்டிஞ்சு பிரபு இந்தப் போராட்டத்தை ஆதரித்துத் தென் ஆப்ரிக்காத்துரைத்தனத்தாரின் நடவடிக்கைகளைக் கண்டித்தார். இதன்பயனாக அந்தச் சட்டங்களால் உண்டாக இருந்த இடையூறுகள் அகன்றன.

மகா யுத்தம் :—ஹார்டிஞ்சு பிரபு கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில் மற்றொரு பெரிய உலக நிகழ்ச்சி நடைபெற்றது ஐரோப்பாவில் 1914-ல் ஒரு பெரிய யுத்தம் தொடங்கியது. 1918-ம் வருஷம் நவம்பர் மாதம்வரையில் இந்தயுத்தம் வெகு தீவிரமாக நடைபெற்றது. இந்த யுத்தத்தில் முதலில் ஐரோப்பிய நாடுகள் எல்லாம் கலந்துகொண்டன. யுத்தம் நடைபெற்றுவந்த காலத்தில் நாளடைவில் அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களும் கலந்து கொண்டன. எனவே ஐரோப்பிய மகாயுத்தமாக ஆரம்பித்தது உலக மகாயுத்தமாக மாறிற்று. ஜெர்மானியர் பெல்ஜியம் போன்ற பல சிறிய இராஜ்யங்களின் சுதந்தரத்தை அழிக்க முயன்றதால் போரில் இங்கிலாந்தும், அதன் கூட்டுக் கக்ஷியினரான பிரான்ஸும் யுத்தத்தில் ஈடுபட நேரிட்டது.

இந்த மகா யுத்தத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ் இத்தாலி—இவை ஒன்றுகூடி நேசக் கக்ஷியின

ரென்று ஒரு பக்கமும், ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி—இவை ஒன்று சேர்ந்த எதிர்க்கக்ஷியுமாகப் போர் நடத்தின. யுத்தம் நடைபெற்று வருகையில் ஜெர்மானியர் யுத்தத்தில் ஈடுபடாத ஜனங்களை இம்சித்தும், பிரயாணிகள் சென்று வந்த கப்பல்களை மூழ்க்கியும் அக்கிரமங்கள் செய்து வந்தபடியால் அச்செயல்களைக் கண்டித்து அமெரிக்காவும் ஜெர்மனிக்கு விரோதமாகப் போரில் ஈடுபட நேரிட்டது.

ஐரோப்பாவில் போர் தொடங்கியதும் இந்தியர்கள் பல்லாயிரக் கணக்காகச் சேனையில் சேர்ந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்காகவும், உலகத்திலுள்ள சிறியதேசங்களின் சுதந்தரப் பாதுகாப்புக்காகவும் தமது உயிரைக் கொடுக்க முன் வந்தனர். சுதேச மன்னர்களும், ஜனங்களும் ஏராளமான பொருளுதவி செய்தனர். இவை எல்லாம் கண்ட ஆங்கிலேயர் மனமகிழ்ந்து இந்தியர்களின் பேருதவியைப் பாராட்டினர். பல்லாயிரக் கணக்கான இந்திய வீரர்கள் பிரான்சு தேசத்தில் ஜெர்மானியர் செய்து வந்த கோரயுத்தத்தில் தமதுவீரச் செயல்களாலும், தங்கள் நல்லுயிரீந்தும் அவர்கள் முன்னேறி வந்ததைத் தடுத்து யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்கள்.

நான்கு வருஷங்களுக்கு மேல் யுத்தம் நடைபெற்றது. நேசக் கக்ஷியாரின் திடமான முறைகளினால் ஜெர்மனியில் உணவுப் பொருள்களுக்கும் பஞ்சம் ஏற்பட்டது. அங்கு பண நெருக்கடியும் உண்டாயிற்று. ஜெர்மனியில் சண்டையை நிறுத்திச் சமாதா

னத்தை நாடிய ஒரு பெரும் புரட்சி பலத்து வந்தது. இவைகளால் ஜெர்மன் சக்கரவர்த்தியான கெய்ஸர் தமது பதவியைத் துறந்து நாடு கடந்தார்.

ஆங்கிலேயர் ஜயமடைந்தனர். ஜெர்மானியர் சரணமடைந்து, சமாதானம் கோரினர்கள். பிரான்ஸ் தேசத்திலுள்ள வெர்ஸேல்ஸ் நகரில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இந்தச் சமாதான உடன்படிக்கையின் பலனுகச் சர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதுஸ்விட்ஸர் லந்து தேசத்திலிருக்கும் ஜினீவாவில் இருக்கிறது. உலகத்தில் யுத்தங்களை ஒழித்துச் சமாதான வழியி லேயே பற்பல நாட்டினருள்ளிருக்கும் மனஸ்தா பங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தியரின் சுதந்தரக் கிளர்ச்சி:—யுத்தம் நடை பெற்று வந்த காலத்தில் இந்தியர் தமது தேசத்திற் குச் சுதந்தரம் கொடுக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். சிறிய தேசங்களின் விடுதலைக்காகப் போர் தொடங்கப்பட்டபடியால் நம் நாட்டிற்கும் சுதந்தரம் அளிக்கவேண்டும் என்னும் உணர்ச்சி அதிகரித்தது.

அப்பியாசம்

1. டில்லி தர்பார் எதற்காக நடத்தப்பட்டது?

2. ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி முடிசூட்டிக் கொண்ட காலத்தில் இந்தியர்களிடம் அன்பு காட்டிய விதங்களைக் கூறுக.

3. ஹார்டிஞ்சு பிரபு பொறுமையும், பெருமையும் உடையவரென்பதற்கு உதாரணங்கள் கூறிக.

4. ஐரோப்பிய மகாயுத்தம் ஏன் தொடங்கப் பட்டது?

5. மகா யுத்தத்தில் இந்தியர் கலந்துகொண்டதற்குக் காரணங்களையும், கலந்துகொண்ட விதத்தையும் கூறுக.

6. மகா யுத்தத்தின் பலன்கள் யாவை?

7. இந்தியாவில் ஏன் சுதந்தரக் கிளர்ச்சி அதிகமாயிற்று?

---

15. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

செம்ஸ் போர்டு பிரபு (1915—1921)

ஹார்டிஞ்சுபிரபு 1916-ல் தமது பதவியிலிருந்து விலகி இங்கிலாந்து சென்றார். அவருக்குப் பின்னர் செம்ஸ் போர்டு பிரபு வைஸ்ராயாக வந்தார். இவர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் ஐரோப்பிய யுத்தம் வெகு தீவிரமாக நடை பெற்று வந்தது.



31. செம்ஸ்போர்டு

ஆப்கன் யுத்தம் :-ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்த பின்னர் ஆப்கானியரோடு சிறிய யுத்தமொன்று 1919-ல்நடைபெற்றது. ஆப்கா

னிய அமீரான அப்துர் ரஹிமான் இறந்துவிட்டார். அவருடைய மகன் அமானுல்லா பட்டத்திற்கு வந்தார். அக்காலத்தில் இந்தியாவில் அரசியல் கிளர்ச்சி நடைபெற்று வந்தது. பஞ்சாப்பில் குழப்பங்களும் ஏற்பட்டன. முகம்மதியர்களும் இதில் தீவிரமாகக் கலந்து கொண்டிருந்தனர். இச் சந்தர்ப்பத்தில் படையெடுத்தால் ஆங்கிலேயரைத் தோற்கடித்து விடலாமென்று நினைத்து அமானுல்லா போர் தொடங்கினர். ஆனல் அவர் தோல்வி யடைந்தார். அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர் அமீருக்கு வருஷ வாரியில் கொடுத்துவந்த தொகை நிறுத்தப்பட்டது.

சுய ஆட்சிக் கிளர்ச்சி :—யுத்தம் ஆரம்பமாவதற்கு வெகுகாலம் முன்னரே இந்தியர்கள் தங்கள் தேச பரிபாலனத்தில் தங்களுக்கு அதிகாரம் வேண்டுமென்னும் கிளர்ச்சியை நடத்தி வந்தார்கள்.

யுத்தம் ஆரம்பித்த காலத்தில் ஆங்கிலப் பிரமுகர்கள் தங்கள் நோக்கம் சிறிய தேசங்களின் விடுதலையே என்று பேசினர்கள். இதனல் இந்தியர்கள் தங்கள் தேசத்திற்கும் விடுதலை வேண்டும் என்று தீவிரமாகக் கிளர்ச்சிசெய்தார்கள். இந்தக் கிளர்ச்சிக்குச் சிறந்த மேதாவியும், இந்தியர் போற்றி வந்த மாபெரும் தலைவருமான லோகமான்ய பாலகங்காதர திலகர் பெருமானும், இந்தியாவுக்காக அருந்தொண்டாற்றி வந்த அன்னிபெஸன்ட் அம்மையாரும் தலைமை வகித்து நடத்தி வந்தார்கள்.

அது சமயம் இந்தியா காரியதரிசியாகப் பார்லி மெண்டில் வீற்றிருந்தவர் எட்வின் சாம்யுவல் மாண் டேகு என்பவர். அவர் இந்திய விடுதலையில் நம் பிக்கை கொண்ட வர். அவர் 1917-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி யன்று பார்லி மெண்டு சபையில் ஒருபிரசங்கம் செய்தார். அதில் இந்தியருக்குப் பொருப்பாட்சி யைக் கொடுப் பதே ஆங்கிலே யர் கொண்டிருக் கும் நோக்கம் என் பதை அறிவித் தார்.

32. அன்னி பெஸன்ட்

இந்த அறிக்கையை யொட்டி இந்தியர்களின் கோரிக்கையை நேரில் விசாரித்துத் தெரிந்துகொள் வதற்காக மாண்டேகுவும், செம்ஸ்போர்டும் இந்தியா வில் சுற்றுப் பிரயாணம் செய்து இந்தியப் பிரமுகர் களை நேரில்கண்டு பேசினர்கள். இதன்பயனுக அவர் கள் ஒரு திட்டத்தைத் தயார் செய்து, அதற்குப் பார்லிமெண்டின் அனுமதியைப் பெற்றனர். இந்தத் திட்டத்தின்படிக்கு ஏற்பட்ட மாறுதல்களுக்குத்

தான் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்று பெயர்.

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்:—இந்தச் சீர்திருத்தங்களின் பலனாகக் கவர்னர் ஜனரலின் சட்டசபை இரண்டு பிரிவுகளாக்கப்பட்டது. சாதாரண சபைக்கு 'லெஜிஸ்லேடிவ் அஸெம்ப்லி' (சட்ட சபை) என்றும், மேற் சபைக்கு 'கௌன்சில் ஆப் ஸ்டேட்' (அரசாங்க சபை) என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. இந்தச் சபைகளின் அங்கத்தினர்



33. டில்லி அஸெம்ப்லிக் கூடம்
(By Courtesy of the Indian state Railways)

களில் பெரும்பாலோர் பொது ஜனங்களாலும், பொதுஜன ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். கவர்னர் ஜனரலின் நிர்வாக சபையில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ஆனால் நிர்வாக சபையின் அமைப்பில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. மாகாணங்களில் சட்ட

சபைகள் பெரிதாக்கப்பட்டன. பொது ஜனங்களின் பிரதிநிதிகளே இச்சபைகளிலும் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்றனர். மாகாண அரசியல் நிர்வாகம் இரண்டு பிரிவுகளாகச் செய்யப்பட்டன. ஒன்று நிர்வாக அங்கத்தினர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டது இந்த நிர்வாக அதிகாரிகள் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள். வரி, வரவு செலவு, நியாயம், கோர்ட்டுகள், போலீஸ் முதலிய இலாக்காக்கள் இவர்கள் வசமிருந்தன மற்றொரு பாகம் மந்திரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த மந்திரிகளைக் கவர்னர், பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களிலிருந்து நியமிப்பார். இவர்கள் வசம் கலால், கல்வி, கூட்டுறவு, விவசாயம் முதலிய இலாக்காக்கள் கொடுக்கப்பட்டன.

மாகாணங்களில் இந்த ஏற்பாட்டின் பிரகாரம் நிர்வாகம் இரண்டு பங்கு ஆகியதால் இதை இரட்டை ஆட்சி என்று அழைப்பது வழக்கம். இந்தியர்களுக்கு அரசியல் நிர்வாகத்தில் அனுபவம் ஏற்படுமாறு பழக்கவேண்டுமென்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கமென்று அதைக் கொண்டுவந்தவர்கள் கூறினார்கள்.

இந்தச் சீர்திருத்தங்கள் போதா வென்றும் பூரண அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும் வாதித்துத் தீவிரமான கிளர்ச்சியை இந்தியர் செய்யலாயினர். இந்த நிலைமையில் செம்ஸ்போர்டு பிரபு தமது நாடு திரும்பினார். அவருக்குப்பின் ரீடிங் பிரபு கவர்னர் ஜனரலாக வந்தார்.

அப்பியாசம்

1. சுய ஆட்சிக் கிளர்ச்சி அதிகமாகியதேன்? அதை நடத்தி வந்தவர்கள் யார்?

2. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்பவை அவ்வாறு அழைக்கப்படுவதேன்?

3. மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் இந்திய மாகாண அரசாங்கங்களில் எவ்வித மாறுதல்களை உண்டாக்கின?

4. இரட்டை ஆட்சி என்பது என்ன? விளக்குக.

5. இரட்டை ஆட்சியை ஏற்படுத்தியதன் நோக்கம் என்ன?

---

16. இந்தியத் தேசீய இயக்கம்

இந்தியாவின் பரிபாலனத்தை விக்டோரியா மஹாராணியார் 1858-ல் ஏற்றுக்கொண்டு வெளியிட்ட அறிக்கையில் இந்தியர்கள் இந்திய அரசாங்க நடவடிக்கைகளில் ஜாதி பேதமின்றிக் கலந்துகொள்வதே தமது நோக்கம் என்று அறிவித்திருந்தார் அல்லவா? இந்த அறிக்கையைக் கண்டதும் இந்தியர்களுக்குத் திருப்தியும், நம்பிக்கையும் ஏற்பட்டது ஒரே ஆட்சியின் கீழ் இந்தியா முற்றிலும் கொண்டு வரப்பட்டுக், கல்வித் தேர்ச்சியும், நவீன சௌகரியங்களும், பிற நாடுகளுடன் அதிகமான சம்பந்தமும் ஏற்பட்ட பின்னர் மக்களுக்குச் சுதந்தர உணர்ச்சியும் ஏற்பட்டது. இந்தியாவில் வாழும் யாவரும் இந்தியர்.

என்றும் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த சகோதரர்களைப் போல் ஒரு தேசத்தில் ஜனித்த சகோதரர்களென்றும், ஜனங்கள் உணர ஆரம்பித்தனர். இதனால் தேசீய உணர்ச்சி வளர்ந்தது.

நாளடைவில் பல பிரமுகர்கள் ஒன்று கூடிப் பம்பாயில் கி. பி. 1885-ல் இந்திய தேசீய காங்கிரஸ் என்னும் சபையை ஸ்தாபித்தனர். இம் மகாசபை ஆண்டு தோறும் இந்தியாவின் பற்பல பாகங்களில் கூடி நமது மக்களின் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்குமான தீர்மானங்களைச் செய்து வந்தது இதன்பலனாகவே அவ்வப்போது சட்டசபை அமைப்புகள் மாற்றப்பட்டு ஜனப் பிரதிநிதிகள் அச் சபைகளில் அதிகரிக்கப்பட்டு வந்தனர். இந்த விவரங்களை முன்பாடங்களில் ஆங்காங்கே கவனித்து வந்தோம். மேலும் உத்தியோகங்களில் பல, இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன.

ஆனால் 1905-ல் கர்ஸன் பிரபு வங்காளப் பிரிவினை செய்ததன் பயனாகச் சுய ஆட்சிக் கிளர்ச்சி அதிகமாயிற்று என்றும், ஆங்கிலேயர் மீது விரோத பாவம் உண்டாயிற்று என்றும் கவனித்தோம். இதன் பின்னர் தீவிர வாதிகள் அரசியல் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த முயன்றனர். நிதானமாகச் செல்லவேண்டும் என்னும் மிதவாதிகளும் தோன்றினர். இதனால் காங்கிரஸ் சபையில் இரண்டு கக்ஷிகள் தோன்றி, 1908-ல் சூரத் நகரத்தில் அம் மகாசபை கூடிய காலத்தில் பிளவு ஏற்பட்டது. தீவிரவாதிகள் காங்கிரஸிலிருந்து விலகி நின்றனர்.

மகா யுத்தம் ஆரம்பித்த பின்னர் இந்தியர்களுக்குச் சுயஆட்சி சீக்கிரத்தில் கிடைக்கும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டதல்லவா? இதனல் கிளர்ச்சியும் பலத்ததுஎன்று முன் பாடத்தில் கவனித்தோம். இச் சந்தர்ப்பத்தில் தீவிரவாதிகள் காங்கிரஸில் சேர்ந்து அதைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். பல இடங்களில் குழப்பங்கள்நடந்தன. துரைத்தனத்தாரும் கடினமான முறைகளைக் கையாண்டு அடக்கி வந்தனர். பஞ்சாப்பில் கூட்டங்களை அடக்கும் போது உயிர்ச் சேதமும் நேரிட்டது.

34. மகாத்மா காந்தி

எனினும் கிளர்ச்சி மாத்திரம் ஓய்ந்தபாடில்லை. மாகாத்மா காந்தி அவர்கள் குடிகளின் தலைவராக வந்து துரைத்தனத்தாரோடு ஒத்துழைக்கக் கூடாதென்றும், ஜனங்கள் ஒற்றுமையாய் இருக்கவேண்டும் என்றும் போதித்தார். இச் சந்தர்ப்பத்தில் கவர்னர் ஜனரலாக வந்த ரீடிங் பிரபு (1921-1926 இதை அடக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். காந்தியடிகள் சிறைப்படுத்தப்பட்டார்.

பிறகு காங்கிரஸில் புதியகக்ஷியொன்று தோன்றிற்று. இதற்கு 'ஸ்வராஜ்யக் கட்சி' என்று பெயர். இதன் தலைவர் தேசபந்து சித்த ரஞ்சன தாஸ். இவர் சட்ட சபைகளைக் கைப்பற்றி. அங்கேயும் துரைத்தனத்தாரை எதிர்க்கவேண்டும் என்றுபோதித்தார்.

ஜனங்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்விளக்கும்பொருட்டு ஸர் ஜான் ஸைமன் என்பவரின் தலைமையில் ஒரு விசாரணை சபை ஏற்பட்டது. அது இந்தியாவெங்கும் சுற்றிவந்து இந்தியர்களுக்குச் சில அதிகாரங்களைக் கொடுக்கலாமெனச் சிபார்சு செய்தது. இந்தத் திட்டம் இந்தியர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

35. இர்வின பிரபு

1930-ல் மகாத்மா காந்தியடிகள் மறுபடியும் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித்தார். அக் காலத்தில் வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபு (1926 - '31) மகாத்மாவுடன் சமரசம் செய்து கொண்டு நாட்டில் அமைதியை நிலைநாட்ட முயன்றார்.

இந்தியர்களின் கோரிக்கைகளை விளக்கமாகத் தெரிந்துகொள்வதற்காக எல்லாக் கக்ஷிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய சர்வகக்ஷி மகாநாடு ஒன்று லண்டன் நகரில் கூட்டப்பட்டது. அதில் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை.

1931-ல் வில்லிங்டன் பிரபு (1931-36) கவர்னர் ஜனரலாக வந்தார். இவர் காலத்தில் வட்ட மேஜை மகா நாடு ஒன்று, இரண்டாவது முறையாக லண்டனில் கூடியது. அதைப்பற்றி அடுத்தபாடத்தில்படிப் போம். அது நடந்த பின்னர் இந்தியாவில் மறுபடியும் கிளர்ச்சி பலமாயிற்று. ஆயினும் வில்லிங்டன் பிரபு மிகக் கடின முறைகளைக் கையாண்டு அதை அடக்கினர். இவர் பம்பாயிலும் சென்னையிலும் கவர்னராக இருந்தவர். ஆகையால் இந்தியரின் குணதிசயங்கள் யாவும் நன்ருய் அறிந்தவர்.

36. வில்லிங்டன் பிரபு

காங்கிரஸ் மகா சபை இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் பொதுவானது. இதைத் தவிர பற்பல வகுப்பினர் தமக்கெனப் பிரத்தியேகமான சபைகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். முஸ்லீம்கள் முஸ்லீம் லீக் என்னும் சபையை ஏற்படுத்திக்கொண்டனர். இது காங்கிரஸ் கொள்கையினின்றும் மாறுபட்டதல்ல. ஆனல் இது முஸ்லீம்களுக்குவேண்டிய விசேஷ சௌகரியங்களையும், பாதுகாப்புகளையும் தேடிக்கொள்வதற்காக ஏற்பட்டது. இதுபோன்ற சபைகள் வேறு சிலவும் இருக்கின்றன. ஆனல் அவை யாவும் நாட்டின் முன்னேற்றத்தையும், சுய ஆட்சி ஸ்தாப

னத்தையும் தமது கொள்கைகளாகக் கொண்டுள்ளன.

எனவே மக்களில் எல்லோருடைய லக்ஷ்யமும் ஒன்ருய் இருந்து, தேசீயம் வளர்ந்து வந்து இருக்கிறது. நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டுவருகிறது. ஒற்றுமையைப் பயன்படுத்தி, ஸ்திரப்படுத்தப் பல அறிஞர்கள் பாடுபட்டு வருகின்ருர்கள். மக்களும், 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு.' என்னும் உண்மையை உணர்ந்து விட்டார்கள். இந்த ஒற்றுமை வேரூன்றி நாட்டின் நன்மைக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் ஆதாரமாகும்.

அப்பியாசம்

1. இந்தியர்களுக்குள் தன் நம்பிக்கையும், தேசீய உணர்ச்சியும் எதனுல் உண்டாயிற்று?

2. கர்ஸன் பிரபு காலத்தில் தீவிர தேசீய உணர்ச்சி உண்டாக எவ்வித சம்பவம் நடைபெற்றது?

3. மகா யுத்த காலத்தில் இந்தியாவில் சுய ஆட்சிக் கிளர்ச்சியை நடத்தியவர்கள் யார்? ஏன் நடத்தினுர்கள்?

4. தேசபந்து தாஸ் கொண்டிருந்த கொள்கை என்ன?

5. மகாத்மா காந்தியடிகள் தேசத்திற்குப் போதித்தது என்ன?

6. காங்கிரஸ், முஸ்லிம் லீக் முதலிய ஸ்தாபனங்களின் பொதுக் கொள்கை என்ன?

17. வட்ட மேஜை மகாநாடுகள்

மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் 1921-ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனால் அவை இந்தியர்களில் பலருக்கும் திருப்தியளிக்க வில்லை. ஆகையால் கிளர்ச்சி பலமாக நடந்து வந்தது. இந்த விஷயங்களை முன் பாடங்களில் கவனித்தோம்.

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத் திலேயே அதைக் கையாள ஆரம்பித்த பத்து வருஷங்களில் மறுபடியும் புதிய சீர்திருத்தங்கள் வழங்க வேண்டுமென்றும், எவைகையான சீர்திருத்தங்களை வழங்குவது என்பதை விசாரணையும், பரிசீலனையும் செய்ய அரசர் பெருமானே ஒரு கமிஷனை (விசாரணை சபை) ஏற்படுத்த வேண்டுமென்றும் கண்டிருந்தது. அதன் பிரகாரம் ஸர் ஜான் ஸைமன் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிஷனை அரசர் பெருமான் அமைத்தார். அதற்கு ஸைமன் கமிஷன் என்னும் பெயர் வழங்கப்பட்டது.

ஸைமன் கமிஷன் இந்தியாவின் பற்பல பாகங்களிலும் சுற்றிவந்து ஒரு யாதாஸ்தைச் சமர்ப்பித்தது. அதில் கண்ட சிபார்சுகள் இந்தியர் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கவில்லை. அதனால் ஜனங்களின் அதிருப்தி அதிகமாயிற்று. இதை உணர்ந்த இர்வின் பிரபு ஆங்கில அதிகாரிகளுக்கு உண்மை நிலைமையை விளக்கவே, அவர்கள் லண்

டன் மாநகரில் வட்டமேஜை மகாநாட்டைக் கூட்டுவ தென்று தீர்மானித்து 1931-ல் அம்மகாநாட்டைக் கூட்டினார்கள். ஆனால் அதில் காங்கிரஸ் கலந்து கொள்ள மறுத்தது.

இதன் பிறகு மகாத்மா காந்திக்கும், இர்வின் பிரபுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1932-ல் மறு படியும் வட்டமேஜை மகாநாடு கூடிற்று, இதற்குக் காங்கிரஸின் சார்பாக மகாத்மாகாந்தியும் சென்றார். இம் மகாநாட்டில் சில முடிவுகள் செய்யப்பட்டன. இம்முடிவுகளை அனுசரித்துப் பார்லிமெண்டு சபை யில் சட்டம் செய்யப்புட்டது.

இம் மகாநாடு நடைபெற்றபோது அதில் ஆங் கில நாட்டுப் பிரதம மந்திரியாயிருந்த ராம்ஸே மாக் டொனல்டு என்பவர் தலைமை வகித்தார். சட்டசபை களிலும், உத்தியோகங்களிலும் பற்பல வகுப்பின ரும் ஜாதியினரும் பெற வேண்டிய பங்கு விகிதங் கள் எவ்வளவு என்னும் விஷயமாக ஒற்றுமைப்படா மல் போகவே மாக்டொனல்டு அவர்களே இது சம் பந்தமாகத் தமது தீர்ப்பைக் கொடுத்தார். இம் மகா நாட்டு நடவடிக்கைகளில் கூறப்பட்ட ஆலோசனை களை அனுசரித்துப் புதிய சீர்திருத்தச் சட்டம் ஒன்று செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அப்பியாசம்

1. ஸைமன் கமிஷன் என்பது எதைக் குறிப்பிடும்?
2. வட்டமேஜை மகாநாடுகள் எத்தனை தடவைகள் கூட்டப்பட்டன? எவ்வெப்போது?

3. வட்ட மேஜை மகாநாட்டில் தலைமை வகித்தவர் யார்?

4. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாக யார் தீர்ப்புக் கொடுத்தது? ஏன்?

---

18. 1935-ம் வருஷத்திய அரசியல் சீர்திருத்தங்கள்

ஸைமன் கமிஷன் யாதாஸ்து சமர்ப்பித்த பின்னர் வட்டமேஜை மகாநாடுகள் கூடி அறிக்கைத் தாள்களை வெளியிட்ட விவரங்களைப் படித்தோம். இனி அவ் வறிக்கையை யொட்டிச் சட்டம் செய்யப்பட்டதையும், சட்டத்தின் விவரங்களையும் கவனிப்போம்.

பார்லிமெண்டில் சட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொது சபைப் பிரதிநிதிகளும், பிரபுக்கள் சபைப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டுக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுச் சட்டத்தின் பற்பல அம்சங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. கடைசியாக 1935-ல் அச்சட்டமும் பார்லிமெண்டு சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் பர்மா வேறாகப் பிரிக்கப்பட்டது. இந்திய அரசாங்க அமைப்பில் பின் வரும் மாறுதல்கள் செய்யப்பட்டன:—

1. இந்தியாவில் பதினெரு மாகாணங்கள் ஏற் படுத்தப்பட்டன. அதாவது சென்னை, பம்பாய். வங்காளம், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம் பஞ்சாப், அஸ்ஸாம், பீஹார், வடமேற்கு எல்லைப்



37. இந்தியா 1937.

புற மாகாணம் என்னும் பழைய மாகாணங்கள் ஒன் பதும், இவைகளோடு ஒரிஸ்ஸா, சிந்து என்னும் இரண்டு புதிய மாகாணங்களும் அமைக்கப்பட்டன.

2. இந்திய அரசாங்க நிர்வாக இலாக்காக்க ளில் இந்திய (மத்திய) சர்க்காருக்கெனச் சிலவும்,

மாகாண சர்க்காருக்கெனச் சிலவும் வெவ்வேறுகப் பிரிக்கப்பட்டன.

3. மத்திய இந்திய சர்க்காருக்குச் கொடுக்கப் பட்ட இலாக்காக்கள் சிலவும், மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டவை பலவுமாகும்.

4. கவர்னர் ஜனரல் மாகாண விஷயங்களில் தலையிடுதல் குறைக்கப்பட்டது.

5. மாகாணங்களில் நிர்வாகம் அமைச்சர் (மந்திரி) களால் நடத்தப்படவேண்டும்.

6. மந்திரிகள் சட்டசபையிலுள்ள பெரும் பான்மைக் கக்ஷியைச் சேர்ந்தவர்களாயிருப்பார். இவர்கள் சட்டசபை அங்கத்தினர்களின் நம்பிக் கையைப் பெற்றிருக்கவேண்டும். இவர்கள் அங்கத் தினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டால் தங்கள் பதவிகளிலிருந்து விலகவேண்டும். பெரும்பான்மைக் கக்ஷியின் தலைவரைக் கவர்னர் அழைத்து அவரை மந்திரி சபையை அமைக்கச் சொல்லுவார்.

7. மாகாண சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வெகுவாக எல்லா ஜனங்க ளுக்கும் கொடுக்கப்பட்டது.

8. சில மாகாணங்களில் இரண்டு சட்டசபை களும், சிலவற்றில் ஒரே சபையும் அமைக்கப் பட்டன.

9. சிறு பான்மையோரின் உரிமைகள் பாதிக் கப்பட்டாலும், அரசாங்க அமைதிக்கு ஆபத்து நேரிட்டாலும் அல்லாமல் மற்றச் சந்தர்ப்பங்களில் கவர்னர் ஜனரலும், மாகாண கவர்னர்களும் சாதா

ரணமாக மந்திரிகளின் ஆட்சி முறையில் தலையிட மாட்டார்கள். ஐரோப்பியச் சிறுவரின் கல்வி முதலிய ஒரு சில இலாகாக்கள் மாத்திரம் மந்திரிகளின் ஆதிக்கத்தில் விடப்படாமல் கவர்னரின் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன.

10. இந்திய (மத்திய) சர்க்காரில் சமஷ்டி (கூட்டுப் பேரரசு) ஏற்பாடு இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. சமஷ்டி சட்டசபைகளில் மாகாணப் பிரதிநிதிகளும், சுதேச மன்னர்களின் பிரதிநிதிகளும் அமருவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் கவர்னர் ஜனரலால் நடத்தப்படும் அவர் இரண்டு வித நிர்வாக அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளுவார் : (1) தாமாகவே சில நிர்வாக அங்கத்தினர்களை நியமித்து அவர்களிடம் சில இலாக்காக்களை விட்டுவிடுவார். (2) மத்திய சட்ட சபை அங்கத்தினர்களில் பெரும்பான்மைக் கக்ஷியிலிருந்து சில அமைச்சர்களைத் தேர்ந்துகொண்டு அவர்களிடம் மற்ற இலாக்காக்களை விட்டு விடுவார். அதாவது மத்திய சர்க்காரில் மாண்டேகு - செம்ஸ் போர்டு, சீர்திருத்தங்களின்கீழ் மாகாண சபையில் இருந்தது போல் ஏற்படும்.

ஆனால் இந்த சமஷ்டி ஏற்பாட்டை இன்னும் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. இதை ஜனங்கள் விரும்பவில்லை. சுதேச மன்னர்களிலும் பலர் விரும்பவில்லை. ஆகையால் இப்போது கவர்னர் ஜனரலாய் இருந்துவரும் லின்லித்கோ பிரபு இதை அமுலுக்

குக் கொண்டு வருவதை நிறுத்தி யிருக்கிறார். இனிப் புதியதொரு சீர்திருத்தம் வழங்குவதைக் குறித்து விவாதங்களும் நடந்து வருகின்றன.

38. லின்லித்கோ பிரபு

அரசியல் சம்பவங்கள் :—1935-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், தாம் சிம்மாசனம் ஏறிய இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெள்ளி விழாக் கொண்டாடினார். அவர் பிரஜைகளின் மீது கொண்டிருந்த கருணையைப் பாராட்டி, பிரஜைகள் அவரிடம் தமக்குள்ள விசுவாசத்தை வெளியிட்டு, இக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர். மறு வருடம் ஜனவரியில் அவர் உயிர் நீத்தார். அவருடைய புத்திரர் எட்டாம் எட்வர்டு பட்டம் பெற்றார். அவர் சிறிது காலமே அந்தப் பதவியை வகித்தார். அவர் திருமண சம்பந்தமாக அவருக்கும், இங்கிலாந்திலுள்ள மந்திரி சபையாருக்கும் அபிப்பிராயம் பேதம் ஏற்படவும் அவர் தமது அரச பதவியை வேண்டாமென்று விட்டுவிட்டார்.

அவருக்குப் பின்னர் அவருடைய இளைய சகோதரர் ஆறும் ஜார்ஜ் பட்டம் பெற்று முடிசூட்டிக் கொண்டார்.



39. ஆறும் ஜார்ஜ்

ஜெர்மனியுடன் யுத்தம் :—வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையுடன் 1914 முதல் 18 வரையில் நடந்த

ஐரோப்பிய மகா யுத்தம் முடிவடைந்ததென்று முன் பாட மொன்றில் படித்தோமல்லவா? அதில் ஜெர்மானியர் அடைந்த தோல்வியையும், நஷ்டத்தையும் சிந்தித்து எவ்வாருயினும் தமது பழைய நிலைமையை முடியுமானல் இன்னும் மேன்மையான நிலைமையைப் பெறுவதற்காக முயற்சி செய்து வந்தனர். அவர்களுடைய தலைவர் ஹிட்லர் என்பவர். இவர் அக்கம் பக்கத்திலுள்ள நாடுகள் சம்மந்தமாகப் பல துராக்கிருதமான செயல்களைச் செய்து வந்தார். ஆஸ்திரியா, செக்கோ ஸ்லொவேகிய முதலிய நாடுகளைத் தமது பலத்தாலும், மிரட்டல்களாலும் தம் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இவை யாவைக்கும் ஆங்கிலேயர் பொருத்து வந்தார்கள். ஆனல் உருசி கண்ட பூனை உறியை விடாது போல ஹிட்லர் ஜெர்மனிக்குக் கிழக்கிலிருக்கும் போலந்தையும் கைப்பற்ற எண்ணங்கொண்டனர். ஆங்கிலேயர், இனிப் பொருக்க முடியாதென்றும், ஜெர்மனி, தான் கொண்டுள்ள துர் எண்ணத்தை விட்டாலொழியப் பெரிய யுத்தம் மூளும் என்றும் தெரிவித்தார்கள். ஹிட்லர் இதற்குச் செவிசாய்த்தாரில்லை. ஜெர்மனி போலந்தின் மீது படையெடுக்கவும், இங்கிலாந்தும், பிரான்ஸும் ஜெர்மனியுடன் போர் தொடங்கின.

இந்த யுத்தம் நடைபெற்று வருகிறது. இதில் உலகத்தின் ஆதரவும் ஆசியும் ஆங்கில நாட்டினருக்கு இருந்து வருகிறது.

அப்பியாசம்

1. 1935-ம் வருஷத்தின் இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி மாகாணங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் எவை ?

2. மாகாண நிர்வாக அமைப்பை விவரிக்க.

3. சமஷ்டி என்றால் என்ன ? அது ஏன் இன்னும் ஏற்படவில்லை ?

4. புதிதாக ஏற்பட்ட மாகாணங்கள் எவை ?

5. ஆங்கிலேயர் ஜெர்மனியுடன் போர் தொடங்கியிருப்பதேன் ?

6. தற்கால மாகாண அமைப்பைக் காட்டும் படம் வரைக.

அநுபந்தம் I

முக்கிய நிகழ்ச்சிகள்

1757. பிளாஸி யுத்தம்—இருபத்து நான்கு பர்காணுக்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது.

1759. வடசர்க்கார் பிரதேசம் கிடைத்தது.

1761. மூன்றுவது பானிப்பட்டு யுத்தம். அகமத்ஷா அப்தாலி மஹாராஷ்டிரர்களைத் தோற்கடித்தார்.

1764. பக்ஸார் யுத்தம். பர்ட்வான், மித்னுபூர், சிட்டகாங்கு ஆங்கிலேயருக்குக் கிடைத்தன.

1765. அலகாபாத் உடன்படிக்கை. ஆங்கிலேயருக்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா திவானி கிடைத்தது.

1766. முதல் மைசூர் யுத்தம்.

1774. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜனரலாக நியமிக்கப்பட்டார்.

1774. முதல் மஹாராஷ்டிர யுத்தம்.

1780. இரண்டாம் மைசூர் யுத்தம்.

1786. காரன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜனரல், மூன்றுவது மைசூர் யுத்தம்.

1792. மலபார், சேலம், மதுரை கிடைத்தன.

1798. வெல்லெஸ்லி பிரபு கவர்னர்ஜனரல்பதவி ஏற்றல்.

1799. நான்காவது மைசூர் யுத்தம். திப்புவின் மரணம்.

1803. இரண்டாம் மஹாராஷ்டிர யுத்தம்.

1807. மிண்டோ பிரபு கவர்னர் ஜனரல்.

1813. ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜனரல் ; கிழக்கு இந்திய வியாபாரக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட ஏகபோக உரிமை முடிவு செய்யப்பட்டது.

1815. நேபாள யுத்தம்.

1817—18. பிண்டாரி யுத்தம்.

1823. ஆம்ஹெர்ஸட் பிரபு—முதல் பர்மா யுத்தம்.

1828. வில்லியம் பெண்டிங் பிரபு.

1834. குடகு சேர்க்கப்பட்டது.

1836. ஆக்லண்ட் பிரபு.

1838—42. முதல் ஆப்கன் யுத்தம்.

1844. சிந்து நாடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1845. முதல் சீக்கிய யுத்தம்.

1848. டெல்ஹௌஸி பரபு.

1849. இரண்டாம் சீக்கிய யுத்தம். பஞ்சாப் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1852. இரண்டாம் பர்மா யுத்தம். கீழ் பர்மா சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1853. நாகப்பூர் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1856. அயோத்தி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1856. கானிங் பிரபு.

1857. சிப்பாய்க் கலகம்.

1858. இந்தியா ஆங்கில இராணியாரின் ஆட்சியில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆங்கில முடியின் கீழ் இந்தியா

1861. இந்திய சட்டசபைகள் சட்டம் (1)

864. நில சம்பந்தமான சட்டம்

1869. மேயோ பிரபு கொலை செய்யப்பட்டார்.

1875. பெலூச்சிஸ்தானம் ஆங்கிலேயர் வசமானது.

1879—80. இரண்டாம் ஆப்கன் யுத்தம்.

1880. ஸ்தல சுய ஆட்சி ஏற்பட்டது.

1885. காங்கிரஸ் மகா சபை ஸ்தாபனம்.

1885—86. மூன்றுவது பர்மா யுத்தம்; மேல் பர்மா சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1892. இந்திய சட்டசபைகள் சட்டம். (2)

1894. எல்லைப்புறச் சண்டைகள்.

1899. வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஏற்பட்டது.

1905. வங்காளப் பிரிவினை.

1909. இந்திய சட்டசபைகள் சட்டம் (3)

1911. டில்லி தர்பார்.

1914—18. மகாயுத்தம்.

1919. பஞ்சாபில் கலவரம், இந்தியர் சுடப்பட்டது.

1920. மாண்டேகு செம்ஸ்போட்டு சீர்திருத்தச் சட்டம்.

1920—22. மகாத்மா காந்தியின் ஒற்றுமையாமை.

1928—30. ஸைமன் கமிஷ்ன் விசாரணை.

1930. முதல் வட்ட மேஜை மகாநாடு.

1931. இரண்டாம் வட்டமேஜை மகாநாடு.

1935. இந்திய துரைத்தன அமைப்புச் சட்டம் (புதிய சீர்திருத்தங்கள்.)

அநுபந்தம் II

இராஜப் பிரதிநிதிகள்.

(1)	கானிங்	பிரபு	1858—1862
(2)	எல்ஜின்	,,	1862—1863
(3)	லாரென்ஸ்	,,	1863—1869
(4)	மேயோ	,,	1869—1872
(5)	நார்த்ப்ருக்	,,	1872—1876
(6)	லிட்டன்	,,	1877—1880
)7)	ரிப்பன்	,,	1880—1884
(8)	டப்பரின்	,,	1884—1887
(9)	லான்ஸ்டௌன்	,,	1888—1893
(10)	எல்ஜின்	,,	1894—1898
(11)	கர்ஸன்	,,	1898—1905
(12)	மிண்டோ	,,	1905—1909
(13)	ஹார்டிஞ்சு	,,	1910—1916
(14)	செம்ஸ்போர்ட்	,,	1916—1921
(15)	ரீடிங்	,,	1921—1926
(68)	இர்வின்	,,	1926—1931
(17)	வில்லிங்டன்	,,	1931—1936
(18)	லின்லித்தோ	,,	1936——

அநுபந்தம் III

இந்திய துரைத்தன அமைப்பு

1920 சட்டப்படிக்கு

இந்தியா கவர்ன்மெண்டு

- கவர்னர் ஜனரல்
  - சட்ட சபைகள்
    - பொதுஜன சட்டசபை
    - ராஜாங்க சபை
  - நிர்வாக சபை

மாகாண கவர்ன்மெண்டு

- கவர்னர்
  - சட்டசபை
  - நிர்வாக சபை
    - மந்திரிகள்
    - நிர்வாக உத்தியோகஸ்தர்கள்
  - உயர்தர நீதிஸ்தலம்

1935 சட்டப்படிக்கு

இந்தியா கவர்ன்மெண்டு

- கவர்னர் ஜனரல் (சமஷ்டி)
  - சட்ட சபைகள்
    - சமஷ்டி சட்டசபை
    - ராஜாங்க சபை
  - நிர்வாக சபை
    - மந்திரிகள்
    - நிர்வாக உத்தியோகஸ்தர்கள்
  - உயர்தர சமஷ்டி நீதிஸ்தலம்

மாகாண கவர்ன்மெண்டு

- கவர்னர்
  - சட்டசபை
    - சில மாகாணங்களில்
      - மேல்சபை
      - பொதுஜன சபை
  - மந்திரிகள்
  - உயர்தர நீதிஸ்தலம்

அநுபந்தம் IV

மாகாணச் சட்டசபைகள் அமைப்பு

மாகாணம்.	தலைநகரம்.	பொது ஜன சட்ட சபை அங்கத்தினர்கள்.	மேல் சபை.
சென்னை	சென்னை	215	54முதல்56வரை
பம்பாய்	பம்பாய்	175	29 ,, 30 ,,
வங்காளம்	கல்கத்தா	250	63 ,, 65 ,,
ஐக்கிய மாகாணங்கள்	லக்னோ	228	58 ,, 60 ,,
பஞ்சாப்	லாகூர்	175	இல்லை
பீஹார்	பாட்னா	152	29முதல்30வரை
மத்திய மாகாணம்	நாகப்பூர்	112	இல்லை
அஸ்ஸாம்	ஷில்லாங்கு	108	21முதல்22வரை
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்	பெஷாவர்	50	இல்லை
ஒரிஸ்ஸா	கட்டாக்	60	இல்லை
சிந்து	கராச்சி	60	இல்லை

அநுபந்தம் V

இந்தியாவில் பிரிட்டிஷ் இராஜ்ய வளர்ச்சி

இடம்	வருஷம்	யாரால் அல்லது எவ்விதம் சேர்க்கப்பட்டது.
சூரத்	1612	முகலாய சக்கரவர்த்தியிட மிருந்து பெற்றது.
சென்னை	1640	சந்திரகிரி அரசரிடம் வாங்கியது.
பம்பாய்	1662	ஆங்கில மன்னர் இரண்டாம் சார்லஸ் கொடுத்தது.
கல்கத்தா	1690	விலைக்கு வாங்கியது.
இருபத்துநான்கு பர்கானுக்கள்	1757	பிளாஸி யுத்தத்தின் பலனாக மீர்ஜாபார் கொடுத்தது.
வடசர்க்கார்	1759	பிரெஞ்சுக்காரரோடு போர் புரிந்து பெற்றது.
பர்ட்வான் மித்னூர் சிட்டகாங்	1764	பக்ஸார் யுத்தத்தில் வெற்றி பெற்றுச் சம்பாதித்தது.
வங்காளம் பீஹார் ஒரிஸ்ஸா	1765	அலகாபாத் உடன் படிக்கைப் படிக்குத் திவானி உரிமை.
மலையாளம் சேலம் மதுரை	1792	மூன்ருவது மைசூர் யுத்தத்தின் பலனாக.

இடம்	வருஷம்	யாரால் அல்லது எவ்விதம் சேர்க்கப்பட்டது.
கடப்பை கர்நூல் அனந்தபுரம் பல்லாரி	1801	நைஜாம் துணைபுரி உடன் படிக்கையை ஒப்புக்கொண்டு கொடுத்தது.
கன்னடம் கோயம்பத்தூர்	1801	நான்காவது மைசூர் யுத்த முடிவில் கிடைத்தது.
கர்னுடகம்	1801	கர்னுடக நவாப்புக்கு உபகாரச் சம்பளப் கொடுத்து வெல்லெஸ்லி சேர்த்துக்கொண்டார்.
தஞ்சாவூர்	1801	வெல்லெஸ்லி பிரபு தஞ்சை மன்னருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துச் சேர்த்துக் கொண்டது.
தோவாப்பு ரோகில்கண்ட்	1801	அயோத்தி நவாப்புடன் துணை புரி உடன்படிக்கையினுல்.
குஜரத் ஓரிஸ்ஸா	1802	இரண்டாவது மைசூர் யுத்த காலத்தில் பிடித்துக்கொண்டது.
ஸிம்லா ஷில்லாங்கு	1815	நேபாள யுத்த முடிவில்
பூனு	1817	நான்காவது மஹாராஷ்டிர யுத்தத்தினுல் கிடைத்தது.
அஸ்ஸாம் ஆரக்கான் டென்னுஸரிம்	1826	முதல் பர்மா யுத்த முடிவில்.

இடம்	வருஷம்	யாரால் அல்லது எவ்விதம் சேர்க்கப்பட்டது.
குடகு	1833	குடகு மன்னரின் கொடுங்கோலை ஒழித்துச் சேர்த்துக் கொண்டது.
சிந்து	1843	சிந்து அமீர்கள் மியானி ஹைதராபாத் என்னுமிடங்களில் தோற்கடிக்கப் பட்டு சேர்த்துக் கொள்ளப் பட்டது.
பஞ்சாப்	1849	இரண்டாம் சீக்கிய யுத்தமுடிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டது.
கீழ்பர்மா	1852	இரண்டாம் பர்மா யுத்த முடிவில்.
நாகப்பூர் ஜான்ஸி ஸதாரா	1853	லாப்ஸ் முறைப்படிக்கு.
அயோத்தி	1856	நவாப் சரியாகப் பரிபாலிக்காதலால் அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து டெல்ஹௌஸி சேர்த்துக் கொண்டது.
பாலூச்சிஸ்தானம்	1875	பலூச்சிஸ்தான சுதேச மன்னர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு சேர்த்தது.
பர்மா	1886	மூன்றும் பர்மா யுத்த முடிவில்

2223